திருக்கோணமலை

இ.கி.ச. ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரி

(தேசிய பாடசாலை)

அருள்மிகு சித்தி விநாயகர் ஆலய

# கும்பாபிஷேக மலர்

பிலவ வருடம் கார்த்திகை 15ஆம் நாள் புதன்கிழமை 01.12.2021



வெளியீடு : கும்பாபிஷேக திருப்பணிக்குழு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

கணபதி துணை

திருக்கோணமலை

இராம கிருஷ்ண சங்க ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக்கல்லூரி

(தேசிய பாடசாலை)

அருள்மிகு சித்தி விநாயகர் ஆலய

# கும்பாபிஷேக மலர்



பிலவ வருடம் கார்த்திகை மாதம் 15ம் நாள் புதன்கிழமை

01.12.2021

இந்து மன்றம்

தி/இ.கி.ச ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக்கல்லூரி

(தேசிய பாடசாலை)

திருக்கோணமலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்



எக்கணமும் எம்முடன் துணையானகணபதியே
முக்கணங்களின் முதல்வன் ஈசனின் தலைமகனே
எக்காலமும் அருளினைஎல்லையின்றிசொறிந்தவனே
முக்காலமும் எங்களின் வழிகாட்டிஎனவணங்குகிறோம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பிரதிஷ்டை செய்யப்பட்ட மூலவிக்ரகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளடக்கம்


| விடயம் | பக்கம் |
|---|---|
| 01) ஆசிச் செய்தி | 1 - 5 |
| 02) வாழ்த்துச் செய்தி | 6 - 12 |
| 03) ஆலய வரலாறு | 13 |
| 04) பொறுப்பாசிரியரிடமிருந்து | 21 |
| 05) பாடசாலை மாணவர்கள் அறிந்து கொள்ள வேண்டிய இந்துமத ஒழுக்கக் கோட்பாடுகள் | 23 |
| 06) விநாயகர் வழிபாடு | 32 |
| 07) ஆடி மாதத்தின் சிறப்பு | 35 |
| 08) சங்கடம் தீர்க்கும் சங்கடகரன் | 37 |
| 09) பிள்ளையார் சுழிபோட்டு | 39 |
| 10) பன்குளம் பறையன்குளம் - எல்லைக்காளி அம்மன் கோவில் | 41 |
| 11) சைவ வாழ்க்கையில் விரதங்கள் | 43 |
| 12) சுவாமி விபுலானந்தரின் ஆன்மீகமும் இசைத்தமிழும் | 46 |
| 13) விநாயகர் வழிபாடும் விசேட தினங்களும் | 49 |
| 14) கார்த்திகை நோன்பும் கார்த்திகை விளக்கொளியும் | 50 |
| 15) இந்து சமய வழிபாடுளும் அறிவியலும் | 53 |
| 16) ஒரு கும்பாபிஷேக தரிசனம் எவ்வளவு புண்ணியம் அளிக்கும் தெரியுமா? | 56 |
| 17) கணங்களின் அதிபதி கணபதியைத்தொழுவோம் | 60 |
| 18) சங்கடஹர சதுர்த்தி விரதம் | 64 |
| 19) விநாயகத் திருவுருவங்கள் | 66 |
| 20) கொரோனா கால சமய வாழ்க்கை | 68 |
| 21) ஆலய வழிபாடு | 69 |
| 22) அறுகம் புல்லின் மகிமை | 72 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிச் செய்தி

திருக்கோணமலை அருள் மிகு சித்தி விநாயகர் கோவில் 3வது புனராவர்த்தன கும்பாபிஷேகம் நடைபெற இருப்பதாக அறிந்தேன். இக் கோவில் கோணேஸ்வரா இந்துக் கல்லூரி வளாகத்திலேயே அமைந்திருப்பது ஒரு சிறப்பு. மாணவர்களுக்கு ஆன்மீக ஈடுபாட்டை வளர்ப்பதற்கு இப்படிப்பட்ட அமைப்பு உதவியாக இருக்கும். பொதுவாக மாணவர்கள் பிள்ளையார் மீது பக்தி செலுத்துவதை நாங்கள் பார்த்திருக்கின்றோம். அவர்கள் பாடசாலைக்குப் போகும் போது வழியில் உள்ள பிள்ளையாருக்கு வழிபாடு செய்வது வழக்கம். கோணேஸ்வரா இந்துக் கல்லூரி மாணவர்களுக்கு அருள் பாலிக்க விநாயகர் கல்லூரியின் உள்ளேயே வீற்றிருப்பது ஒரு நல்ல ஏற்பாடு. இதை தரிசனமாகக் கண்டு, ஸ்தாபித்தவர் சுவாமி விபுலானந்தர் அவர்கள்.

கும்பாபிஷேகம் என்பது கோவிலில் உள்ள தெய்வத்தின் சாந்தியத்தை வளர்ப்பதற்காக செய்யப்படும் ஒரு நிகழ்வாகும். சிறப்புப் பூஜைகள் செய்து வேதமந்திரங்களால் தூய்மை செய்யப்பட்ட நீரால் அபிஷேகம் செய்யப்படுவது இதில் முக்கிய அம்சமாகும். மேலும் பல விதமான ஹோமங்கள் செய்யப்பட்டு, கடவுளுக்கு ஆஹுதி கொடுக்கப்படும். இப்படிப்பட்ட வைபவம் ஆண்டு தோறும் நடைபெறுவதில்லை. சுமார் 12 அண்டுகளுக்கு ஒரு முறை தான் நடைபெறும். இதைக் கண்டு களிப்பவர்கள் புண்ணியவான்கள் என்றே சொல்லலாம்.

கும்பாபிஷேகத்தை முன்னிட்டு ஒரு மலர் வெளியிடப்படுகிறது. மலரில் கோவில் பற்றிய பல விவரங்கள் இடம்பெறும். கும்பாபிஷேகத்தைப் பார்ப்பவர் களுக்கும் பாராதவர்களுக்கும் இம்மலர் உபயோகமாகும். கும்பாபிஷேகம் செவ்வனே நிகழவும், மலர் சிறப்பாக அமையவும் எல்லாம் வல்ல விநாயகப் பெருமானை வேண்டுகின்றேன்.

**சுவாமி அஷராத்மானந்த**
**(தலைவர்)**
**இராமகிருஸ்ணமிஷன் - கொழும்பு**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிச் செய்தி

அன்புள்ளவர்களிற்கு .....

திருக்கோணமலை இந்துக்கல்லூரி இன்று தனது 125ஆம் ஆண்டை அடைந்திருப்பதையிட்டு மகிழ்ச்சி அடைகின்றோம். அருளாளர்களால் பாடல் பெற்ற கோணமாமலையில் கல்விக்காக 125 ஆண்டுகள் பணியாற்றியமை வரலாற்றின் அடையாளமாகும். யாழ்நூலைத் தந்த சுவாமிவிபுலானந்தரால் இக்கல்லூரி ஆரம்பிக்கப்பட்டு இன்று வளர்ச்சியடைந்திருப்பது அருளாளர்களின் சிறப்பாகும். கல்விக்கு அடையாளமாக விளங்கும் விநாயகப்பெருமானுக்கு ஆலயம் அமைத்து இன்று கும்பாபிஷேகம் நடைபெறுவது இப் பாடசாலைக்கும் கல்வி பயிலும் மாணவர்களிற்கும் ஆசிரியர் அதிபர் போன்றவர்களிற்கும் ஆன்மீக சிந்தனையை ஏற்படுத்துதலாகும். இக் கல்லூரி வளர்ச்சியடைந்து நல்ல மாணவர்களை உருவாக்க இறையருளை பிரார்த்திக்கின்றோம்.

என்றும் வேண்டும்
இன்ப அன்பு.

இரண்டாவது குரு
மஹா சந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பராமாசாரிய சுவாமிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிச் செய்தி

கிழக்கிலங்கையில் புகழ் பெற்ற பாடசாலைகளில் ஒன்றான தி/இ.கி.ச ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரியில் சுவாமி விபுலானந்தரினால் ஸ்தாபிக்கப்பட்ட அருள்மிகு சித்தி விநாயர் ஆலயம் உள்ளது. இதனைப் புனராவர்த்தனம் செய்து 1997ம் ஆண்டு முதலாவது மஹா கும்பாபிஷேகம் நிகழ்ந்ததாகவும் இவ்வருடம் 3வது புனராவர்த்தன கும்பாபிஷேகம் நடைபெறவுள்ளதாகவும் அறிகிறோம். இந்நிகழ்வை முன்னிட்டு வெளியிடவுள்ள கும்பாபிஷேக சிறப்பு மலருக்கு வாழ்த்துரை வழங்குவதில் மகிழ்ச்சி அடைகின்றேன்.

சுவாமி விவேகானந்தர் "நம் நாடு இன்னும் வாழ்ந்து வருகிறது. ஏனென்றால், அது கடவுள், மதம், மற்றும் ஆன்மீக கருவூலங்களைக் கைவிடாமல் பிடித்துக் கொண்டிருக்கின்றது" என்கிறார்.

இதற்கேற்ப இவ் ஆலயத்தின் பூர்வீகம், கீர்த்தி, மகிமை என்பவற்றை நமது எதிர்கால சந்ததியினரும் அறிந்து கொள்ளும் வகையில் கும்பாபிஷேக மலரை வெளியிட பாடசாலை நிர்வாகத்தினர் தீர்மானித்துள்ளமை வரவேற்கத்தக்கதாகும். அதுபோலவே, நமது ஆஸ்ரமத்தின் ஆன்மீக நூல்களை மாணவர்களுக்கும் பொது மக்களுக்கும் கொண்டு போய் சேர்ப்பது உண்மையான ஆன்மீகப் பணியாக அமையும். அதற்கு இந்தக் கோயில் அடிகோலும் என நம்புகிறோம்.

நாட்டில் நிலவும் இக்கட்டான சூழ்நிலையில் இம்மலர் வெளியீட்டுப் பணிகள் செவ்வனே நடைபெற, மலர் வெளியீட்டுடன் தொடர்புள்ள அனைவருக்கும் பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணர், அன்னை ஸ்ரீ சாரதாதேவியார், சுவாமி விவேகானந்தர் ஆகிய தெய்வத் திருமூவரின் நல்லாசிகளை வேண்டிக் கொள்கின்றோம்.

நன்றி

**என்றும் இறைபணியில்,**

சுவாமி தக்ஷஜானந்தர்
பொது முகாமையாளர்
**இரமகிருஷ்ணமிஷன்**
**மட்டக்களப்பு.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிச் செய்தி

ஈழ மணி திருநாட்டில் திருமூலரால் சிவபூமி எனப் போற்றப்பட்ட திருகோணமலையின் நகரில் கல்விச் செல்வம் கொழிக்கும் இ.கி.ச.கோணேஸ்வரா இந்துக் கல்லூரியின் சித்தி விநாயக பெருமானுக்கு மூன்றாவது கும்பாபிஷேகம் நடைபெறுவதையிட்டு நான் மிகவும் மகிழ்ச்சி அடைகின்றேன்.

இக்கல்லூரிக்கும் பத்திரகாளி அம்பாள் ஆலயத்திற்கும் மிக நெருக்கமான தொடர்புகள் காணப்படுவதுடன் இங்கு கற்கும் மாணவர்கள் கல்வியிலும் விழுமியப் பண்புகளிலும் முன்மாதிரியாகத் திகழ்கின்றனர். இவற்றையெல்லாம் சிறப்பான முறையில் அதிபருடன் இணைந்து அசிரியர்கள் ஆற்றிவருகின்ற பணி போற்றத்தக்கது.

இவ்வாலயத்தின் முதலாவது கும்பாபிஷேகம் தொடக்கம் மூன்றாவது கும்பாபிஷேகம் வரை பலரது ஒத்துழைப்புக்கள் கிடைத்து வருகின்றது. அம்பாளின் மகோற்சவக் கிரியைகளில் இந்துக் கல்லூரியின் அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் பங்குபற்றுவதும் சிறப்பிற்குரியது.

ஆலய வழிபாடு மன அமைதி, ஒழுக்கம், பிற உயிர்களில் அன்பு என்பவற்றைத் தோற்றுவிக்கின்றன. இப்பண்புகள் சிறப்புற்றோருக்கும் தன்மையில் தான் பெற்ற கல்வியை தனக்கும் சமுதாயத்திற்கும் பயனுள்ளதாக்க முடியும். அந்தவகையில் ஆலயத்திருப்பணி வேலைகள், கும்பாபிஷேக கிரியைகள் அனைத்திலும் தொண்டாற்றிய அதிபர், பிரதி அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், சமய நலன் விரும்பிகள், விநாயக அடியார்கள் அனைவருக்கும் சித்தி விநாயகரின் திருவருளும், அன்னை பத்திரகாளி அம்பாளின் பேரருளும் பெற்று மங்களமாய் வாழ எனது ஆசிர்வாதத்தை தெரிவித்துக் கொள்கின்றேன்.

**சர்வ ஜ நாஸ் சுகினோ பவந்து**

**சுபம்**

**வேதாகமாமணி பக்தகியாதிலகம்**
**சிவஸ்ரீ சோ. இரவிச்சந்திரக்கருக்கள்**
**ஆதீனகர்த்தா, பிரதமகுரு**
**பத்திரகாளி அம்பாள் தேவஸ்தானம்**
**திருக்கோணமலை.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிச் செய்தி

திருக்கோணமலை நகரில் பிரசித்தி பெற்ற ஆலடி சித்தி விக்னேஸ்வரர் ஆலயம் ஸ்ரீ பத்திரகாளி அம்பாள்ஆலயம் இவற்றிற்கு அயலிலே புகழ் பூத்த இராம கிருஷ்ண சங்க ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக்கல்லூரி அமைந்துள்ளது.

இக் கல்லூரி வளாகத்திலே சுவாமி விபுலானந்த அடிகளார் அவர்களால் பூசிக்கப்பெற்ற விநாயக அருவுருவச் சிலையை மூலமாகவும் விநாயகர் உருவச்சிலையை பிரதிஷ்டை செய்யும் வண்ணமும் ஆலயம் அமைத்து இரு கும்பாபிஷேகங்கள் செய்யப் பெற்று சிறப்புற பூசைகள் நிகழ்ந்து வருங்கால சிலத் திருப்பணிகள் ஆற்ற வேண்டியிருந்தமையால் அவற்றை பூர்த்தி செய்து நாளது பிலவ வருடம் கார்த்திகை மாதம் சித்திரை நட்சத்திரம் கூடிய 01.12.2021 அன்று மஹா கும்பாபிஷேகம் நிகழ்வதையிட்டு அக மகிழ்வு எய்துகிறேன்.

கும்பாபிஷேகம் சிறப்புற அமையவும், அதன் மூலம் கல்லூரி, கல்லூரி அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் ஆகியோரும் சிறப்பு உயர்வுகளைப் பெறவும் விநாயகப் பெருமானின் அருளை வேண்டி, அவன் தாள் வணங்கி ஆசி கூறுகிறேன்.

**கணபதி துணை**

**வ.சிவகுமார் குருக்கள்**
**முன்னாள் பிரதமகுரு**
**ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயம்**
**தி/இ.கி.ச கோணேஸ்வரா இந்துக் கல்லூரி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச் செய்தி

தங்களது பாடசாலையின் அருள் மிகு சித்தி விநாயகர் ஆலய கும்பாபிஷேகத்தை முன்னிட்டு மலர் ஒன்றை வெளியிடுவதாக அறிந்து மகிழ்ச்சியடைகின்றேன். பொதுவாக பாடசாலையினுள் ஆலயம் அமைவது அற்புதமானதே ஆகும். இச்சித்தி விநாயகர் ஆலய வரலாறு பற்றியறிந்து ஆச்சரியமடைகின்றேன். குறிப்பாக முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்தரால் விநாயகர் விக்கிரங்கள் வைத்து வழிபடப்பட்டு வந்த வரலாறானது எமது திருமலை மண்ணுக்கு ஒரு வரப்பிரசாதமே.

பகவான் ஸ்ரீ இராமகிருஷ்ணரின் நாமத்தைக் கொண்டு திருக்கோணேஸ்வரர் பூமியில் வெள்ளிடைமலை போல் பிரகாசித்துக் கொண்டிருக்கும் பாடசாலைகளினுள் மணி மகுடம் என போற்றப்படக்கூடிய இ.கி.ச ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரியானது மாணவர்களின் பாடவிதான செயற்பாடுகளில் மட்டுமல்லாது இணைப்பாடவிதான செயற்பாடுகள் மற்றும் இன்னோரன்ன செயற்பாடுகளில் போதுமான அளவில் பணியாற்றி கோட்ட மட்டம், வலய மட்டம், மாவட்டம், மாகாண, தேசிய மட்டங்களில் மாத்திரமல்லாது சர்வதேச மட்டத்திலும் சாதனை புரிந்து வருவது என்பது இம்மண்ணில் பிறந்தவன் என்ற அடிப்படையில் எனக்கு மட்டற்ற மகிழ்ச்சியைத் தருகின்றது.

ஆயிரத்து எண்ணூற்றி தொண்ணூற்றி ஏழில் ஆரம்பிக்கப்பட்ட இக்கல்லூரியானது ஆல் போல் தழைத்து பார் போற்ற பணியாற்றி சைவமும், தமிழும் தழைத்தோங்க கருமம்மாற்றிவருவது இக்கல்லூரிக்கு பெருமையளிக்கின்றது. இப்பணியானது தொடர்ந்தும் மங்காது மகத்தானதாக அமைய வேண்டும் என கடலருகே அமைந்த கல்லூரிக்கு காவலனாக விளங்கி வினைகள் போற்றும் சித்தி விநாயகருக்கு ஆலயமெடுத்து மலர் வெளியிடும் நல்லபணியினை மனங்கொண்டு வாழ்த்துகின்றேன்.

**"சைவமும் தமிழும் தழைத்தோங்கப் பணி செய்வோம்"**

**சி.சிறிதரன்**
**வலயக் கல்வி பணிப்பாளர்,**
**வலயக் கல்வி அலுவலகம்,**
**திருக்கோணமலை.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச் செய்தி

## அருள் பாலிக்கும் சித்தி விநாயகர்

திருக்கோணமலை இராம கிருஷ்ண சங்க ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரியில் அமைந்திருந்து அருள் பாலித்துக் கொண்டிருக்கும் அருள் மிகு சித்தி விநாயகருக்கு மூன்றாவது கும்பாபிஷேகம் நடைபெற திருவருள் கூடியுள்ளது குறித்து நாம் மிகவும் மகிழ்ச்சியடைகின்றோம்.

கல்விச் சாலைகளில் "மாணவர்களின் ஆன்மீக நடத்தைகளை ஒழுங்குபடுத்தவும் மேம்படுத்தவும் ஆலயங்கள் அமைப்பது நல்ல காரியம்" என பெரியோர்கள் கூறுவர். இந்த நோக்கிலேயே இருபது ஆண்டுகளுக்கு முன்பதாக 1997 ஆம் ஆண்டில் இந்துக் கல்லூரி சித்தி விநாயகர் ஆலயம் அமைக்கப்பட்டது. பெற்றோர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பழைய மாணவர்கள், நலன் விரும்பிகள் என்போரின் ஒத்தழைப்புடன் ஆலயம் சிறப்பாக உருவானது. இந்த ஆலயத்தை அமைக்கும் பணியின் போது ஈடுபாட்டுடன் பங்குகொண்ட திரு.கா.விநாயகசோதியை நாம் மறந்துவிட முடியாது.

சமயம் என்பது வாழ்க்கை முறைமையைத்தான் சுட்டுகிறது. இந்த வாழ்க்கை முறைமைக்கேற்ற நெறிகளை போதனை ஊடாக மாணவர் மனதிலே பதிப்பதுடன், அந்த நெறிமுறைகளை பின்பற்றி மாணவர் ஒழுக வேண்டிய அவசியத்தையும் வற்புறுத்துதல் வேண்டும். அப்போதுதான் இந்த வாழ்க்கை ஒழுங்குநெறிகள் சாதனையாக மலரும். இதற்கு பாடசாலைகளில் அமைந்துள்ள ஆலயங்கள் உதவ முடியும். சமயப் பண்பாடுகளையும், நெறிமுறைகளையும் சாதனையாக்கும் ஒரு களமாக அருள் மிகு சித்தி விநாயகர் ஆலயம் செயலாற்றிக் கொண்டிருப்பது பாராட்டப்பட வேண்டிய ஒன்றாகும்.

அருள்மிகு சித்தி விநாயகர் ஆலயத்தின் மூன்றாவது புனராவர்த்தன கும்பாபிஷேகம் நடைபெறும் இத்தருணத்தில் அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் யாவருக்கும் விநாயகப் பெருமானின் அருள், ஆசி கிடைக்க வேண்டும் எனப் பிரார்த்தித்து எனது வாழ்த்துக்களை அன்புடன் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**சி.தண்டாயுதபாணி**
**முன்னாள் அதிபர்**
**தி/இ.கி.க ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரி**
**(தேசிய பாடசாலை)**
**திருக்கோணமலை.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச் செய்தி

கோயிலும் சுனையும் கடலுடன் சூழ்ந்த கோணமாமலையில் அமைந்துள்ள எமது கல்லூரியில் சுவாமி விபுலானந்தர் அவர்கள் அதிபராகக் கடமையாற்றிய காலத்தில் காளியப்பு மண்டபத்திற்கும் நடராஜானந்தா மண்டபத்திற்கும் இடையே மூன்று தெய்வீக கற்களை வழிபாட்டிற்காக அமைத்திருந்தார். பின்னர் பௌதீகவள விருத்தி காரணமாக அவற்றை அம்பலவாணர் அகத்திற்கு அருகே வைத்து வழிபாடு நடைபெற்று வந்தது.

மாணவர்களது சமய ஒழுக்க விருத்தியை நோக்காகக் கொண்டு 1997ம் ஆண்டு முன்னாள் அதிபர் திரு.சி.தண்டாயுதபாணி அவர்கள், பெற்றோர், மாணவர்கள், நலன் விரும்பிகள் மற்றும் இந்து மன்றத்தின் உதவியுடன் ஆகமம் சார் விதிமுறைகளுக்கு அமைவாக அழகுணர்வுடன் கூடிய கோவில் அமைக்கப்பட்டு ஈஸ்வர வருடம் ஆவணி மாதம் 22ம் நாள் 1997.09.07இல் அருள் மிகு சித்தி விநாயகர் ஆலய கும்பாபிஷேகம் நடைபெற்றது.

இக்கிரியைகள் இந்தியாவைச் சேர்ந்த சுவாமி தன்மயானந்தாஜி கொழும்பு இராமகிருஷ்ண சங்க தலைவர் சுவாமி ஆத்மகனாந்தாஜி மட்டக்களப்பு இராம கிருஷ்ண சங்க கிளையைச் சேர்ந்த சுவாமி அஜராத்மானந்தாஜி ஆகியோரது ஆசீர்வாதத்துடன் பிரம்ம ஸ்ரீ சோ.இரவிச்சந்திரக்குருக்கள் அவர்களின் தலைமையில் கும்பாபிஷேகம் இடம் பெற்றது.

இவ்வாலயத்தில் நித்திய பூசையுடன் விநாயகர் சதுர்த்தி, நவராத்திரி, குரு பூசைகள், தைப்பொங்கல், சித்திரை வருடப்பிறப்பு, தீபாவளி என்பன சிறப்பாக நடைபெற்று வருவது கண்கூடு இதன் மூலம் மாணவர் மத்தியில் ஆன்மீக சிந்தனையையும், சமய விழுமியங்களையும் வளர்த்தெடுக்கக் கூடியதாகவுள்ளது. பாடசாலை நிகழ்வுகளிலும் காரிய சித்தி வேண்டி சித்தி விநாயகருக்கான வழிபாட்டுடன் ஆரம்பிக்கப்படுகின்ற வழமை காணப்படுகின்றது.

இரண்டாவது கும்பாபிஷேகம் முன்னாள் அதிபர் திரு.மா.இராஜரெட்ணம் அவர்களது தலைமையில் ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் மற்றும் இந்து மன்றத்தின் உதவியுடன் 30.10.2009 நடாத்தப்பட்டது.

மூன்றாவது கும்பாபிஷேகம் இவ்வருடம் 01.12.2021 பிலவ வருடம் கார்த்திகை 15ம் நாள் காலை 10.30 மணிக்கு நடைபெற்றது. அப்பணியை பழைய மாணவர்கள், நலன் விரும்பிகள், ஆசிரியர்களது பங்களிப்புடனும் திருப்பணிக்குழு அமைக்கப்பட்டு, எண்ணெய்காப்பு,கும்பாபிஷேகமும் அதனைத் தொடர்ந்து பதினொரு நாட்கள் மண்டலாபிஷேகம் நடைபெற்று பன்னிரண்டாம் நாள் "சங்காபிஷேகம்" அன்று இக்கும்பாபிஷேக மலர் வெளியிடுவதனையிட்டு அதிபர் என்ற வகையில் அக மகிழ்வடைகின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்கிரியைகளை சிறப்பாக நடாத்திய பிரம்மஸ்ரீ சோ. இரவிச்சந்திரக்குருக்கள் ஐயா அவர்களுக்கும் மற்றும் ஏனைய குருக்கள் மாருக்கும் நித்திய பூசை நடத்துகின்ற பால கிருஸ்ண குருக்கள் அவர்களுக்கும் கிரியைகள் சிறப்பாக அமைய பங்களிப்புச் செய்த அனைத்து உள்ளங்களுக்கும், பழைய மாணவர் சங்கத்தின் சார்பிலும், திருப்பணிக்குழு சார்பிலும் கல்லூரியின் சார்பிலும் அதிபர் என்ற வகையில் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்வதோடு, எமது கல்லூரி 125வது ஆண்டில் கல்விப் பணியாற்றி வரும் வேளையில் இக்கும்பாபிஷேகம் வரலாற்று நிகழ்வாகவும் அமைவது வெள்ளிடைமலை.

**திரு.செ.பத்மசீலன்**
**அதிபர்**
**தி/இ.கி.ச. கோணேஸ்வரா இந்துக் கல்லூரி**
**தேசிய பாடசாலை**
**திருக்கோணமலை.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச் செய்தி

திருச்சிற்றம்பலம்

தேவாரப் பாடல் பெற்ற திருக்கோணேஸ்வரத் திருத்தலம் அமையப் பெற்ற திருக்கோணமலைப் பகுதியில் இராமகிருஷ்ண சங்க கோணேஸ்வர இந்துக் கல்லூரியின் மத்தியில் குடிகொண்டு அருள் பாலித்துக் கொண்டிருக்கும் சித்தி விநாயகர் ஆலய கும்பாபிஷேகம் நடைபெறத் திருவருள் கூடியுள்ளது.

இக்கட்டான கொவிற் - 19 சூழ்நிலையிலும், எவ்வளவோ சிரமத்தின் மத்தியிலும் ஆலயக் கும்பாபிஷேகம் நடைபெறுவதை எண்ணி மிக்க மகிழ்ச்சி அடைகின்றேன்.

வழிபாட்டின் அடிப்படையாக விளங்குவது புறத்தூய்மையும், அகத் தூய்மையுமே. இத்தூய்மையின் அடிப்படையில் மாத்திரமே இறையருளைப் பெறமுடியும். எனவே நம் முன்னோர்கள் தாபித்த ஆலயங்களை காத்தும், வளர்த்தும் தூய்மையின் அடிப்படையில்இறைவழிபாட்டில் ஈடுபட்டும் இறையருள் பெறுவதோடு இத்திருப்பணி நிறைவேற உதவிகளும் ஒத்தாசைகளும் புரிந்த அனைத்து உள்ளங்களுக்கும் நன்றியறிதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருச்சிற்றம்பலம்

திரு.பாலதாஸ்
செயலாளர்
(பாடசாலை அபிவிருத்தி சங்கம்)
தி.்.இ.கி.ச. ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரி
தேசிய பாடசாலை
திருக்கோணமலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச் செய்தி

**"குரை கடல் ஓதம் நித்திலம் கொழிக்கும்**
**திருக்கோணமாமலை யமர்ந்தாரே"**

மாவலியாள் சங்கமித்த மருதமுடன் நெய்தலுமாம் இருநிலங்கள் அமையபெற்ற கிழக்கிலங்கைப் பதியிடத்தே கோணநாதர் குடிகொண்ட நல்லூராம் திருமலையில் தனக்கெனத் தடம் பதித்துத் தலைசிறந்து விளங்கும் இ.கி.ச ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரியின் கும்பாபிஷேக விஞ்ஞாபனக் கிரியை மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பழைய மாணவர்சங்கச் செயலாளர் என்ற வகையில் அளப்பெரிய புளகாங்கிதம் அடைகின்றேன்.

கல்வி, விளையாட்டு, கலை, கலாசாரம் மற்றும் விழுமியம் என பல்வகைத் திறமைகளையும் தன்னகத்தே அமையப்பெற்ற எமது கல்லூரியானது இன்றும் ஏனைய பாடசாலைகளின் **'தாரகை நடுவே தன்மதியாகத் தோன்றி'** காணப் படுவதற்கு அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், நலன் விரும்பிகள், பழைய மாணவர்கள் மற்றும் புலம்பெயர் அமைப்புக்கள் என பல இன்னோரன்ன செயற் பாட்டாளர்களின் தன்னலமற்ற சேவைகளும் அவர்களின் உந்துதல் சக்தியுமேயாகும்.

அந்த வகையில் ஒரு சமூகத்தின் நிலைக்களங்களாகத் திகழ்பவைகள் பாடசாலைகளாகும். கோயில்களும் இதற்கிணங்க இந்துக்களின் கலாசார அம்சங்கள் மாற்றம் முறா வண்ணம் சமயம் கலந்த விழுமியங்களை எமது கல்லூரியானது முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. அந்த வகையில் குடமுழுக்கு கிரியை விஞ்ஞாபனமானது மகோட்சபத்தில் மிக முக்கிய அம்சமாகத் திகழ்வது மட்டுமல்லாது இந்துக்களின் பாரம்பரிய சமயப் பொறையை வளர்த்து அவர்களின் சமூகத்திற்கு ஆலய வழிபாட்டின் மேன்மைக்கு மீள் நினைவற்றாலை கட்டியெழுப்பும் ஒரு விடயமாக திகழ்கின்றது.

ஆலயம் தொழுவது சாலவும் நன்று என்றும் கோயில் இல்லா ஊரில் குடியிருக்காதே என்றும் உள்ள பெருங்கோயில் என்றும் அப்பரின் **"காயமே கோயிலாக"** போன்ற வரிகள் ஆலயத்தின் அவசியம் மகத்துவம் ஆத்ம ஆன்மீக வழிபாட்டுத்தன்மையில் தன்னை அர்ப்பணிக்கும் முறை போன்ற பல்வகைமையினை எமக்கு எடுத்து இயம்பி ஆன்மீக பாதைக்கு இம் மகோட்சப விஞ்ஞாபனமானது வழி சமைத்து கொடுக்கும் என்பதில் ஐயப்பாடில்லை.

ஆகவே இத் திருமுழுக்கு விஞ்ஞாபன மகோட்சபமானது இனிவரும் காலங்களில் இக்கல்லூரியின் பன்முகப்பட்ட ஆற்றல்களும், அழகியல் அம்சங்களும் மென்மேலும் வளர்ந்து வினைகளைத் தீர்க்கும் விநாயகப்பெருமானின் அருள் பெற்று பல வழிகளிலும் விஞ்ஞாபன மகோட்சபத்திற்கு அரும் பணியாற்றிய அனைத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாள்சகப் பெருந்தகை அனைவருக்கும் பழைய மாணவர்கள் சார்பில் வாழ்த்துக்களையும் நன்றிகளையும் பாராட்டுக்களையும் இச்செய்தி மூலம் அறியத்தருகின்றேன்.

நன்றி
**மலர் என்றும் மலரட்டும்**
சுபம்

**ஓம் சாந்தி சாந்தி சாந்தி**

**திரு.கை.ரதன் (செயலாளர்)**
**பழைய மாணவர்கள் சங்கம்**
**தி/இ.கி.ச. ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரி**
**தேசிய பாடசாலை**
**திருக்கோணமலை.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதலாவது கும்பாபிஷேக நிகழ்வு







# இரண்டாவது கும்பாபிஷேக நிகழ்வு






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாலஸ்தாபன கிரியை










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூன்றாவது கும்பாபிஷேக கிரியைகளின் போது









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தி / இ.கி.ச.ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக்கல்லூரி
## சித்தி விநாயகர் ஆலய வரலாறு

எமது கல்லூரி வளாகத்தில் அழகுற அமைந்து அருள்பாலித்துக் கொண்டிருக்கும் சித்தி விநாயகர் ஆலயத்தின் நூதனப் பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேகம் 1997.09.07ம் திகதி சிறப்பாக நிகழ்ந்தேறியது. பன்னிரண்டு ஆண்டுகள் நிறைவில் 2009.10.30ம் திகதி முதலாவது புனராவர்த்தன கும்பாபிஷேகம் இறை அருளால் இனிதே நிகழ்ந்தேறியது. மூன்றாவது புனராவர்த்தன கும்பாபிஷேகம் 2021.12.01ம் திகதி நடைபெற்று இன்று மண்டலாபிஷேகமும் இக்கும்பாபிஷேகம் தொடர்பான சிறப்பு மலர் வெளியீடும் நடைபெற சித்தி விநாயகர் அருள் கிட்டியுள்ளது. இச் சந்தர்ப்பத்தில் இவ் ஆலயத்தின் வரலாறு பற்றிய சில தகவல்களைப் பகிர்ந்து கொள்வது பயனுள்ளதாக அமையும்.

1890 களின் பிற்பகுதியில் சைவப் பெரியார்களால் இக்கல்லூரி சிறிய அளவில் ஆரம்பப் பாடசாலையாக அமைக்கப்பட்ட போது அதனைச் சூழ உள்ள பகுதிகள் தோட்டக்காணிகளாக அமைந்திருந்ததாக அறிய முடிகின்றது. அத் தோட்டக்காணிகளில் காணப்பட்ட தோட்டக் கிணறுகளும் அத்தோட்டங்களில் அருவுருவ வழிபாட்டின் அடையாளமாக காணப்பட்ட உருவங்களும் தற்போதும் பல குடியிருப்புக் காணிகளில் இருப்பதைக் காணக் கூடியதாக உள்ளது. இச் சூழல் பின்னணியில் ஆரம்பப்பாடசாலைக்காணியிலும் அருவுருவ வழிபாட்டின் உருவங்கள் சிறிய ஒரு அமைவிடத்தில் காளிகோயில் பக்கமாக உள்ள மதிலுடன் இணைந்ததாக (முன்னயை காளியப்பு மண்டபத்திற்கு முன்பாக) அமைந்திருந்ததை எமது சமூகத்தில் பலரும் அறிவர்.

இந்து ஆண்கள் ஆங்கிலப் பாடசாலை, இந்து ஆண்கள் தமிழ்ப் பாடசாலையென இரு ஆரம்பப்பாடசாலைகள் இக்கல்லூரியின் ஒரே வளாகத்தில் இயங்கி வந்தன. 1925ம் ஆண்டு சுவாமி விபுலானந்த அடிகளார் இராமகிருஷ்ண மிஷனுக்காக இரு பாடசாலைகளினதும் நிர்வாகப் பொறுப்பை ஏற்றுக் கல்விப்பணியை ஆரம்பித்த போது கல்லூரி வளாகத்தில் அருவுருவத் திருமேனிகளை ஸ்தாபித்து ஆனைமுகத்தானாக எழுந்தருளச் செய்து தெய்வப்பணியையும் ஆரம்பித்ததாக அறியக்கூடியதாக உள்ளது.

விபுலானந்த அடிகளார் இங்குள்ள அருவுருவங்களைப் பற்றிக்கூறும் போது "இது வெறும் கல் அல்ல அறிவு, ஆனந்தம், அருள் யாவும் ஒன்றிணைந்த ஆனை முகப்பெருமான், இத் தும்பிக்கையான் தான் நமது நம்பிக்கை" என தன் அருள் மொழியை பகர்ந்துள்ளார். அடிகளாரது மாணவர்கள் அக்காலத்து ஆசிரியர்கள் சுவாமி அவர்களின் அருள் மொழியால் ஈர்க்கப்பட்டதுடன் அவ் அருவுருவ வழிபாடும் தொடர்ந்து இடம் பெறலாயிற்று. தினமும் விளக்கேற்றி, மலர் சாத்தி, பூசை மேற்கொள்ளும் கருமங்கள் மாணவர்கள் ஆசிரியர்களால் நம்பிக்கையுடன் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏழு தசாப்தங்களாக அதே அமைவிடத்தில் அமைந்து அருள் பாலித்த அருவுருவத்திருமேனிகள் 1992ம் ஆண்டு அன்றைய காளியப்பு மண்டபமும் நடராஜானந்தா மண்டபமும் இடிக்கப்பட்டு புதிய ஒரே பெரிய மாடிக்கட்டடம் (தற்போது உள்ளது) ஒன்றை அமைக்கும் செயற்பாட்டினால் இடம்மாற்றி புதிய அமைவிடத்தைத் தேட வேண்டிய நிலை ஏற்பட்டது. அம்பலவாணர் அகத்தின் முன் பக்கச் சுவருடன் சேர்ந்ததாகவும் வெளிப்புறமாகக் காணப்பட்ட மாடிப் படிக்கட்டுச் சுவருக்கு அண்மித்ததாகவும் சிறிய பீடம் அமைத்து அவ் அருவுருவங்களை வழிபடுவதற்கு வழி செய்யப்பட்டது.

சுவாமி விபுலானந்த அடிகளாரால் தூரதிருஷ்டியுடன் விநாயகராக நம்பிக்கையுடன் வழிபட்ட உருவங்கள் தொடர்ச்சியாக மாணவர்களாலும் ஆசிரியர்களாலும் வழிபட்டு வந்த நிலையில் தற்காலிகமாக அமைக்கப்பட்ட இடம் பொருத்தமானதாக அமையவில்லை என்ற குறை பாடசாலை சமுகத்தில் காணப்பட்டது. பொருத்தமான இடத்தில் சிறிய அளவில் விநாயகருக்கான வழிபாட்டு இடத்தினை நிரந்தரமாக அமைத்துக் கொள்ள அப்போது அதிபராக இருந்த திரு.சி.தண்டாயுதபாணி அவர்களின்தலைமையிலான நிர்வாகம் முடிவு செய்தது. எனினும் இடப்பற்றாக்குறை காரணமாக நிலையத்தைக் கண்டறிவதே கஷ்டமான காரியமாக காணப்பட்டது.

இந்நிலைமையில் அம்பலவாணர் அகத்தின் வெளிப்புற மாடிப்படிகள் இடிக்கப்பட்டு புதிய காளியப்பு மண்டப படிகள் ஊடாக வழி ஏற்படுத்தப்பட்டது. மாடிப்படிகள் அகற்றப்பட்டதால் ஏற்பட்ட வெற்றிடம் ஆலயத்திற்குரிய நிலையத்தை விநாயகரே காட்டியதாக அமைந்தது. 01.02.1995ல் இந் நிலையத்தை உறுதி செய்ததைத் தொடர்ந்து அதிபர் தலைமையில் பிரதி அதிபர்கள், ஆசிரியர்களை உள்ளடக்கியதாக பத்துப்பேர் கொண்ட திருப்பணிக் குழு அமைக்கப்பட்டு பணிகள் ஆரம்பிக்கப்பட்டது. குறளமுத அதிபர் திரு.கா.விநாயகசோதி அவர்களால் சிறிய ஆலயத்திற்கான படம் வரையப்பட்டதுடன் கல்வித்திணைக்கள அனுமதியும் பெற்றுக் கொள்ளப்பட்டது. பத்திரகாளி அம்பாள் தேவஸ்தான பிரதம குரு வேதாகமமாமணி பிரம்ம ஸ்ரீ சோ.இரவிச்சந்திரக் குருக்கள் அவர்களிடம் சாஸ்திர ரீதியான ஆலோசனைகளும் வழிகாட்டல்களும் பெற்றுக் கொள்ளப்பட்டதுடன் குறளமுத அதிபர் திரு.கா.விநாயகசோதி அவர்களிடம் கட்டிட அமைப்புக்கான ஆலோசனையும், வழிகாட்டல்களும் பெற்றுக் கொள்ளப்பட்டது. சிறப்பான ஸ்காந்ததாஸ் ரவீந்திரராஜா ஆசாரியார் அவர்கள் கல்லூரியில் அமையும் ஆலயத்தை சிறப்புற அமைத்து விட வேண்டும் என்ற ஆர்வத்துடன் சிற்பப் பணிகளை பொறுப்பேற்றார்.

சுவாமி ஆத்ம கனானந்தாஜி அவர்கள் 26.01.1995ம் திகதி கல்லூரிக்கு வருகை தந்த போது ஆசீர்வதிக்கப்பட்ட கல்லை அத்திவாரத்துக்கான முதற்கல்லாகப் பயன்படுத்தி காந்தி ஐயா என எல்லோராலும் அன்பாக அழைக்கப்படும் எமது கல்லூரியின் முன்னாள் ஆசிரியர் திரு. பொ.கந்தையா அவர்களால் 03.02.1995ம் திகதி அடிக்கல் நாட்டப்பட்டது. நிதியைத் திரட்டுவதற்கான பணியை குறளமுத அதிபர் திரு.கா.விநாயகசோதி அவர்கள் ரூபா 25000/= அன்பளிப்புச் செய்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆரம்பித்து வைத்தார். அதனைத் தொடர்ந்து பெற்றோர், பழைய மாணவர், நலன் விரும்பிகள், ஆசிரியர்கள், மாணவர்கள் எனப் பலரும் பணமாகவும் பொருளாகவும் அன்பளிப்பைச் செய்து நிதித் தேவையை ஈடு செய்தனர். இச் சந்தர்ப்பத்தில் கல்லூரி மாணவர்களும், அசிரியர்களும் ஆலய அமைப்புப் பணிகளில் தமது பெறுமதிமிக்க சேவையினை சிரமதானப் பணிகள் மூலம் வழங்கியமை நிதிச் சுமையைக் குறைப்பதாகவும் அனைவரது ஆர்வமான ஈடுபாட்டை வெளிப் படுத்துவதுமாக அமைந்தது, மாணவர்களுக்கு சிறந்த அனுபவமாகவும் அமைந்தது.

சுவாமி விபுலானந்த அடிகள் அருவுருவங்களை நம்பிக்கைக்குரிய தும்பிக்கையான் என வழிபட்டதனால் விக்கினங்கள் போக்கும் விநாயகராகவும், மாணவர்கள் கல்வி அறிவைப் பெற்று அவர்களது முயற்சிகளில் சித்தி பெற அருளும் தெய்வமாகவும் இவ் ஆலயம் அமைவதால் சித்தி விநாயகர் எனும் பெயர் மிகப் பொருத்தமுடையதாக அமையப் பெற்றது. விபுலானந்த அடிகளாரின் உள்ளக்கமலமடி உத்தமனார் வேண்டுவது என்பதை உணர்த்துவதாக முழுமையாக கொங்கிறீற்றினால் வார்க்கப்பட்ட கமலத்தில் (தாமரை மலரில்) விநாயகர் வீற்றிருப்பதாக ஆலயம் அமைந்துள்ளது. இது விநாயகரது ஐம்பத்தியிரண்டு வடிவங்களில் மூலத் தோற்றமாகவும் அறிய முடிகின்றது.

குற்றங்களையும், அசுத்தங்களையும் நீக்குவதற்கு மூலமாகத் திகழும் நீர்த் தடாகத்தில் விநாயகரை அமைத்துக் கொண்டமை. எம் குற்றங்களை களைந்து வழிபாட்டில் ஈடுபடுவதை உணர்த்துவதாக அமைந்துள்ளது. 1995ம் ஆண்டு தொடங்கப்பட்ட வேலைகள் 1996ல் சிறிது தேக்க நிலை கண்டாலும் அதனைத் தொடர்ந்து ஆலய தூபியையும் மண்டபத்தையும் அழகுற அமைத்துக் கொள்ள இக்கால இடைவெளி வாய்ப்பாகியது. இக்காலத்தில் பிரதிஷ்டை செய்ய வேண்டிய கருங்கல்லிலாலான விநாயகர் விக்கிரகம் வவுனியாவைச் சேர்ந்த ஸ்தபதி சு.சண்முகவடிவேல் அவர்களால் வடிக்கப்பட்டு பெற்றுக் கொள்ளப்பட்டு ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் தேவஸ்தானத்தில் பேணப்பட்டது.

05.09.1997ம் திகதி ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் தேவஸ்தானத்தில் விநாயகர் விக்கிரகத்துக்கான பூசைகள் நடைபெற்று, விநாயகர் விக்கிரகம் ஊர்வலமாக எடுத்துவரப்பட்டு, இராமகிருஷ்ண மிஷன் கொழும்புக்கிளைத் தலைவர் சுவாமி ஆத்மகனந்தாஜி அவர்களுடன் இந்தியாவிலிருந்து வருகை தந்த சுவாமி தன்மயானந்தாஜி அவர்களும் மட்டக்களப்பு இராம கிருஷ்ண சங்கத்தைச் சேர்ந்த சுவாமி அஜராத்மானந்தாஜி அவர்களும் இணைந்து மூன்று புனிதர்களாலும் விநாயகர் விக்கிரகம் பிரதிட்சை செய்யப்பட்டது.

சுவாமி விபுலானந்த அடிகளாரால் ஸ்தாபிக்கப்பட்டு வழிபட்டு வந்த அருவுருவங்களும் மூலஸ்தானத்திற்கு முன்புறமாக தடாகத்துடன் சேர்ந்ததாக பிரதிஷ்டை செய்யப்பட்டது. 06.09.1997ம் திகதி எண்ணெய்க் காப்பு நிகழ்வும் 07.09.1997ம் திகதி மகா கும்பாபிஷேகமும் சிறப்பாக நடைபெற்றது. சங்காபிஷேகம் நிறைவு பெற்றதும் மகா கும்பாபிஷேக மலர் வெளியீடும் நடைபெற்றது. அதனைத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்ந்து ஆலயத்தின் நிர்வாக செயற்பாடுகள் கல்லூரியின் இந்து மாணவர் மன்றத்தால் பொறுப்பேற்கப்பட்டு தொடர்ச்சியாக சிறப்பாக நடைபெற்று வருகின்றது.

நாளாந்தம் காலையில் பூசை நடைபெறுவதுடன் வெள்ளிக்கிழமைகளிலும் விஷேட தினங்களிலும் மாலை வேளையில் அபிஷேகம் பூசை நடைபெறுகின்றமை மாணவர் ஆசிரியர் மத்தியில் ஆன்மீக சிந்தனைக்கு வழிகாட்டுவதாக அமைகின்றது. கல்லூரியின் அனைத்து விழாக்களும் நிகழ்வுகளும் கல்லூரி விநாயகர் ஆலய வழிபாட்டின் பின் ஆரம்பிப்பது கல்லூரி மரபாக உள்ளது.

பன்னிரண்டு வருடங்கள் பூர்த்தியானதைத்தொடர்ந்து புனராவர்த்தன கும்பாபிஷேகத்தை முறைப்படி சிறப்பாகச் செய்வதற்கு அன்றைய அதிபர் தலைமையில் பிரதி அதிபர்கள், இந்துமன்றப் பொறுப்பாசிரியர்கள் ஆகியோரை உள்ளடக்கிதாக புனருத்தாரணக் குழு ஒன்று அமைக்கப்பட்டு பணிகள் முன்னெடுக்கப்பட்டன. மண்டபத்தை தூபியின் முன்பக்கத்துடன் இணைத்துக் கொள்ளும் பணிகளுடன் ஏனைய புனருத்தாரணப் பணிகள் அனைத்தும் உரிய காலத்தில் நிறைவு செய்யப்பட்டு 29.10.2009ம் திகதி எண்ணெய்க்காப்பு நிகழ்வும் 30.10.2009ம் திகதி கும்பாபிஷேக நிகழ்வும் சிறப்பாக நிகழ்ந்தேறியது. ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்களின் நிதிப்பங்களிப்புடன் மேற்கொள்ளப்பட்ட இம்முதலாவது புனருத்தாரண கும்பாபிஷே கிரியைகள் ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் தேவஸ்தான பிரதமகுரு வேதாகமமாமணி பிரம்ம ஸ்ரீ சோ.இரவிச்சந்திரக்குருக்கள் அவர்களே பொறுப்பேற்று நடத்தி வைத்தார்.

இக்காலத்தில் ஒரு தசாப்த காலத்திற்கு மேலாக ஆலயத்தின் நித்திய பூசைகளை சிறப்பாக நாடாத்தி வைத்த மதிப்பிற்குரிய சிவகுமாரக்குருக்கள் அவர்களுக்கும் எமது நன்றிகள். சித்தி விநாயகர் ஆலய மூன்றாவது கும்பாபிஷேகம் 01.12.2021 நடத்த வேண்டும் என்ற சிந்தனை தோன்றிய போது கொவிட் காலம் தடைகளினை ஏற்படுத்தியது. விநாயகரின் பணி தொடர கல்வி சமுக மட்டத்தில் எடுக்கப்பட்ட கலந்துரையாடலுக்கமைய பழைய மாணவர் சங்கம் இப்பணியை முன்னெடுக்க சம்மதித்து இதற்கான திருப்பணிக்குழு நியமிக்கப்பட்டு இப்பணி முன்னெடுக்கப்பட்டது.

இப்பணியில் முன்னாள் அதிபர்கள், முன்னாள் ஆசிரியர்கள், பழைய மாணவர்கள், நலன் விரும்பிகள் ஆகியோரது பங்களிப்புடன் இத்திருப்பணி நிறைவு பெற்றது. இதற்கான கிரியைக்கு ஆலோசனை வழங்கி வரும் ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் ஆலய தர்மகர்த்தா பிரம்மஸ்ரீ சோ. இரவிச்சந்திரக் குருக்களின் வழிகாட்டல் மிக முக்கியமானது. மற்றும் ஆலய பூஜையை நடத்தும் பாலு ஐயா அவர்கள் வர்ணவேலை அழகுற அமைத்த திரு. சத்தியசீலன் புனராவர்த்தன வேலையில் ஈடுபட்ட அனைத்து அன்பர்களின் உதவியையும் நாம் மறந்து விடமுடியாது. தொடர்ந்தும் மாணவர்களின் வழிபாட்டிற்கு உகந்த இடமாக புதுப் பொலிவுடன் காணப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்லூரி சித்தி விநாயகர் ஆலயத்தில் ஆரம்பம் முதல் இன்றுவரை அனைத்து கும்பாபிஷேக கிரியைகளையும் ஏனைய விஷேட கிரியைகளையும் தனது பொறுப்பில் நடத்தி வைப்பதுடன் ஆலய செயற்பாடுகள் தடையின்றி நடைபெற அனைத்து உதவிகளையும் வழிகாட்டல்களையும் தொடர்ந்து வழங்கி வரும் பத்திரகாளி அம்பாள் தேவஸ்தான பிரதம குரு வேதாகமமாமணி பிரம்ம ஸ்ரீ சோ.இரவிச்சந்திரக் குருக்கள் அவர்களுக்கு கல்லூரி சார்பாக நன்றியைத் தெரிவிப்பது வரலாற்றுக் கடமையாகும். கல்லூரி ஆலயத்தின் வரலாற்றுத் தகவல்களைப் பதிவு செய்யும் நிலையில் இவ் ஆலய அமைப்பை அர்த்தமுள்ள வகையில் வடிவமைத்து அனைத்து வேலைகளையும் நாளாந்தம் மேற்பார்வை செய்து அழகுற அமைப்பதில் முழுமையாக தனது அர்ப்பணிப்பான சேவையை அந்நாளில் வழங்கிய குறளமுத அதிபர் திரு.கா.விநாயசோதி அவர்களுக்கு கல்லூரி சார்பான நன்றிகள்.

ஆலயத்தின் சிற்பவேலைகளை மிகச் சிறப்பாக நிறைவேற்றிய சிறப்பானது ஸ்கந்ததாஸ் ரவீந்திரராஜா (அண்மையில் அமரத்துவம் அடைந்தவர்) அவர்களும் ஆலய வரலாற்றில் மதித்து நினைவு கூற வேண்டியவராவார். கல்லூரி ஆலய அமைப்பு வேலைகள் முதல் இன்று வரை பல்வேறு வழிகளிலும் தமது ஈடுபாட்டை வெளிப்படுத்திக் கொண்டிருக்கும் நித்திய பூசைகளை நடத்தும் மதிப்பிற்குரிய குருக்கள். பெருமக்கள், கல்லூரி அதிபர்கள், ஆசிரியர்கள், கல்வி சாரா ஊழியர்கள், இந்து மன்ற நிர்வாகிகள், பழைய மாணவர்கள், பெற்றோர்கள் என ஆலய வரலாற்றுடன் இணைந்து பயணிக்கும் அனைவருக்கும் கல்லூரி சார்பான நன்றிகள். இவ் ஆலயமானது **"கற்றதனாலாய பயனென் கொல் வாலறிவன் நற்றாழ் தொழாரெனின்"** என்ற வள்ளுவர் வாக்கிற்கமைய மாணவர்கள், ஆசிரியர் அனைவரும் இறை உணர்வோடு கற்றல் கற்பித்தல் செயற்பாட்டில் ஈடுபடுவதற்கும், வாழ்க்கையை நெறிப்படுத்துவதற்கும் உரிய மையமாக அமைந்து அனைவரும் இன்பமுற அருள் பொழிய வேண்டுமென சித்தி விநாயகர் அருளை வேண்டுவோம்.

**திரு. மா. இராசரெத்தினம்**
**முன்னாள் அதிபர்.**
**தி/இ.கி.ச.ஸ்ரீ.கோணேஸ்வரா இந்துக் கல்லூரி.**
**தேசிய பாடசாலை**
**திருக்கோணமலை.**

**"சகல நீதிகளையும் ஒன்று திரட்டி கடைந்து அவற்றின் சாரத்தை எடுப்போமாயின் மனித குலத்து நன்மைக்காக இடைவிடாது தொண்டு செய்வதே மிகமேலான சன்மார்க்க நியமம் என்பதை அறிந்து கொள்வோம்"**

- சுவாமி விபுலாநந்தர் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தி/ இ.கி.ச. ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரி

**[தேசிய பாடசாலை]**

## சித்தி விநாயகர் ஆலய கும்பாபிஷேக திருப்பணிக்குழு

போசகர் : சிவஸ்ரீ சோ. இரவிச்சந்திரக் குருக்கள்
திரு. சி.தண்டாயுதபாணி (முன்னாள் அதிபர்)
திரு. மா.இராசரெத்தினம் (முன்னாள் அதிபர்)
திரு. ஆர்.புவனேந்திரன் (முன்னாள் அதிபர்)

தலைவர் : திரு. செ.பத்மசீலன் - அதிபர்

உப தலைவர் : திரு. வி.இராஜேந்திரன் - பிரதி அதிபர்
திரு. ந.இரட்ணவடிவேல் OBA

செயலாளர் : திரு. ஜீ.கே.ரதன் - OBA

பொருளாளர் : திரு. வி.சந்திரபவன் - பொருளாளர் - OBA

அங்கத்தவர்கள் : திரு என்.குமணன் - OBA
திரு ஏ.செல்வேந்திரன் - OBA
திரு எஸ்.பாலதாஸ் - செயலாளர் SDS
திரு ஏ.ஜெகதீசன் (இந்து மன்றம்)
திரு டீ.டினராஜ் (இந்து மன்றம்)
திரு கே.ஜெயக்குமார் - தலைவர், ஆசிரியர் கழகம்
செல்வன் சி.பிரதிக்சன் - இந்து மன்ற தலைவர் (மாணவன்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சித்தி விநாயகர் ஆலய திருப்பணிக்குழு



## இந்துமன்ற செயற்குழு



## இந்துமன்ற மாணவ பிரதிநிதிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தி/இ.கி.ச. ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக்கல்லூரி
## [தேசிய பாடசாலை]
## திருக்கோணமலை

### இந்து மன்றம் 2020/2021

**செயற்குழு**

காப்பாளர்கள் : திரு.செ.பத்மசீலன் (அதிபர்)
திரு.வி.இராஜேந்திரன் (பிரதி அதிபர்)
திருமதி.கே.இராதாகிருஷ்ணன் (பிரதிஅதிபர்)
திரு.ந.பரமேஸ்வரன் (பிரதி அதிபர்)
திருமதி.த.ஹரிஹரன் (உதவி அதிபர்)
திரு.கு.பாஸ்கரன் (உதவி அதிபர்)

| | | |
|---|---|---|
| பொறுப்பாசிரியர் | : | திரு.டி.டினராஜ் |
| தலைவர் | : | செல்வன்.சீ.பிரதீக்ஷன் |
| உப தலைவர் | : | செல்வன்.ஃ.ஷஸ்டிகன் |
| செயலாளர் | : | செல்வன்.சி.அபராயுதன் |
| உப செயலாளர் | : | செல்வன்.ஜீ.'ரிசன் |
| பொருளாளர் | : | செல்வன்.க.ஆதித்தியன் |
| பத்திரிகை ஆசிரியை | : | திருமதி.க.சிறிரங்கராஜா |
| உறுப்பினர் | : | செல்வன்.சீ.பிரதீக்ஷன் |
| | | செல்வன்.சு.சனந்தன் |
| | | செல்வன்.ர.ஸருக்சன் |
| | | செல்வன்.வி.கீர்த்திகன் |
| | | செல்வன்.இ.தர்வீஸ் |
| | | செல்வன்.பி.நிதுஷன் |
| | | செல்வன்.கே.அட்சரன் |

| | | |
|---|---|---|
| ஆசிரியர் குழு | : | திரு. ஏ.ஜெகதீசன் |
| | : | திரு. எஸ்.ஸ்ரீரங்கநாதன் |
| | : | திருமதி. க.சிறிரங்கராஜா |
| | : | திருமதி. சி.ரகுபதி |
| | : | திருமதி. ஜெ.சுவேந்திரன் |
| | : | திரு. எஸ்.சுதாகரன் |
| | : | திருமதி. ந.சுபேந்திரன் |
| | : | திருமதி. அ.ஜெயநேசன் |
| | : | திருமதி. க.பாலதாஸ் |
| | : | திரு. உ.சுஜிதரன் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்து மாணவர் மன்ற வகுப்புப் பிரதிநிதிகள்

**ஆண்டு 3**
1. கு.சவின்
2. ச.கேசாந்
3. லோ.தசாந்தன்
4. த.முராரிவர்ஷன்

**ஆண்டு 4**
1. கே.தரணிதரன்
2. சு.ரக்ஷான்
3. க.தாரகன்
4. சி.டானி

**ஆண்டு 5**
1. த.யதுனேஷ்
2. வை.கிஷோபன்
3. ச.சாஜிலியன்
4. ஜெ.பிரதீஸ்
5. ஸ்ரீ.சாயிகௌசி

**ஆண்டு 6**
1. கே.அட்சரன்
2. ரு.கிரோசன்
3. ச.சந்தோஷ்
4. இ.நித்தீஸ்
5. செ.கிருத்திகேசன்

**ஆண்டு 7**
1. த.சபிலாஷ்
2. பி.நிதுஜனன்
3. மு.டினோஜ்
4. பி.சுதிர்த்
5. க.கேசிகன்

**ஆண்டு 8**
1. ஜெ.ஜெயநேந்திரன்
2. கோ.விபிலன்
3. ரா.தேக்ஷான்
4. இ.தர்வீஸ்
5. ஸ்ரீ.தனுஷ்கர்

**ஆண்டு 9**
1. செ.அப்ரறிஷன்
2. வி.கீர்த்திகன்
3. கா.அட்சயன்
4. நே.ஆருதன்
5. இ.ஹரிசன்

**ஆண்டு 10**
1. ர.ஷருக்ஷன்
2. வா.வியாசன்
3. ச.சம்யகன்
4. ச.தனவர்ஷன்
5. ச.தேவர்ஷன்

**ஆண்டு 11**
1. சௌ.ஹரிராம்
2. ச.சனந்தன்
3. ச.மோசிகன்
4. எஸ்.வஜ்ரன்
5. கே.நிகிதன்

**உயர்தரம் 2022**
1. சீ.பிரதீக்ஷன் - கலைப்பிரிவு
2. ஜீ.ஹரிஷன் - வர்த்தகப்பிரிவு
3. ஹ.சஸ்ரிகன் - விஞ்ஞானப்பிரிவு
4. சு.ஆதித்யாயன் - கணிதக்கிரிவு A
5. சி.அபராயுதன் - கணிதப்பிரிவு B



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொறுப்பாசிரியரிடமிருந்து

இயற்கை எழில் கொஞ்சும் வளம் பொருந்திய நகரின் வடக்குக் கரையினிலே கண்ணைப் பறிக்கும் அழகுடன் ஆலயங்களும், விண்ணை முட்டும் கோபுரங்களும் காணப்படும் திருமலை நகரின் மத்தியில் பல சாதனைகளைப் புரிந்து மிடுக்குடன் தலை நிமிர்ந்து கம்பீரமாய் மிளிர்கின்றது இ.கி.ச.ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக்கல்லூரி. ஒரு ஊரில் "ஆலயமும், கல்விச் சாலையும் அறிவூட்டும் இருகண்கள்." அந்தவகையில் எமது கல்லூரியில் இரண்டும் உள்ளமையால் மாணவர்கள் அன்பு, அறிவு, அடக்கம், நேர்மை, பணிவு என்பவற்றை தம்மகத்தேகொண்டவர்களாக மிளிர்கின்றனர்.

ஆகம முறையில் அமைக்கப்பட்ட ஆலயங்களுக்கு பன்னிரண்டு வருடங்களுக்கு ஒருமுறை கும்பாபிஷேகம் நடைபெற வேண்டும் என்பது ஆகம விதி, சக்தி ஊட்டப்பெற்ற மூர்த்தத்தோடு அருளைப் போற்றலானது பன்னிரண்டு ஆண்டுகள் பொதிந்து இருக்கும், பின் மீண்டும் அதற்கு உயிரூட்டல் வேண்டும், அவ்வாறு செய்தாலேயே கருவறை மூர்த்தம் தொடர்ந்து அருளை வழங்கிட இயலும். இதற்கமைவாகவே எமது கல்லூரியின் வளாகத்தில் அமைந்துள்ள சித்திவிநாயகர் ஆலய புனர்த்தாரன கும்பாபிஷேகம் நடைபெற்று அதன் நினைவாக கும்பாபிஷேக மலர் வெளிவருவதனையிட்டு பொறுப்பாசிரியர் என்ற வகையில் அகமகிழ்வடைகின்றேன்.

மாணவர்களின் இயல்பூக்கங்களுக்கு ஏற்ப அவர்களது தனித்துவமான முயற்சிகளுக்கு ஊக்குவிப்புக்களையும், கௌரவத்தையும் வழங்கும்போது பல சாதனைகள் உருவாகின்றன. அந்தவகையில் எமது கல்லூரியன் இந்துமன்றச் செயற்பாடுகள் மிகச்சிறப்பாகக் காணப்படுகின்றன. நாயன்மார்களின் குருபூசை, நவராத்திரிவிழா, சமய அறிவுப்போட்டிகள், சமய வகுப்புக்கள் என்பவற்றை நடத்தி வருவதோடு, மாணவர்களின் சமய அறிவையும், எழுத்தாக்கத்தையும் விருத்தி செய்யும் ஒரு கல்விச்சாலையாக எமது கல்லூரி விளங்குகின்றது.

எமது கல்லூரியின் சகல செயற்பாடுகளிலும் சித்திகளைப்பெற்றுத்தரும் சித்தி விநாயகருக்கு ஒவ்வொரு வெள்ளிக்கிழமை தோறும் விசேட பூசைகள் நடைபெற்று வருகின்றன. இப்பூசை ஒழுங்குகளை தரம் 1 தொடக்கம் தரம் 13 வரையான வகுப்பு மாணவர்களும், ஆசரியர்களும் பொறுப்பேற்று நிகழ்த்தி வருகின்றனர். மற்றும் மாதந்தோறும் வரும் சதுர்த்தி விரத காலங்களிலும், ஆவணிசதுர்த்தி, பிள்ளையார் கதை விரதம் போன்ற விசேட தினங்களிலும் விசேடபூசைகள் நடைபெற்று வருகின்றன. மேலும் கல்லூரியின் இந்துமன்றத்தால் சேகரிக்கப்படும் தர்மப்பணத்தில் சமூக நலன் சார்ந்த சில விடயங்களை செய்து வருகின்றோம். (வறியவர்கள், கண்பார்வை இழந்தோர், சிறு சத்திரசிகிச்சை செய்வோர் போன்றனவர்களுக்கு சிறு நிதியுதவி வழங்குதல்.) இவ்வாறான நற்பணிகளை செய்வதற்கு அருள் பாலித்துக்கொண்டிருக்கும் சித்திவிநாயகருக்கு கும்பாபிஷேகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடைபெறுவதற்கும் அதனைசார்ந்து, இம்மலரை வெளியிடுவதற்கும் பக்கபலமாகப் பங்காற்றிய கல்லூரியின் நிர்வாகத்தினர், ஆசிரியர்கள், மாணவர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்கக் குழுவினர், பழைய மாணவர் சங்கத்தினர் மற்றும் நலன் விரும்பிகள், புகைப்படப்பிடிப்பாளர்கள், அச்சகத்தினர் ஆகியோர்களுக்கு நன்றிதனை தெரிவித்துக்கொள்கின்றேன். மற்றும் விசேடமாக இவ் ஆலயத்தின் பாலஸ்தாபன கிரியைகள், கும்பாபிஷேகக் கிரியைகள் போன்றவற்றை முன் நின்று நடாத்திய காளி அம்பாள் தேவஸ்தான பிரதமகுரு வேதாகமமாமணி சிவஸ்ரீ சோ.இரவிச்சந்திரக் குருக்கள் ஐயா அவர்களுக்கும் ஏனைய குருக்கள்மார்களுக்கும் எமது இந்து மன்றத்தின் சார்பில் நன்றியை தெரிவித்துக்கொள்கின்றோம்.

**திரு.ஏ.ஜெகதீஸ்வரன்**
**ஆசிரியர்**
**இந்து மன்றம்**

**"எல்லாத் தானத்திலும் ஞானதானஞ் சிறந்ததென்பார். அது இம்மை மறுமைப்பயன் இரண்டினையும் கொடுப்பதாதலின் வித்தியார்த்திகள் மனஞ்சேராது கல்வி முயற்சியிற் கருத்தாயிருக்கும் வண்ணம் அவருக்கு வேண்டிய அன்னவஸ்திரம், புத்தகம் என்பவற்றை கொடுத்துதவுதல் பெரியதொரு புண்ணியமாகும்"**

- சுவாமி விபுலாநந்தர் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலை மாணவர்கள் அறிந்துகொள்ள வேண்டிய இந்துமத ஒழுக்கக் கோட்பாடுகள்

இன்று சமூகத்தில், இந்துக்கள் மனம்போன போக்கில் நடந்துகொள்கிறார்கள். தமக்கென வகுத்துக்கொண்ட ஒழுக்க நெறிகளைப் பின்பற்றுகின்றனர். இந்துக்களின் வாழ்க்கையின் அடிப்படையே ஒழுக்கமாகும். ஏனைய மதங்களிலிருந்து இந்து மதம் வேறுபட்டுத் தனித்துவமாக விளங்குவதற்கு அடிப்படையாக இருப்பதுவும் இந்த ஒழுக்கக் கோட்பாடுகளே எனலாம். ஒழுக்கமும் குறிக்கோளுமில்லாத மனிதனோ, சமூகமோ மேன்மையுறவோ,நிலைக்கவோ முடியாதென்பர்.

அறம் என்பது நீதி நூல்களில் **"விதித்தன செய்தலும் விலக்கியன ஒழிதலும்"** என விளக்கப்படுகிறது. அறம் மூவகைப்படும் அவையாவன ஒழுக்கம், வழக்கு, தண்டம் என்பனவாகும். இவற்றுள் ஒழுக்கம் என்பது ஒருவர் தமக்கு விதித்த நெறியில் வழுவாது நிற்றலாகும். இந்த நெறியில் நிற்பவர்கள் அற நெறியில் நிற்பவர்களாகவே கருதப்படுவர்.

**"மெய்மை பொறையுடைமை மேன்மை தவமடக்கம்**
**செம்மை ஒன்றின்மை துறவுடைமை - நன்மை**
**திறம்பா விரதந் தரித்த லோடின்ன**
**அறம் பத்தும் ஆன்ற குணம்"**

என்பது அறநெறிச்சாரச் செய்யுளாகும். இச் செய்யுளின் படி உண்மை பேசுதல், பொறுமையாயிருத்தல், உயர்வாயிருத்தல், தவவுடமை, அடக்கவுடமை, நடுவுநிலைமை, தனக்கென வாழாது பிறர்க்குதவுதல், அவாவின்மை, நல்லன செய்தல், நல்ல விரதங்களை அனுட்டித்தல் என்பன பத்து அறங்கள் என இப் பாடலில் குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்வறங்களைக் கடைப்பிடித்து வாழும் வாழ்க்கையையே ஒழுக்க நெறிசார்ந்த வாழ்க்கை எனலாம்.

**வேதங்கள் காட்டிநிற்கும் ஒழுக்கக் கருத்துக்கள்**

பண்பாடு என்பது **"திருந்திய ஒழுக்கம்"** எனவும் நாகரிகம் என்பது **"மக்களின் திருந்திய வாழ்க்கை"** எனவும் தேவநேயப் பாவணர் விளக்கியுள்ளார். வேதகால மக்கள் கடவுள் நம்பிக்கை உள்ளவர்களாக இருந்தார்கள் பிறர் நன்மைக்காகப் பணியாற்றினார்கள்.

**"என்னுடைய மனம் பிறர்க்கும் எனக்கும் நன்மையான எண்ணங்களைக் கொள்ளவும் எந்த உயிருக்கும் துன்பம் செய்யாதிருக்கவும் நல்லிச்சைகளை மாத்திரம் உடையதாக அருளுக அது என்றும் எப்பொழுதும் நன்மைகளை நாடுவதாக"** என்பன போன்ற கூற்றுக்களிலிருந்து அக்கால மக்களின் பரந்த மனப்பான்மையயை விளங்கிக்கொள்ளலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேதகால மக்கள் மோட்சம், நரகம் என்பவற்றில் நம்பிக்கை கொண்டிருந்ததால் அற வழியில் நின்று அதன்படி ஒழுகினர். மக்கள் ஒற்றுமையாக வாழ ரிஷிகள் முயற்சி செய்தனர். இயற்கை ஒரு ஒழுங்கில் ஒரு நியதியில் இயங்குவதை வேதகால ரிஷிகள் ''ரிதம்'' என அழைத்தனர் மனிதன் ஒழுக்கம் தவறும்போது ரிதத்தின் தெய்வமான வர்ணன் (ரிதாயு, ரிதர்ஷ்யகோபா) மழை, புயல் போன்ற ஆபத்துக்களை ஏற்படுத்துவான் என அஞ்சினான் அதனால் வேதகால மக்கள் ஒழுக்கத்தை வழுவாது பின்பற்றினர்.

வேதங்களில் வர்ணன் ஒரு விரலுடைய பேரரசனாகக் கருதப்பட்டான். **“இறப்பிலிருந்து இறவாமைக்கு இட்டுச் செல்வாயாக”,”தீமையிலிருந்து நன்மைக்கு இட்டுச் செல்வாயாக”,** நாமாகவே செய்த பாவங்களிலிருந்தும் எமது மூதாதையர் செய்த பாவங்களிலிருந்தும் எம்மைக் காப்பாயாக எனும் பாடல்கள் வர்ணனின் சிறப்பிற்கு எடுத்துக்காட்டுக்களாகும்.

வேதகால மக்கள் எளிய வாழ்க்கை வாழ்ந்தனர். அரசனே மக்களின் தலைவனாக இருந்தான். குடும்பத்தில் ஆண்மகன் தலைவனாக இருந்தான் அவர்களிடம் சாதிப்பாகுபாடு காணப்படவில்லை. தொழிலில் ஏற்றத்தாழ்வு இருக்கவில்லை. பால்ய விவாகம் இருக்கவில்லை. இல்லறத்தில் ஆணும் பெண்ணும் சமமாகவே இருந்தனர். உடன் கட்டை ஏறும் வழக்கம் காணப்பட்டதற்குச் சான்றுகள் இல்லை. ஒழுக்கத்தைப் பேணும் வகையில் ஆடைகள் ஆபரணங்கள் இருந்தன. உழைப்பை மேலாகக் கருதினர் எனவே வேதகால மக்கள் சமய ரீதியிலும் சமூக ரீதியிலும் பண்பாட்டு ரீதியிலும் நல்லொழுக்கத்தைப் பேணினர். எனவே வேதம் காட்டிநிற்கும் ஒழுக்கக் கருத்துக்களை அறிந்துகொள்வதனூடாக ஒரு மாணவன் தனது ஒழுக்கம் சார்ந்த இலட்சிய வாழ்க்கையை வாழ்வதற்குத் தேவையான எண்ணக்கருக்களை உருவாக்கிக்கொள்ள முடியும்.

### உபநிடதங்களில் காணப்படும் ஒழுக்கக் கருத்துக்கள்

ஒழுக்கம் என்பது மேலான அல்லது செவ்விய நெறி என உபநிடதம் வரையறுக்கின்றது. மறுபிறப்புக் கோட்பாடு உபநிடதங்களில் விதந்துரைக்கப்படுகிறது. மறுபிறப்புப் பற்றிய சிந்தனையே ஒரு மனிதனை ஒழுக்கமுடையவனாக வாழத் தூண்டுகிறது எனலாம். ஒருவரது வினைப் பயனிற்கேற்பவே அவரது பிறப்பு அமைகிறது.**”வினைப் பயனை எல்லோரும் அனுபவித்தே ஆக வேண்டும்”** என்று உபநிடதம் கூறுகிறது.

முத்திக்கு வழியாக உபநிடதம் ஒழுக்கத்தையே காட்டுகிறது. நிலையானவைகளையும் நிலையற்றவைகளையும் பிரித்துணர்தல், தன்னலக் காரியங்களிலிருந்து விடுபடுதல், நம்பிக்கை, மன அமைதி, தன்னடக்கம், துறவு மேற்கொள்ளல், பொறுமை, மனதை ஒருமைப்படுத்துதல், வீடுபேறடைய அதிக விருப்பம் கொள்ளல் ஆகிய பண்புகளை வளர்துக்கொள்ளல் முத்திக்குரிய வழியாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அது தவிர சிரவணம், மனனம், நித்தியாசனம் போன்ற வழிமுறைகளையும் உபநிடதம் காட்டி நிற்கிறது. ஆன்மாக்கள் தமது அவத்தையிலிருந்து விடுபட்டுப் பிரமத்துடன் இணைய, தியானம் சிறந்த கருவி என முண்டக உபநிடதம் குறிப்பிடுகிறது.

தைத்திரிய உபநிடதத்தில் **"மாத்ரு தேவோ பவ"** (தாயைத் தெய்வமாகப் போற்று) **"பித்ரு தேவோ பவ"**(தந்தையைத் தெய்வமாகப் போற்று) **"ஆச்சார்ய தேவோ பவ"**(குருவைத் தெய்வமாகப் போற்று) எனும் கருத்துக்கள் காணப்படுகின்றன. அத்துடன் செல்வத்தைப் புறக்கணிக்காதே. விருந்தினரைத் தெய்வமாகக் கருது, உனக்காக மட்டுமன்றி நாட்டிற்கும் பயன்படுமாறு ஏராளமான உணவினை உண்டாக்கு எவருக்கும் இடமில்லை என்று சொல்லாதே இதுவே ஒழுக்கம் என்று உபநிடதங்கள் கூறுகின்றன. உபநிடதங்களில் காணப்படும் சத்தியகாமன் ஜயபாலா கதையின் மூலம் பிறப்பு எவ்வாறு இருந்தாலும் நல்லொழுக்கத்தை உடையவர்கள் உயர்ந்த சாதியினராகவே கருதப்படவேண்டும் என்ற உண்மையை உணர்ந்துகொள்ள முடிகிறது. அதாவது தமது ஆரம்பக் கல்வியை ஒருவர் கற்பதாக இருந்தால் சிறந்த குருவிடம் சென்று தன் வர்ணத்தையும் குறிப்பிட வேண்டும். ஆனால் சத்தியகாமன் தனது தந்தை யாரெனத் தனக்குத் தெரியாது எனும் உண்மையைக் கூறியபடியால் நீ உயர்ந்த குலத்திலேயே பிறந்திருக்க வேண்டும் எனக்கூறி குரு கல்வி போதித்தார். கட உபநிடத்தில் நசிகேதன் தனது தந்தையிடம் கிழட்டுப் பசுவைத் தானம் கொடுக்க வேண்டாம் என வேண்டினான் இது அவனது அறப்பண்பைக் காட்டுகிறது. எனவே உபநிடதக் கருத்துக்கள் இன்றைய காலத்தேவைக்கும் பொருத்தமானவை என்னும் ஜதார்த்தத்தை மாணவர்கள் புரிந்து அவற்றை நல்வாழ்வுக்குப் பயன்படுத்திக்கொள்ளுதல் வேண்டும்.

**இதிகாச புராணங்கள் கூறும் ஒழுக்கக் கருத்துக்கள்**

இதிகாசங்களில் ஒரு ஆண் இராமன், தர்மனைப் போலவும் ஒரு பெண் சீதை, திரௌபதியைப் போலவும் இருக்க வேண்டும் என்பது எடுத்துக்காட்டப்படுகிறது. இதிகாசங்களும் புராணங்களும் நெறியில்லா நெறியில் வாழ்ந்தோருக்கு ஏற்பட்ட அல்லல்களும் நெறிபிறழாமல் வாழ்ந்தோருக்குக் கிடைத்த நன்மைகளும் பற்றி உணர்த்துகின்றன.

மகாபாரதத்தில் கதைகள், உப கதைகள் மூலம் ஒழுக்கக் கருத்துக்கள் போதிக்கப்படுகின்றன. தண்டநீதி, வர்ண தர்மங்கள் பற்றியும் மகாபாரதம் வலியுறுத்துகிறது. சத்தியம், தவம், கொல்லாமை. கல்வி ஞானம், விசார நோக்கு, கடமை என்பன மகாபாரதத்தின் இலட்சியங்களாகும் தனிமனிதன், குடும்பம், சமூகம் ஆகியன பின்பற்றவேண்டிய நீதிமுறைகள், குருகுலக்கல்வி, முறைகள், குருபக்தி ஆகியன கூறப்பட்டுள்ளன பெண்களின் நிலைகள், உரிமைகள் பற்றியும் கூறப்பட்டுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரச ஒழுக்கத்திற்கு விதுரனும், தர்மத்தின் தலைவனாகத் தர்மனும் வர்ணிக்கப்படுகின்றனர் தர்மத்தை நிலைநாட்டுவதே அரச தர்மம் எனப்படுகிறது. மகாபாரதத்தில் **"துஷ்டநிக்கிரக சிஷ்ட பரிபாலனமே"** அரசரக்குரிய கருமம் எனப்படுகிறது. பெரியோரை மதித்து நடக்கும் பண்பில் இராமனும் வீமனும் எடுத்துக்காட்டாக உள்ளனர். பொறுமைக்குத் தர்மனும் விருந்தோம்பலுக்குச் சீதையும், திரௌபதையும் எடுத்துக்காட்டாக உள்ளனர். ஏகபத்தினி விரதத்துக்கு இராமன் எடுத்துக்காட்டாக உள்ளான். சகோதரத்துவத்துக்கு இலக்குமணனும் பரதனும், தோழமைக்குக் குகனும், நன்றி மறவாமைக்குக் கர்ணனும், கும்பகர்ணனும் எடுத்துக்காட்டாக விளங்குகின்றனர். இராமன் போர்க்களத்தில் இராவணனைப் பார்த்து **"இன்றுபோய் நாளை வா"** என்றமை அவனது சத்திரிய தர்மத்தை எடுத்துக்காட்டுகிறது.

"ஒரு மன்னனானவன் நீதியை நிலைநாட்டுவதற்குத் துலாக்கோல் ஆட்சியையும். மது,மாது அற்றவனாகவும், சத்திரிய தர்மத்தைக் கடைப்பிடிப் பவனாகவும் தன்னுயிரைப்போல் மன்னுயிரையும் நினைப்பவனாகவும் வாழ வேண்டும் என கம்பராமாயாணத்தில் வசிட்டர் இராமனுக்கு அறிவுரை வழங்குகிறார். குரு சேத்திரப் போரின்போது சோர்ந்துநின்ற அர்ச்சுனனைப் பார்த்து கிருஷ்ணன் "தர்மத்தை நோக்குமிடத்து நீ மனம் நடுங்கலாகாது அறப்போரைக் காட்டிலும் வேறு சிறப்பு அரசனுக்கில்லை. அரசனது உயிருக்கு மேலானது அறம் எனக்கூறுவது அரச ஒழுக்கத்துக்கு ஆதாரமான கருத்தாகும். இதிகாச, புராண கால கதாபாத்திரங்களை மையமாகக் கொண்டு மாணவர்கள் தமது ஆளுமையை வளர்த்துக்கொள்ளுதல் வேண்டும்.

**பகவத் கீதை கூறும் ஒழுக்கக் கருத்துக்கள்**

ஒருவன் எப்படி வாழ வேண்டும் எப்படி வாழக்கூடாது என பகவத் கீதை தெளிவாகக் கூறுகிறது. அஞ்சாமை, அகத்தூய்மை, ஞான யோகங்களில் ஊன்றல்,ஈகை, புலனடக்கம். வேள்வி, கல்வியறிவு, தவம், நேர்மை, இன்னா செய்யாமை, வாய்மை, சினமின்மை, துறவு, பிறர் தீமை கருதாமை, பிறன் பொருள் விழையாமை, மேன்மை, நாணம். மன உறுதி, துணிவு, பொறுமை, உறுதி, தூய்மை, வஞ்சகமின்மை, செருக்கின்மை, எல்லாம் தெய்வ இயற்கைக்குப் பிறந்தவனுக்கு இயல்பாகின்றன.

நீ வாழ்க்கையில் வெற்றியடைய வேண்டும் என்றால் **"உனக்குள் இருந்து உழலும் உன்னைச் சிறைப்படுத்திக்கொள்"** எனக் கீதை கூறுகிறது. அத்துடன் **"நன்று செய்தவன் எவனும் தீய நிலையடையான்"** பலனை எதிர்பாராது கடமை புரிவதே மேலான ஒழுக்கம் எனக் கீதை கூறுகிறது. எனவே கீதை கூறுவதுபோல் ஒரு மாணவன் தனக்குள்ளே தன்னைத் தேடி தனது பலம், பலவீனங்களை இனங்கண்டு தனது பலவீனத்தைக் குறைத்து பலத்தை மேம்படுத்துதல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தர்ம சாஸ்திரங்கள் (ஸ்மிருதிகள்) கூறும் ஒழுக்கக் கருத்துக்கள்

தனிமனிதனுக்கும் சமூகங்களுக்கும் அன்றாட வாழ்க்கை நெறிகளையும் வழிகாட்டத்தக்க விதிகளையும் கூறும் வகையில் ஸ்மிருதிகள் சிறப்புப் பெறுகின்றன. வர்ணாச்சிரம தர்மங்கள், பெற்றோரைப் பேணுதல், புனித தல யாத்திரை, இல்லறத்திற்கு வேண்டிய அறங்கள், விரதங்கள் அவற்றின் பலன்கள், ஆன்மீக நலன்கள், உலகியல் வாழ்வு, என்பன பற்றியெல்லாம் தர்ம சாஸ்திரங்கள் எடுத்துக் கூறுகின்றன.

பிறப்பிலிருந்து இறப்பு வரை மனிதன் செய்ய வேண்டிய கடமைகளும் சடங்குகளும் மனு ஸ்மிருதியில் சொல்லப்படுகின்றன. அரச நெறியின் நீதிமுறைகளும் வர்ண தர்மங்களும் சமூக வழமைகளும் இதில் கூறப்படுகின்றன. அத்துடன் மனித சமத்துவம் இதில் சிறப்பித்துக் கூறப்படுகின்றது. கலப்புத் திருமணம். கூட்டு விருந்து, பெண் கல்வி, என்பன இதில் வலியுறுத்தப்படுகின்றன. மனு ஸ்மிருதியின் 8ஆம் 9ஆம் அத்தியாயங்களில் கற்பு பெண்களுக்கு மட்டுமல்ல ஆண்களுக்கும் உரியது என வலியுறுத்தப்படுகின்றது.

நாரதர் ஸ்மிருதி சமயக் கருத்துக்களை விட மனிதனது ஒழுக்கத்திற்கே சிறப்பிடம் கொடுக்கிறது. அரசன், காமம், வெகுளி, மோகம், உலோபம், மானம், மதம், எனும் இவ்வறுவகைக் குணங்களையும் களைதல் வேண்டும் என வலியுறுத்துகிறது. அத்துடன் இந்த உலகில் அந்தணராதலும், அரசராதலும். வணிகராதலும் சூத்திரராதலும் மிலேச்சராதலும் பிறப்பினாலில்லை, குணச் செயல்களினாலேயே என்கிறது.

பிராமணர் ஒழுக்கங்கெட்டால் சூத்திரருக்குக் கீழ் வைத்து மதிக்கப்படுதல் வேண்டும். சூத்திரன் ஒழுக்கமுடையவனாக இருந்தால் அவனுக்குப் பிராமண அந்தஸ்து வழங்கப்பட வேண்டும். என்கிறது அது தவிர அரசன், நாட்டு மக்கள் அனைவரையும் பாரபட்சமின்றி பேணுதல் வேண்டும். குற்றம் செய்தவனின் வலிமை, குற்றம் செய்த இடம், காலம், சூழல் என்பவற்றை ஆராய்ந்தே அவனுக்குத் தண்டனை வழங்குதல் வேண்டும். தான் வறுமைப்பட்டாலும் சூத்திரரையும் பிராமணரையும் பாதுகாக்க வேண்டும் எனப்படுகிறது. அர்த்த சாஸ்திரத்தில் அரசனே தர்மத்தின் காவலன் எனவும் அவன் நீதி தவறுமிடத்துத் தண்டம் என்ற வடிவில் தர்மம் அவனையும், சுற்றத்தையும் நாட்டையும் அழிக்கும் எனவும் கூறப்பட்டுள்ளது.

## நால்வகைப் புருடார்த்தங்கள் கூறும் ஒழுக்கக் கருத்துக்கள்

அறம், பொருள், இன்பம், வீடு எனும் நால்வகைப் புருடார்த்தங்களில் வாழ்க்கைக்கு அவசியமாகுவது பொருள். இப் பொருள் அற வழியில் தேடப்பட்டு அறவழியில் செலவிடப்பட வேண்டும். அறநெறி நிற்பதற்கும் இன்பம் துய்ப்பதற்கும் பொருள் அத்தியாவசியமாக வேண்டப்படுவதாலேயே அறம், இன்பம் ஆகிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டிற்கும் நடுவே பொருள் இடம்பெறுமாறு புருடார்த்தங்கள் ஒழுங்கமைக்கப் பட்டுள்ளன. புருடார்த்தங்களின் வழி நின்றொழுகும்போது பேராசை அறுவதுடன் அன்பு, நேர்மை, தூய்மை, கொல்லாமை, பரிவு, சகோதரத்துவம், சேவை மனப்பான்மை, எனும் சமய ஒழுக்கங்கள் எம்மில் விருத்தி பெறுகின்றன.

அறம் என்பது மனிதன் தனியாகவும் கூட்டாகவும் வாழும் இடத்து கடைப்பிடிக்க வேண்டிய மேலான ஒழுக்கங்களாகும் இவை சிவதர்மம்,குல தர்மம், ஜாதி தர்மம் சிரேனி தர்மம், ராஜ தர்மம் என்பவையாகும். அறம், பொருள் இன்பம் ஆகியவற்றை உரிய வகையில் அனுசரிப்போருக்கு வீடுபேறு கிடைக்கும்.

**"அறம் ஈனும் இன்பமும் ஈனும் திறனறிந்து**
**தீதின்று வந்த பொருள்"**

என்கிறார் வள்ளுவர்

வள்ளுவரின் வாக்குப்படி நல்பொருள் பெற்றவர்க்கே அற வாழ்க்கையும் இன்ப வாழ்க்கையும் எளிதாக வந்தடையும். அற வாழ்க்கையில் வள்ளுவர் கூறுகின்ற அன்புடைமை, விருந்தோம்பல், இனியவை கூறல், செய்ந்நன்றி அறிதல், நடுவு நிலைமை, அடக்கமுடைமை, ஒழுக்கமுடைமை, பொறையுடைமை, அழுக்காறாமை, வெ·காமை, புறங்கூறாமை, பயனில் சொல்லாமை,ஈகை, அருளுடைமை, கள்ளாமை, வாய்மை, இன்னா செய்யாமை, கூடா ஒழுக்கம், ஆகிய பண்புகள் சமுதாய விருத்தியை மேம்படுத்தும் பண்புகளாகும். இப் பண்புகளில் இயலுமானவற்றையாவது மாணவர்கள் பின்பற்ற முயற்சித்தல் வேண்டும்.

**வர்ணாச்சிரம தர்மக் கோட்பாடு கூறும் ஒழுக்கக் கருத்துக்கள்**

இந்து மதம் வாழ்க்கை முறையை மனித வளர்ச்சிப் படிமுறைகளுக்கு அமைவாகவே வகுத்துள்ளது. பிராமணர், சத்திரியர், வைசியர், சூத்திரர் என ஒவ்வொருவரும் மேற்கொள்ளும் கடமைகளின் அடிப்படையில் மக்களை நான்கு வர்ணங்களாக வகுத்துள்ளது. அதேபோல் இந்துக்களின் வாழ்க்கைப் பருவங்ளை பிரமச்சரியம், கிருகஸ்தம், வானப்பிரஸ்தம், சந்நியாசம் எனும் நான்கு ஆச்சிரமங்களாக வகுத்துள்ளது. அத்துடன் இவ் வர்ணங்களினதும் ஆச்சிரமங்களினதும் ஒழுக்கக் கடமைகளையும் வகுத்துக் காட்டியுள்ளது.

பிரமச்சரியப் பருவத்தில் இருக்கும் மாணவர்கள் இப் பருவத்தில் எவ்வாறான ஒழுக்கக் கடமைகளைப் பின்பற்ற வேண்டும் என இந்துமதம் வகுத்துக் கூறுகிறது. அதன்படி இப் பருவத்திலுள்ளவர்கள் மிகவும் எளிய முறையில் குருவின் ஆச்சிரமத்தில் வாழ்ந்து வேதம் கற்றல் வேண்டும். இப் பருவத்தில் மது, புலால், சந்தனம் முதலிய மணம் தரும் பொருட்கள், இனிப்புப் பானங்கள், பெண்கள், அழுகி ஊசிப்போன பண்டங்கள் என்பவற்றைப் பிரமச்சாரி ஒதுக்க வேண்டும். எந்த உயிருக்கும் இம்சை செய்யக் கூடாது, காமம், குரோதம், லோபம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகியவைகளில் சிக்குதல், சூதாடுதல், பிறரைத் தூசித்தல், பொய் கூறுதல் ஆகியவை தவிர்க்கப்பட வேண்டியவையாகும்.

புராதன கல்வி நிலையங்களில் இப் பருவத்தினருக்கு ஒழுக்க நெறிகள் போதிக்கப்பட்டன, பிரமச்சாரிய பருவத்தில் இருக்கும் ஒருவர் தாய், தந்தையரையும் குருவையும் தெய்வமாகப் போற்றுதல் அவசியமாகும்.கல்வி கற்று முடிந்ததும் "சமாவர்த்தனம்" என்ற சடங்கு செய்து குருவிற்குத் தட்சணை அளித்துவிட்டுப் பிரமச்சாரி தன் வீடு திரும்பி மணம் செய்துகொண்டு இல்வாழ்க்கையில் புக வேண்டும். பிரமச்சரியப் பருவத்தில் இருக்கும் மாணவர்கள் தமது வாழ்க்கையை ஒழுங்கமைத்துக்கொள்ள இக் கருத்துக்களைக் கவனமாகப் படித்துத் தமது வாழ்க்கையில் கடைப்பிடிக்க முயற்சித்தல் வேண்டும்.

**சைவ சித்தாந்தம் கூறும் ஒழுக்கக் கருத்துக்கள்**

சைவ சித்தாந்தம் மாணவர்களின் வாழ்க்கைக்கு வழிகாட்டும் பல்வேறு ஒழுக்கக் கோட்பாடுகளை தன்னகத்தே கொண்டுள்ளது. அந்த வகையில் நால்வகை நெறிகள், தீட்சை, சிவ சின்னங்களைப் பேணுதல், ஆலய சேவை, ஆலய தரிசனம், பஞ்சாட்சரஜபம், அடியார்களுக்குத் தொண்டு செய்தல், குருவின் வழிகாட்டலில் வாழ்தல், குருலிங்க சங்கம வழிபாடு, சிவ புண்ணியச் செயல் என்பன போன்ற சமய ஒழுக்கத்திற்கு அடிப்படையான செயற்கருமங்களை சைவ சித்தாந்தக் கோட்பாடுகள் எடுத்து விளக்குகின்றன.

**"வினை விதைத்தவன் வினை அறுப்பான்,**
**தினை விதைத்தவன் தினை அறுப்பான்"**

எனும் பழமொழிக்கேற்ப சைவ சித்தாந்தம் கன்மக் கோட்பாட்டின் அடிப்படையில் சஞ்சிதம், பிராரர்த்தம், ஆஹாமியம் எனும் கன்ம வினைகளை எடுத்துக்காட்டி அவற்றிலிருந்து விடுபடுவதற்குரிய ஒழுக்கக் கோட்பாட்டினையும் சைவ சித்தாந்தம் காட்டி நிற்கிறது. அழகிடல், மெழுகிடல், திருவிளக்கேற்றல், நந்தவனம் அமைத்தல், ஆலய புனருத்தாரணம் செய்தல், கும்பாபிஷேகம் செய்வித்தல் ஆகியன போன்ற சிவ நல்வினைகளையும் சைவ சித்தாந்தம் ஆன்மீக ஈடேற்றத்திற்குக் காட்டி நிற்கிறது. எனவே சைவ சித்தாந்தம் காட்டி நிற்கும் ஒழுக்கக் கோட்பாடுகளை ஒவ்வொரு மாணவனும் கடைப்பிடித்தல் வேண்டும்.

**நீதி நூல்களில் கூறப்பட்டள்ள ஒழுக்கக் கோட்பாடுகள்**

**"ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்"**

எனும் குறளில் வள்ளுவர் ஒழுக்கத்தின் மேன்மையை எடுத்து விளக்கியுள்ளார். இதற்கேற்ப நாவலரும் நாம் இந்த மானிடப் பிறப்பெடுத்தது கடவுளை வணங்கி முத்தியின்பம் பெறும் பொருட்டேயாகும் என்கிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**"நல்லொழுக்கமில்லாரிடஞ் சேர்ந்த நல்லோர்க்கு நல்லொழுக்கமில்லாச் சொல் நண்ணுமே"** என நீதிவெண்பா கூறுகிறது. அதாவது ஒழுக்கநெறி நிற்பவர்கள் நல்லோர்கள் அவர்கள் தீயோருடன் சேர்ந்தால் அவர்களுக்குப் பழிச் சொல் வந்து சேரும் என்பது இச் செய்யுளின் பொருள் மேலும் நீதி வெண்பாவில் "மனம் வேறு சொல்வேறு மன்னு தொழில் வேறு வினை வேறுபட்டவர் போல் மேவும் - அனமே மனமொன்று சொல்லொன்று வான்பொருளுமொன்றே கனமொன்று மேலவர் கண்" எனப்படுகிறது. அதாவது ஒழுங்கற்ற செய்கையை உடைய கீழோரிடத்தில் மனமும் சொல்லும், செயலும் வேறுவேறாய் இருக்கும். இதற்கு மாறாகப் பெரியோரிடத்தில் மனமுஞ் சொல்லும் செயலும் ஒன்றாகவே இருக்கும். இத்தகைய உண்மை நிலையின்றி, உண்மைப் பொருளாகிய இறைவனை அடைதல் சாத்தியமாகாது எனப்படுகிறது.

**"கற்கக் கசடறக் கற்பவை கற்றபின் நிற்க அதற்குத் தக"** என்கிறார் வள்ளுவர். அதாவது மாணவர்கள் நூல்களைப் படித்தால் மட்டும் போதாது அதனை வாழ்க்கையிலும் பின்பற்றுதல் வேண்டும்.

**"கெட்டாலும் மேன்மக்கள் மேன்மக்களே - சங்கு சுட்டாலும் வெண்மை தரும்"** என்கிறார் ஔவையார். ஔவையார் மேன்மக்கள் எனக் கூறுவது ஒழுக்கமுடையவர்களையே, என்பதை மாணவர்கள் புரிந்துகொள்ளுதல் வேண்டும். **"நல்லாரைக் காண்பதுவும் நன்றே - நலமிக்க நல்லார் சொற் கேட்பதுவும் நன்றே நல்லார் குணங்கள் உரைப்பதுவும் நன்றே அவரோடிணங்கி இருப்பதுவும் நன்றே"** என்று நடைமுறை வாழ்க்கையில் ஒருவர் ஒழுக்கமுடன் வாழும் வாழ்க்கை பற்றி ஔவையார் குறிப்பிட்டுள்ளார் எனவே மாணவர்கள் ஒழுக்கக் கோட்பாடுகளை நீதிநூல்களைக் கற்று அறிந்துகொள்ள வேண்டியதுடன் அவற்றை முறையாகவும் பின்பற்றுதல் வேண்டும்.

மாணவர்களின் ஒழுக்கப்பெறுமானங்கள் தற்காலத்தில் மாற்றத்துக்குட்பட்டு வருகின்றன. மாணவர்கள் மனம்போன போக்கில் செயற்படுகின்றனர். பெற்றோர்களும் தமது பிள்ளைகளின் அறிவு விருத்தியில் மாத்திரமே அதிக கவனம் செலுத்துகின்றனர். வானொலி, தொலைக்காட்சி, கைபேசி, மலினமான சிறுகதைகள், நாவல்கள் என்பவற்றிலிருந்து போதைப்பொருள் பாவனை, பாலியல் துஷ்பிரயோகம் வரை இன்று மாணவர்களின் வாழ்க்கை சீரழிந்துள்ளது.

இன்று பாடசாலை மாணவர்கள், பல்வேறு சமூகவிரோதச் செயல்களில் ஈடுபடுவது தொடர்பில் தினமும் பல்வேறு செய்திகள் சமூக ஊடகங்களில் வெளிவருகின்றன. தமக்குக் கற்பிக்கும் ஆசிரியர்களின் வீடுகளை உடைத்தே கொள்ளையிடுதல், ஆசிரியைகளின் கைப்பைகளிலுள்ள கைபேசிகளையும், பணத்தையும் திருடுதல், போதைப் பாவனை போன்றவைகளை உதாரணங்களாகக் கொள்ளமுடியும். இம் மாணவர்களை இச் சூழ்நிலைக்கு இட்டுச்சென்றது வீடா? பாடசாலையா? சமூகமா? நாடா? அல்லது இவை அனைத்துமா? என்பது தொடர்பாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாதப்பிரதிவாதங்களில் ஈடுபடுதல் அல்லது பட்டிமன்றம் நடாத்துதல் என்பதைவிட எமது இந்து மத நீதிநூல்களில் வெளிப்படுத்தப்பட்டுள்ள ஒழுக்கக் கோட்பாடுகளை மாணவர்கள் அறிந்துகொள்ள வழி செய்தல் வேண்டும். அவற்றைப் பின்பற்ற மாணவர்களைத் தூண்டுதல் வேண்டும்.

ஒரு பாடசாலைக்கு நான் ஆசிரிய மேற்பார்வைக்குச் சென்றபோது ஒரு சில மாணவர்களின் சீருடைகளில் சைவ நாயன்மார்களின் பெயர்கள் பொறிக்கப்பட்டிருந்ததைக் கண்டேன். இது அந்த மாணவர்கள் தவறு செய்ய முனையும்போது குறித்த அந்த நாயனாரின் பெயர் அவர்களைத் தடுக்கும் எனத் தாம் எதிர்பார்ப்பதாகக் குறித்த சமய ஆசிரியர் எனக்கு விளக்கமளித்தார். இது எனக்கு ஒரு நல்ல எடுத்துக்காட்டாகத் தெரிந்தது.

பாடசாலைகளில் ஒரு வாரத்துக்கு ஒதுக்கப்படும் இரண்டு பாடவேளைகளில் சமய பாட ஆசிரியரால் பாடத்திட்டத்தைப் பூர்த்தி செய்வதைத்தவிர மாணவர்களின் ஒழுக்க விருத்தியில் மேலதிக கவனம் செலுத்த முடியாது. மாணவர்களே சுயமாகத் தமது ஒழுக்க விழுமியங்களை வளர்த்துக்கொள்வதற்குத் தேவையான அறிவையும் அனுபவங்களையும் பெற்றுக்கொள்ள வேண்டும். அந்த வகையில் இந்து நீதி நூல்களில் விரவியுள்ள ஒழுக்கக் கருத்துக்களை மாணவர்களுக்கு வெளிப் படுத்துவதும் அவற்றைத் தமது வாழ்க்கையில் பின்பற்றத் தூண்டுவதுமே இக் கட்டுரையின் நோக்கமாகும்.

**Mr.K.Punniyamoorthi(AAL)**
**President**
**Addalaichenai NCOE**
**BA(Peredeniya), LLB(SL), PGDE-Merit(NIE),**
**PGDEM-Merit(NIE), MEd(NIE), MATE(OUSL), Mphil in Edu(Colombo)**

**“ வீரதீரமே மெய்நெறிக்கு அறிகுறி வீரமில்லாதவனிடத்து ஞானமுதிப்பதில்லை”**

- சுவாமி விபுலாநந்தர் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விநாயகர் வழிபாடு

விநாயகர் என்ற சொல்லின் பொருள் சிறப்பான தலைவன் அல்லது தலைவர்களுக்கெல்லாம் தலைவன் எனப் பொருள்படும். எந்தக் கடவுளை வழிபட்டாலும் எக் காரியங்களைத் தொடங்க முன்பும் முதலிலே வழிபடும் தெய்வம் விநாயகக் கடவுளாகும். விநாயகரின் தோற்றம் பற்றி திருஞானசம்பந்தர் அருளிய தேவாரம் பின்வருமாறு விளக்கி நிற்கிறது.

**"பிடியதன் உரு உமை கொளமிகு கரியது**
**வடி கொடு தனதடி வழிபடுமவர் இடர்**
**கடி கண பதிவர அருளினன் மிகு கொடை**
**வடிவினர் பயில்வலி வலமுறை இறையே"**

உமையானவள் பெண்யானை உருவெடுத்தாள் சிவன் ஆண் யானை உருவெடுத்தான். இருவரும் இணைந்தனர். தன்னை வழிபடுபவர்களுக்கெல்லாம் துன்பங்களை நீக்குகின்ற கணபதி பிறக்க சிவன் இவ்வாறு அருள் செய்தார். என்பது இத் தேவாரத்தின் பொருள் ஆகும்.

யானை முகத்தையும் பிறைச் சந்திரன் போன்ற தந்தத்தையும் உடையவர் விநாயகர். இவரது ஐந்து திருக்கரங்களில் மோதகம் ஏந்திய கை அருளல் தொழிலையும், அங்குசம் ஏந்திய கை அழித்தல் தொழிலையும், பாசம் எந்திய கை படைத்தல் தொழிலையும், எழுத்தாணி ஏந்திய கை காத்தல் தொழிலையும், தும்பிக்கை மறைத்தல் தொழிலையும் குறித்து நிற்கிறது.

ஞான வடிவினனான விநாயகருக்கு பல பெயர்கள் உண்டு. பிள்ளையார், விக்னேஸ்வரன், கணேஷன், கணபதி, ஐங்கரன், ஏகம்பன், லம்போதரன், மூஷிக வாகனன், வேழமுகன், கஜமுகன், ஓம்காரன், பிரணவன் எனப் பல நாமங்கள் உண்டு. விநாயகர் மேலான தலைவர், விக்னேஷ்வரர் விக்கினங்களைத் தீர்ப்பவர், ஐங்கரன் ஐந்து கரங்களை உடையவர், கணபதி கணங்களுக்கெல்லாம் அதிபதி, பிள்ளையார் கேட்ட வரம் தந்து பிள்ளைக் குணம் உடையவராதலால் பிள்ளையார் எனப் பெயர் பெறுகிறார். இவ்வாறு பெயருக்கெல்லாம் பல காரணங்கள் உண்டு.

மேலும் உருவின் தத்துவத்தை நாம் நோக்கும் போது யானைத் தலையும், பெருவயிறும், மனித உடலும், ஐந்துகரத்தையும் உடைய ஒரு விந்தையான வடிவமானவர். விநாயகர் வடிவம் மேலே விலங்கின் தலை இடைக்கு கீழே மனித உடம்பு இடைக்கு மேல் கழுத்து வரை தேவ உடம்பு. ஒரு கொம்பு ஆண் தன்மையையும் மற்றொன்று பெண் தன்மையையும் குறிக்கும். யானைத் தலை அஃறிணை, தெய்வ உடம்பு உயர்திணை இவற்றை உற்று நோக்கி ஆராய்ந்தால் பிள்ளையார் தேவராய், மனிதனாய், விலங்காய், ஆணாக, பெண்ணாக, உயர்திணை அஃறிணையாக விளங்குகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதையும் எழுதத் தொடங்கும் முன்பும் செயல் முழுமையாக அமைய வேண்டும் என்பதற்காகவும் பிள்ளையாரின் துணை வேண்டி பிள்ளையார் சுழி போடுகின்றோம். பிள்ளையார் வடிவம் ஓங்கார வடிவம். அது ஓங்கார எழுத்து மருவி பிள்ளையார் சுழியாயிற்று. ஒலி வடிவமும் வரி வடிவமும் சேர்ந்து எழுத்தாகிறது. ஒலி வடிவம் குறிப்பது வட்டம் வரி வடிவம் குறிப்பது கோடு இந்த இரண்டும் சேர்ந்து பிள்ளையார் சுழியாயிற்று. ஒலி வடிவம் நாதம் வரி வடிவம் விந்து என்று கூறுவார். உயிரும் உலகமும் உண்டாக இவை இரண்டும் வேண்டும்.

விநாயகர் வழிபாட்டிற்கு ஏற்ற நாள் வெள்ளிக் கிழமையாகும். அதிலும் வைகாசித் திங்கள் வளர் பிறையில் வரும் முதல் வெள்ளிக்கிழமையில் ஆரம்பித்து ஒவ்வொரு வெள்ளியிலும் தொடர் நோன்பிருந்து வழிபடுவது சிறப்பு. கிழமைகளில் இந்துக்களுக்கு வெள்ளிக்கிழமை முக்கியமானதோ அப்படியே திதிகளுள் சதுர்த்தி திதி விநாயகருக்கு மிக்வும் பிடித்த நாள். மாதந்தோறும் வளர்பிறை நாளில் சதுர்த்தி நோன்பு இருக்கலாம். இவற்றுள் முக்கியமானது ஆவணி மத வளர்பிறை சதுர்த்தி நாளில் வரும் விநாயகர் சதுர்த்தி விரதமாகும். இந்நாளில் சிறப்பான முறையில் பூசை வழிபாடுகள் இடம்பெறும். இந்நாளில் விரதமிருப்பவர் கூடுதலான பலனை அடைவர் எனக் கூறுகின்றனர்.

மேலும் விநாயகர் சஷ்டி விரதத்தை நோக்கும் போது இவ்விரதமானது கார்த்திகை மாத தேய்பிறை பிரதமை முதல் மார்கழி மாத வளர்பிறை சஷ்டி வரையிலான இருபத்தொரு நாட்கள் கொண்ட விரதமாகும். இவ்விரதம் அனுஷ்டிப்பதால் கஷ்டங்கள் விலகி மங்களம் உண்டாகும்.

விநாயகரை வழிபடுவோருக்கு அருளும் சகல சௌபாக்கியங்களும் கிட்டும். அறுகம்புல், வில்வ இலை, அரசம் இலை, முல்லை இலை, விஷ்ணு கிராந்தி இலை கரிசளாங்கண்ணி இலை, அரளி இலை போன்ற பத்திரங்களையும் சாத்தியும் எருக்கலம் பூ, வெள்ளெருக்கலம் பூ, சூரியகாந்தி பூ போன்ற மலர்களால் அர்ச்சித்தும் வழிபாடு செய்யலாம்.சர்க்கரை, பொரி, மோதகம், எள், கடலை, அவல், விளாம்பழம், மாதுளை, கரும்பு, அவரை, பச்சரிசி சாதம் போன்றவற்றை நைவேத்தியங்களாகவும் படைத்து வழிபாடு செய்யலாம். விநாயகரை வழிபடும் முறையினை நாம் நோக்கும் போது நெற்றியிலே குட்டிக் கும்பிடுவது தோப்புக்கரணம் போட்டுக் கும்பிடுவது சிதறு தேங்காய் உடைத்து கும்பிடுவது என்பன முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.

நெற்றியில் குட்டிக் கும்பிடுவது எல்லாப் பிழைகளையும் பொறுத்துக் கொள்ளுமாறு வேண்டுவதுடன் எமது இரு கைகளையும் மடக்கி நெற்றியின் இரு மருங்கிலும் மூன்று முறை குட்டி வழிபடும் போது இருமருங்கிலும் உள்ள மூளைக்கான நாளங்கள் உணர்ச்சியடைந்து தியான வழிபாட்டிற்கு ஏதுவாக அமைகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோப்புக்கரணம் போட்டு வழிபடும் போது இரண்டு காதுகளையும் அதாவது வலது கை இடது காதையும், இடது கை வலது காதையும் மாறி மாறி பிடித்துக் கொண்டு குனிந்து எழுந்து செய்யும் வணக்கமுறையாகும். இது மூன்று முறை செய்யப்பட வேண்டும். விநாயகருக்கு சிதறு தேங்காய் உடைத்து வழிபடுவது தீய வினைகள் மற்றும் துன்பங்கள் நீங்கி இறுதியில் தூய பக்தி என்னும் அமுத நீர் வெளிவருவது போல் விநாயகரின் அருள் எமக்கு கிடைக்கும்.

மேலும் நாம் நோக்கும் போது திருக்கோணமலை நகரில் அல்லது மாவட்டத்தில் விநாயகர் வழிபாடு சிறப்புற்று விளங்கியிருந்தன என்பதற்கு இங்கு பல விநாயகர் ஆலயங்கள் சான்று பகர்கின்றன. அவற்றுள் ஆலடி விநாயகர் ஆலயம், இரத்தின சிங்கப் பிள்ளையார் ஆலயம், கற்பக விநாயகர் ஆலயம், மடத்தடி வீரகத்தி பிள்ளையார் ஆலயம், சமாது விநாயகர் ஆலயம், தெய்வானைப் பிள்ளையார் ஆலயம், மனையாவெளி திருச்சிற்றம்பல பிள்ளையார் ஆலயம், கடற்கரை பிள்ளையார் ஆலயம், 1ம் குறுச்சி கம்பனிப் பிள்ளையார் ஆலயம், உவர்மலை விநாயகர் ஆலயம், சின்னத் தொடுவில் பெரிய பிள்ளையார் ஆலயம், செல்வநாயகபுரம் ஆலடி விக்னேஷ்வரர் ஆலயம், அன்புவழிபுரம் தில்லையம்பல பிள்ளையார் ஆலயம், சாம்பல் தீவு வடலயம்பதி பிள்ளையார் ஆலயம், சீனக் குடா சித்தி விநாயகர் ஆலயம், கன்னியா பிள்ளையார் அலயம், கடற்படைத் தள பிள்ளையார் கோவில், உவர் மலை வழிவிடு விநாயகர் ஆலயம் என்பவற்றைக் குறிபிட்டுக் கூற முடியும். இவற்றுள் காலத்தால் முற்பட்டது வீரகத்தி பிள்ளையார் ஆலயம். 1650 ஆம் ஆண்டளவில் சிறு பிள்ளையார் கோவிலாக கட்டப்பட்டு அதனுடன் ஒரு மண்டபத்தையும் கட்டியதாக அறிய முடிகிறது.

நாட்டில் ஏற்பட்ட அசாதரணமான சூழ்நிலையால் இடிக்கப்பட்டு மீண்டும் தற்போது புனரமைப்பு பணிகள் ஆரம்பிக்கப்பட்டு முடிவுறும் தறுவாயில் காணப்படுகின்றது. இதனூடக திருக்கோணமலை நகரிலும்/மாவட்டத்திலும் விநாயகர் வழிபாடு சிறப்புற்று விளங்கியது எனக் கூறமுடியும்.

**திரு. வீரசிங்கம் கோணேஸ்வரன்**
**இந்துக் கலாசார உத்தியோகத்தர்**
**திருக்கோணமலை மாவட்டம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆடி மாதத்தின் சிறப்பு

ஆடி மாதம் அருமையானது. பன்னிரண்டு மாதங்களில் ஆடிமாதத்திற்கென்று கூடுதலான சிறப்புகளும் பெருமைகளும் உள்ளன. அதே வேளை தை மாதத்திற்கும் ஆடி மாதத்திற்கும் ஒரு பிணைப்பு காணப்படுகிறது.

அயனங்களான உத்தராயனம் தை மாதத்திலும் தட்சிணாயனம் ஆடி மாதத்திலும் தொடங்குகின்றன. அயனங்கள் மாறுகின்ற நான்கு சிறப்புடைய மாதங்களான தை அமாவாசையும், ஆடி அமாவாசையும், தைக் கிருத்திகையும், ஆடி கிருத்திகையும் தை மற்றும் ஆடி வெள்ளிகளும் மிக்க மேலானவையாகும்.

**"ஆடிப்பட்டம் தேடி விதை"** என்பார்கள் பட்டம் விதைக்கப்படும் பருவம். உழவர்கள் இந்த மாதத்தில் பயிர்களை விதைப்பார்கள். பயிர்கள் பசுமையாகவும் செழுமையாகவும் வளர்ந்து பக்குவம் அடைந்ததும் அறுவடைக்குரிய மாதமாக விளங்குவது தையாகும். **"தை பிறந்தால் வழி பிறக்கும்"** பயிர்கள் செழிப்புற்று வளர நிலம், நீர், சூரியன் தேவை அனைவரும் அதற்காக சூரியனை வழிபடும் நாள் தைப்பொங்கலாகவும், ஆற்று நீரை வழிபடும் நாள் ஆடிப் பெருக்காகவும் இந்த இரட்டை வழிபாடுகள் மூலம் நாம் நன்றியையும் பயிர்கள் சிறப்பாக வளர வேண்டும் என்று நம் விருப்பத்தையும் தெரிவிக்கின்றோம். இது போன்ற காரணங்களால் இவ்விரு மாதங்களும் இணைந்தவையாக காணப்படுகிறது.

இதைவிட ஆடி மாதத்தின் தனிச் சிறப்புகள் என்ற வகையில் நோக்குகின்ற போது கிழமைகள், நட்சத்திரங்கள், திதிகள், பண்டிகைகள், விரத வழிபாடுகள் என்ற அடிப்படையில் இதன் சிறப்புக்களை எடுத்து நோக்கலாம்.

ஆடி ஞாயிறு மாரியம்மன் வழிபாட்டிற்கு முதன்மையானது. ஆடி மாதம் முழுவதும் மாரியம்மன் கோயில்களில் சிறப்பு வழிபாடுகள் நிகழும். குறிப்பாக ஆடி ஞாயிற்றுக் கிழமைகளில் கோயில்களிலும் வீடுகளிலும் அனைவரும் மாரியம்மனை வழிபட்டு கூழ் வார்ப்பார்கள். அதே போல் பல தெய்வங்களையும் வழிபட ஆடி வெள்ளி ஏற்றவையாகும். **"ஆடி வெள்ளி தேடிக் குளி"** என்பது பழமொழி. குளி என்பது வழிபடுவதற்காக நீராடு என்பதாகும்.

அடுத்து நட்சத்திரங்களை நோக்குகையில் ஆடிக்கிருத்திகையன்று பக்தர்கள் காவடி ஏந்தி முருகனை வழிபடுகின்றனர். அன்று முருகன் ஆலயங்களிலும் ஏனைய ஆலயங்களிலும் சிறப்பு வழிபாடுகள் நடைபெறுகின்றன. அம்மன் வழிபாட்டிற்கு சிறப்புக்குரிய நாளாக ஆடிப்பூரம் அமைந்துள்ளது. இந்நாள் பார்வதி அவதரித்த நன்னாள். அம்மன் தவம் செய்கின்ற நாள் என்றும் அம்மனுக்கு வளைகாப்பு நாள் என்றும் ஆடிப்பூர நாளை வழிபடுகின்றனர். சில கோயில்களில் பூரத்தன்று பிரம்மோற்சவம் தொடங்குகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமாவாசைகளுள் தை அமாவாசையும், ஆடி அமாவாசையும், புரட்டாதி அமாவாசையும் மேன்மையானவை. இவை மூன்றும் பிதிர்களை கடவுளை வழிபடத்தக்க நாட்களாகும். ஆடிப் பௌர்ணமி ஹயக்கிரிவர் அவதரித்த நாள். இவர் எல்லா வித்தைகளிற்கும் ஆதாரமானவர். இவரை இந்நாளில் வழிபட்டு அவரின் அருளை நாம் பெற்றுக்கொள்ளலாம். பௌர்ணமி நாட்கள் அனைத்தும் சிறப்பானவை. தெய்வ வழிபாடு பலவற்றை இந்நாளில் நிறைவேற்றுவது மரபு. அனைத்து கோயில்களிலும் சிறப்பு வழிபாடுகள் நடைபெறும்.

நாம் கொண்டாடும் பண்டிகைகளில் ஆடிப்பெருக்கும் ஒன்றாகும். கிழமைகள், திதி, நட்சத்திரங்கள் என்பவற்றையும் கருதாமல் ஆடி மாதம் பதினெட்டாம் நாள் கொண்டாடப்படுவது ஆடிப்பெருக்காகும். இதனை பதினெட்டாம் பெருக்கு என்றும் கூறுவர். ஆடிப்பெருக்கன்று காவிரியின் இரு கரைகளிலும் மகளிர் திரண்டு நிலவளம் பெருக அருள் புரியும் காவிரித்தாயை சித்திர அன்னப் படையலுடன் வழிபடுகின்றனர். காவிரித் தாயை வழிபடுவது இயற்கை வழிபாடு. இது சக்தி வழிபாட்டின் ஒரு அம்சம். ஆடி மாதத்தில் சக்தி வழிபாடு சிறப்புக்குரியதாகும்.

விரத வழிபாடுகளில் நாக சதுர்த்தி விரதம், கருட பஞ்சமி விரதம், ஸ்ரீவரலட்சுமி விரதம், சதுர் மாத விரதம் என்பன ஆடி மாதத்தில் சிறப்புக்குரிய விரதங்களாகும். ஆடி மாத வளர்பிறை சதுர்த்தியில் மகளிர் விரதமிருந்து நாகத்தை வழிபடுவது நாக சதுர்த்தி விரதமாகும். இதனால் நாக தோஷம் நீங்கும். மகப்பேறு கிடைக்கும். புற்றுக்கு பால் வார்த்து புற்று மண்ணையே கவசக் காப்பாக அனைவரும் நெற்றியில் புனைவர். ஆடி அல்லது ஆவணி மாதம் சுமங்கலிகள் விரதமிருந்து லட்சுமியை வழிபடுவது ஸ்ரீவரலட்சுமி விரதமாகும். இவ்விரதத்தினூடாக மாங்கலிய பயனையும் நீண்ட ஆயுளையும் பெற்றுக் கொள்ளலாம். நாக சதுர்த்திக்கு அடுத்த நாள் வருவது கருட பஞ்சமி. மகளிர் விரதமிருந்து கருடனை வழிபட்டால் மாங்கல்ய பாக்கியம் மகப் பேறு கிடைக்கும் செல்வம் பெருகும் உடல் ஆரோக்கியம் பெறும்.

ஆடி மாதம் தொடக்கம் நான்கு மாதங்கள் மழைக் காலம். அப்போது துறவிகள் வெளியில் செல்லாமல் விரதமிருந்து சமய நூல்களை ஆராய்ச்சி செய்து நான்கு மாதங்களை கழிப்பது சதுர் மாத விரதமாகும். ஆடிப்பௌர்ணமி அன்றே இவ்விரதம் தொடங்குகின்றது. அன்றைய நாள் குரு வழிபாட்டிற்கும் சிறந்த நாளாகும். அதனால் இவ்விரத நாளை வியாச பௌர்ணமி என்றும் குரு பௌர்ணமி என்றும் சிறப்பித்துக் கூறுவர்.

மேற்கூறிய சிறப்புக்களை நோக்குகையில் ஆடி மாதமானது சிறப்புக்குரிய மாதமாக திகழ்வதை நாம் காண்கின்றோம். ஆகவே எம்மால் முடிந்தவரை இம்மாதத்தில் இறை வழிபாட்டில் ஈடுபட்டு இறை அருளையும் ஆசியையும் பெற்றுக்கொள்வோம்.

**திருமதி. ருத்ரா அமிர்தலிங்கம்**
**ஆசிரிய ஆலோசகர் (ஓய்வு நிலை)**
**வலயக்கல்வி அலுவலகம். (திருக்கோணமலை)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சங்கடம் தீர்க்கும் சங்கடகரன்

**"வாக்குண்டாம் நல்ல மனமுண்டாம் மாமலரான்**
**நோக்குண்டாம் மேனி நுடங்காது பூக்கொண்டு**
**துப்பார் திருமேனி தும்பிக்கையான் பாதம்**
**தப்பாமற் சார்வார் தமக்கு"**

சைவ சமயக் கடவுள்களில் பெரும்பாலானோரால் வழிபடும் முதன்மைக் கடவுள் விநாயகர். விநாயகர் வழிபாடு இந்தியாவிலும் நேபாளத்திலும் முதன்மையாக காணப்படுகிறது. இவர் கணபதி, ஆனைமுகன், கஜமுகன், பிள்ளையார், விக்னேஸ்வரன், ஒற்றைக்கொம்பன் போன்ற பல பெயர்களால் அழைக்கப்படுகின்றார்.

அனைத்திற்கும், பூத கணங்களிற்கும், புதிய தொடக்கத்திற்கும், மகிழ்ச்சிக்கும் உரியவர் விநாயகர். விநாயகரை முழு முதற் கடவுளாகக் கொண்டு வழிபடும் சமயம் காணாபத்தியம் ஆகும். இந்த காணாபத்தியம் பின்பு சைவ சமயத்தோடும் வைணவ சமயத்தோடும் ஒன்றிணைந்தது. வைணவர்கள் விநாயகரை **'தும்பிக்கை ஆழ்வார்'** என அழைப்பார்கள். ஆன்மாவை பொருந்தி நின்று மலங்களை தொழிற்படுத்தி இருமை (இம்மை மறுமை) இன்பத்தை அளிப்பது ஞானம். அந்த ஞானத்தை அளிப்பது விநாயகரின் திருவடிகளே. கணபதியின் பேழை வயிறு ஆகாசமும் எல்லா உலகங்களும் உயிர்களும் தம்முள் அடங்கியிருக்கின்றன என்பதை குறிக்கின்றது. பிள்ளையாரின்

**பாயாசத்தை ஏந்திய கை பாசத்தையும்**
**தந்தம் ஏந்திய கை காத்தலையும்**
**துதிக்கையானது அனுக்கிரகத்தையும்**
**அங்குசம் ஏந்திய கை அழித்தலையும்**
**மோதகம் ஏந்திய கை அருளையும்**

குறிக்கின்றது. மகாபாரதம் எழுதும் போது அது இடையில் நிற்கக் கூடாது என்பதற்காக தமது ஒற்றைத் தந்தத்தை ஒடித்தமைக்கான காரணம் அறிவிற்கு முன்னுரிமை தர வேண்டியதை உணர்த்துவதாகக் கூறப்படுகிறது.

விநாயகரின் சுளகு போன்ற காது செவியில் விழும் செய்திகளை எல்லாம் கேட்டாலும் நல்லவற்றை மட்டும் தேர்ந்துகொள்ள வேண்டும் என்பதைக் குறிக்கின்றது. விநாயகருக்குரிய மூர்த்தங்கள் 32 ஆகும். இந்து புராணங்களில் விநாயகர், சிவன் பார்வதி ஆகியோரின் மகனாகவும் முருகனின் அண்ணணாகவும் இவருடைய வாகனம் மூஷிகம் எனவும் குறிப்பிடப்படுகின்றது. நமது சம்பிரதாயத்தில் அனைத்து சுப காரியங்களிலும் பூஜைகளிலும் முதலில் துதிக்கப்படுபவர் கணபதி. விக்கினங்களை உடைத்தெறியும் வல்லமை பெற்றவர் விக்னேஸ்வரர்.

தன்னலமற்ற பக்தியின் மூலம் விநாயகரின் அனுக்கிரகத்தை எளிதாக பெற்றுக் கொள்ளலாம். விநாயகரை அனுதினமும் ஆதரிக்கலாம். எனினும் மாதம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோறும் வரும் சங்கடஹர சதுர்த்தி அவருக்கு உகந்த நாளாகும். ஆவணி மாதத்தில் வரும் சதுர்த்தி ஆனைமுகனை வழிபட அதியற்புத நாளாகும். இத்தினத்தில் அவரை பூசித்து அவருக்கு பிடித்தமான நைவேத்தியங்களை படைத்து பூசித்து அவரது அருளை பூரணமாக பெற்றுக்கொள்ளலாம்.

பிள்ளையாரின் வேழமுகம் விளையாட்டுப் பிள்ளைகளிற்கும் மிக விருப்பமானதாகும். விநாயகரின் தும்பிக்கை சின்னஞ்சிறு கனியையும் எடுக்கும். பெரியமரத்தையும் வேரோடு பிடுங்கி விடும். இடத்திற்கு ஏற்ப புரிந்து நடந்தால் நம் வாழ்வு சிறக்கும் என்பதே இதன் சூட்சுமமாகும்.விநாயகர் தன் உருவம் மூலம் நமக்கு அறிவுறுத்தும் செய்தி இதுதான் எல்லோரும் அணுகும் வண்ணம் எளிமையாயிரு, இனிமையாயிரு, பொறுமையாயிரு, அப்படி இருப்பாயானால் எல்லோராலும் விரும்பப்படுவாய் என்பதாகும்.

**"எல்லாம் வல்ல விநாயகர் பாதம் பணிந்து நல் வாழ்வு வாழ்வோமாக"**

செல்வி. ந.நற்குனம்
ஓய்வு நிலை ஆசிரியை
தி/இ.கி.ச ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரி.
தேசியபாடசாலை
திருகோணமலை

**"உணவின்றியேனும் உயிர் வாழ முடியும். நன்மை செய்யாமல் உயிர் வாழ முடியாது என்னும் நிலையே சுத்த சன்மார்க்க நிலையாகும்"**

- சுவாமி விபுலாநந்தர் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிள்ளையார் சுழிபோட்டு

**"பிள்ளையார் சுழிபோட்டு நல்லதை தொடங்கிவிடு....."**

எனும் அழகாக ஆரம்ப வரியினை பிள்ளையார் பற்றிய பாடலொன்றின் மூலம் நாம் யாவரும் கேட்டு ரசித்து அநுபவரீதியாக உணர்ந்துள்ளோம். மூவுலகிற்கும் காவலன், முருகனுக்கு மூத்தவன், தவசக்திக்கும் உரிமையானவன், தாய் தந்தை உறவின் உயர்வினை உணர்த்தியவன், யார் பிள்ளை, யார் பிள்ளை என்ற போது பிள்ளையார் எனும் பெயர் கொண்டு வந்தவன், விக்கினங்களைத் தீர்க்கும் ஈஸ்வரன் இவை போன்று இன்னும் பல அற்புதங்கள் கொண்ட முழுமுதற் கடவுள் சித்தி விநாயகர் இந்துக் கல்லூரி வளாகத்தில் வீற்றிருந்து இன்று வரை கல்லூரி மாணவச் செல்வங்களை கல்வி, ஒழுக்கம், சமய விழுமியங்களில் சிறந்து விளங்க அருளாட்சி வழங்கிக் கொண்டிருக்கின்றார் என்றால் மிகையாகாது.

மேலும் இக் கல்லூரியானது தட்ஷணகைலாயமாம் திருக்கோணேஸ்வரர் மாதுமைஅம்பாள் சகிதம் வீற்றிருக்கும் திருமலை நகரினில் உலகளாவிய ரீதியில் வியாபித்து விளங்கும் ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் ஆலயம், பலகோடி மக்கள் தேடிவரும் ஆலடி விநாயகர் ஆலயம் என்பன அருகே அமைந்துள்ள சூழலில் தி/இ.கி.ச.ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரி நிர்மாணிக்கப்பட்டுள்ளது சிறப்பம்சம் என்றே கூறவேண்டும்.இத்துணை சிறப்பு வாய்ந்த கல்லூரி அகத்தினுள் நிறுவப்பட்ட அழகான, அளவான ஆலயமானது கல்லூரி ஆசிரியர்கள், மாணவர்கள் மட்டுமல்ல திருமலை வாழ் இந்துக்களாகிய எம்மையும் பக்திபூர்வமாக கவர்ந்துள்ளது என்றால் மிகையாகாது. அதுமட்டுமன்றி இவ்வாலய முன்றலில் நிற்கும் போது யாழ் நல்லை முருகன் கோயிலில் நிற்பது போன்றதொரு பிரம்மையும் ஆலயவடிவமைப்பு உணர்த்துகின்றது.

அன்றிலிருந்து இன்று வரை இந்துக் கல்லூரியின் சகலவிதமான முன்னேற்றங்களிலும் உறுதுணையாக இருந்து அருள்பாலித்து விநாயகப் பெருமானின் குடமுழுக்குப் பெருவிழாவில் வெளிவரும் கும்பாபிஷேக மலரில் ஒரு சிறு இதழாக சித்திகள் பலதரும் சித்திவிநாயகரின் சிறப்பினை வரைவதில் பெருமையடைகிறேன். **"நெஞ்சிற்கு நிம்மதி ஆண்டவன் சந்நிதி", "ஆலயம் தொழுவது சாலவும் நன்று"** எனும் முதியோர் முதுமொழிக்கு ஏற்ப மாணவச் செல்வங்கள் சிறு வயதிலிருந்தே கல்வியில் மட்டுமன்றி, கடவுள் வழிபாட்டிலும் தம்மை முழுமையாக ஈடுபடுத்திக்கொள்ள முடிகிறது. இவ்வாறாக கல்லூரி அகத்தினுள் ஆலயத்தினை நிர்மாணிப்பதனால் மட்டுமே நல் மாணவச் செல்வங்களை உருவாக்கிக்கொள்ள முடிகிறது. **"ஓம் கணேஷாய நமஹ"** எனும் ஒரு மந்திரமே நம்மை வளப்படுத்தி வாழ வைக்கும். புதிய தொடக்கம், மகிழ்ச்சி ஆகியவற்றிற்குச் சொந்தக்காரரே விநாயகக் கடவுள்தான். இவர் கணங்களின் அதிபதி என்பதால் கணபதி எனவும், யானை முகத்தினைக் கொண்டுள்ளதால் யானைமுகன் எனவும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தர்ம வழியில் நிற்பவர்களின் துன்பங்களைத் தீர்க்கும் ஈஸ்வரன் என்பதால் விக்கினேஸ்வரர் எனவும் அழைக்கப்படுகின்றார்.

கோயில் என்று பெயர் வைத்து கூரையும் விமானமும் போட்டுக் கட்டடம் எழுப்ப வேண்டும் என்பது கூட இல்லாமல் அரசமரத்தடி, குளக்கரை, முச்சந்தி, நாற்சந்தி, தெருமுனை என வானம் பார்க்க எழுந்தருளியிருக்கும் ஒரே சுவாமி விநாயகக் கடவுள்தான் என்றால் மிகையாகாது. மேலும் தும்பிக்கையான் துணையினை நாம் நம்பிக்கையுடன் நாடினால் நாளும் கோளும் கூட நம்மை ஆட்டி வைக்க முடியாது. இன்று நம்மிடையே பரவலாக கலங்கவைத்துக் கொண்டிருக்கும் கிரக மாற்றங்கள் யாவும் பிள்ளையாரை வணங்கும் போது கதிரவனைக் கண்ட பனிபோல மாறிவிடும். மாதமிருமுறைவரும் விநாயகர் சதுர்த்தி, சங்கடஹர சதுர்த்தி போன்ற தினங்களிலாவது பிள்ளையார் ஆலயம் சென்று மனம் உருகி வழிபடும் போது நம்மை நெருங்கி வரும் துன்பங்கள் மறைந்துவிடும் என்பதில் ஐயமில்லை. பிள்ளையாரை வணங்கி எந்தவொரு செயலினைத் தொடங்கினாலும் தன்னம்பிக்கையுடன் வெற்றிகரமாக எதிர்பார்த்த பலனுடன் செவ்வனே செய்து முடிக்கலாம் என்பது நம்பிக்கை. எனது கணவர் மகன் இருவரும் இந்துக் கல்லூரியின் பழைய மாணவர்கள் என்ற வகையிலும், இறை பக்தர்களில் யானும் ஒரு பக்தை என்பதினாலும் இந்துக் கல்லூரியின் ஆசிரிய, மாணவர்கள், நலன் விரும்பிகள் அனைவரின் இம்முயற்சியானது காலங்காலமாய் நிலைத்து என்றென்றும் தொடர்ந்து மேன்மை கொள் சைவ நீதி திருமலை நகரில் மட்டுமல்ல உலகமெல்லாம் விளங்க வேண்டும் என எல்லாம் வல்ல இறைவனை நாடி விடைபெறுகின்றேன்.

**திருமதி. நித்தியலட்சுமி இரத்தினவடிவேல்**
**ஓய்வு நிலை நிர்வாக உத்தியோகத்தர்.**
**பிரதேச செயலகம் - கிண்ணியா.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பன்குளம் – பறையன்குளம் எல்லைக்காளி அம்மன் கோவில்

தேவாரப்பாடல் பெற்ற தெய்வத் திருநகராம் திருகோணமலையிலிருந்து அநுராதபுரம் செல்லும் 25km தூரத்தில் முதலிக்குளம் சந்தியில் இருந்து வடக்கே ஒரு சிறுசாலை பிரிந்து செல்கிறது. அந்த சாலையில் 10km தூரத்தில் நல்லபிட்டியா என்ற கிராமம் இருக்கிறது. அங்கிருந்து காட்டுப்பாதை ஊடாக 5km தூரம் சென்றால் பறையன்குளம் எல்லைக்காளி அம்மன் கோவிலை அடையலாம்.

மிகப்பெரிய மகா மரங்களை அடர்த்தியாகக் கொண்ட பயங்கர வனமாக காணப்படுகிறது. நல்லபிட்டியாறுஅங்கே ஓடிக் கொண்டிருக்கிறது. பளிங்கு போன்ற நீர் பாறைகளில் மோதி சலசலவென்று ஓடுகின்ற ஓசையை அந்த அமைதிச் சூழ்நிலையில் நன்கு அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது. யானை, புலி, கரடி போன்ற பயங்கர மிருகங்கள் சுதந்திரமாக வாழும் இடம் பறையன்குளம்.

1966ம் ஆண்டு பன்குளத்திலிருந்து ஒரு சிங்கள அன்பர் அமரர் டாக்டர்.க.சு.சித்திரவேல் அவர்களிடம் வந்து இந்த காளி அம்மன் பற்றி கூறினார். அதை செவிமடுத்த அவர் திரு. முத்தையாசாமியாரிடம் இந்த காளியை பார்த்து வரும்படி கூறினார். திரு. முத்தையாசாமியார் பல அன்பர்களோடு சேர்ந்து எல்லைக் காளி அம்மனை தரிசனம் செய்தார். அமரர் நாகராசா கணபதிபிள்ளை, செல்லத்துரை சாமியார், ஸ்ருடியோ அரசு, வட்ட விதானை தம்பிராசா போன்றோர் அம்பாளை தரிசிக்கச் சென்றிருந்தனர். திரு. முத்தையா சாமியார் அன்பர்களின் உதவியுடன் ஒரு சிறு குடிசையை அமைத்து அம்பாளை இருத்தி பூசித்து வந்தார். இவ்வாறு வழிபட்டுக் கொண்டு வருகையில் 1970ம் ஆண்டு திரு.வி. குலதிலகரெட்ணம், திரு. சி.சுப்பிரமணியம், இரங்கசாமி ஏகாம்பரம், திரு. மா.குமாரசாமி ஆகியோர் இணைந்து ஆரம்பகால தைப்பூச குழுவாக இயங்கி தைப்பூச பொங்கலை நடத்தி வந்தனர்.

1976ம் ஆண்டு திரு.முத்தையா சாமியார் திருக்கோணமலை மாவட்ட இந்து இளைஞர் பேரவையிடம் ஒப்படைத்தார். பேரவையின் சார்பில் அடியேன் ஆலயத்தை பொறுப்பேற்றேன். 1976ம் ஆண்டு தைபூசத்திற்கு முதல்நாள் பன்குளம் சித்தி விநாயகர் ஆலயத்திலிருந்து மடைபெட்டி தூக்கும் வைபவத்துடன் நிகழ்வுகள் ஆரம்பமாகி கால்நடையாக முதலிக்குளம் முருகன் ஆலயம், பாரதிபுரம் சிவன் ஆலயம், ஔவைநகர் அம்மன் ஆலயம் முதலிய ஆலயங்கள் ஊடாக ஆலயத்தை அடைந்து இரவு, காலை நிகழ்ச்சிகளை நடாத்தி அடுத்தநாள் தைப்பூசத் தினத்தன்று பொங்கலை நடாத்தி அபிஷேகப் பூசைகளுடன் சிறப்பாக வழிபாடு செய்து வந்தோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாலயத்தில் மிக அழகிய பத்திரகாளி அம்பாள் சிலை விக்கிரகம் ஒன்று இருக்கின்றது. இந்த விக்கிரகமே கடந்தகால வரலாற்றை ஆராய்வதற்கு காரணியாய் இருந்து வருகின்றது. இடது காலை மடக்கி வலது காலை தொங்கவிட்டபடி சதுப்புயங்களை கொண்டவளாக பீடத்தில் அம்பாள் அமர்ந்திருக்கின்றாள். ஆலயத்தைச் சுற்றி இடும்பன் மலை, மச்ச மலை, வெள்ளண்டி மலை, அசுவத் மலை, நாச்சியார் மலை, பிள்ளையார் மலை எனப் பல மலைகள் உள்ளன. இவற்றுள் இடும்பன் மலை மிகவும் விசேஷமானது. யோகிகள் தவம் செய்தது போன்றதாகவும் காணப்படுகிறது.

இலங்கையை சோழ மன்னர்கள் ஆண்ட காலத்தில் திருக்கோணேஸ்வரத்திற்கு எல்லைக் காணியாக இருந்துள்ளது. தற்போது திருக்கோணமலை மாவட்டத்தில் இருந்து இளைஞர் பேரவையினர் சிற்ப சாஸ்திர விதிக்கமைவாக ஆலயத்திருப்பணியை மேற்கொண்டு வருகிறார்கள். தைப்பூச பொங்கலை விட நோன்மதி தினங்கள் தோறும் பூசை வழிபாடுகள் சிறப்பாக நடைபெற்று வருகிறது. தைப்பூச பொங்கல் தினத்திற்கு தமிழ், சிங்கள மக்கள் உழவு இயந்திரங்களில் பெருந்திரளாக கலந்து கொண்டு இந்நிகழ்வை சிறபித்து வருகின்றனர்.

**எல்லைக் காளியின் கும்பாபிஷேகத்தை விரைவில் எதிர்பார்ப்போம்.**

"சிவஞானச்செல்வர்"
செ.சிவஞானசுந்தரம்
எல்லைக்காளி அம்மன்,
ஆலய பரிபாலன சபையின் ஆலோசகர்

**"எதனையும் நாம் போதித்துக் காட்டுவதிலும் பார்க்க சாதித்து காட்டுவதால் நமக்கும் நமது சமூகத்துக்கும் பெருநல முண்டாகும்"**

- சுவாமி விபுலாநந்தர் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைவ வாழ்க்கையில் விரதங்கள்

உலகின் கண்ணே தோன்றிய பல சமயங்களுள் சாலச் சிறந்ததும் முதலும் முடிவும் இல்லாததுமான சமயம் சைவ சமயமாகும். இச் சமய விதிகள் வேதம், ஆகமம், சித்தாந்தம், வேதாந்தம், புராணம், இதிகாசம், ஜோதிடம், திருமுறை, திருவாசகம் என்னும் முதல் நூற் பொருள்களின் மரபு வழியாக அமைந்தவை. மெய்யடியார்கள் பலர் இதன் வழி வாழ்ந்து முக்தியடைந்து உலகு வாழ வழி வகுத்து வைத்த பெருமை சைவ சமயத்திற்கு அளப்பரியது. சைவம் சிவசம்பந்தம் உடையது. சிவத்தோடு தொடர்புபடுத்துவது. சமுத்திரத்தின் அலைக்கு ஓய்வு கிடையாது. அதே போல் சைவன் எனப்பிறந்தவன் எவனும் மனதை அல்லற்பட விடாது அமைதியாகவும் பக்தியாகவும் சமயப்பற்றுடனும் சமய அறிவுடனும் விளங்க வேண்டும். இதற்கு உபகாரமாகவே சமய சாஸ்த்திர நூல்கள் அமைந்து விளங்குகின்றன.

சைவர்களின் சமய வாழ்க்கையில் விரதங்கள் முக்கிய இடத்தை வகிக்கின்றன. விரதம் என்றால் ஒரு தீர்மானத்தைக் கட்டுப்பாடுடன் மேற்கொள்ளுதல் எனப் பொருள்படும். ஒரு குறிப்பிட்ட காரணத்திற்காக, குறிப்பிட்ட வகையில் தன்னைக் கட்டுப்படுத்துதலே விரதமாகும். விரதம் அல்லது நோன்பு அனுஷ்டித்தல் பிற சமயத்தவரிடமும் காணப்படுகிறது. விரதம் வேறுபட்ட பல சமயங்களையும் இணைத்து நிற்கும் பொற்சங்கிலியாகும். இதனால்தான் **"காப்பது விரதம்"** என ஔவை பிராட்டியாரும் எல்லா மக்களுக்கும் பொதுவான முறையில் கூறினார். ஆத்திசூடியின் அச்சாணி போலத் திகழும் இச்சிறு வாக்கியத்திற்கு பலரும் வெவ்வேறு விதமாக உரை கண்டனர். உயிர்களுக்குத் தீங்கு செய்யாமல் அவற்றை காப்பாற்றுவதே விரதம் என்பது ஒரு உரையாகும். கொல்லா விரதம் குவலயமெல்லாம் பரவ வேண்டும் என்ற அடிப்படைக் கொள்கையினின்று எழுந்ததே இவ்வுரை. **"விரதமாவது மனம் பொறிவழி போகாது நிற்றற் பொருட்டு உணவை விடுத்தேனும் சுருக்கியேனும் மனம் வாக்கு காயம் என்ற மூன்றினாலும் கடவுளை விதிப்படி மெய்யன்போடு விஷேஷமாக வழிபடுதலாகும்"** என ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் இரண்டாம் சைவ வினாவிடையில் கூறியுள்ளார். விரதத்தைக் காப்பாயாக என்பதே இதன் பொருளாகும்.

சாதாரண ஒருவர் தமது வாழ்க்கையில் கடைப்பிடிக்க வேண்டிய அறவொழுக்கங்களை முறைப்படி கொண்டொழுகுவதும் உண்மையில் விரதமாகும். ஆன்மீக மேம்பாட்டிற்காக நாம் கையாள வேண்டிய நியம நெறியே விரதம் என்பது இதனால் புலப்படும். அந்தக்கரணங்கள் பொறிவாயிலால் புலன்களில் செல்லாது தூயவாதற் பொருட்டு அனுஷ்டிக்கப்படுவது விரதம். திருக்குறளாசிரியர் இவ்விரதத்தை துறவறப்பகுதியில் தவமும் தவங்காத்தலும் என வகுத்துள்ளார். அந்தக் கரணங்கள் புலன்களில் செல்லாது நிற்றற்குதவி புரிவது. புலான் மறுத்தல் முதலியன தவங்களாம். விரதங்களே அக்காலத்தில் தவம் எனப்பட்டது. இதனையே **"தவம் செய்வார் தம் கருமம் செய்வார்" என்றார்** பொய்யாமொழியார். **"விரதமெல்லாம் மாண்ட மனதார் மனத்தான் கண்டான்"** என்றார் அப்பர் சுவாமிகள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூசை வழிபாட்டில் ஈடுபாட்டையும் பங்களிப்பையும் பெறுவதற்காக ஏற்பட்ட ஒரு வகை நியமங்கள்தான் விரதங்கள் என்ற பெயரில் இருக்கின்றன. விரதம் என்ற பெயர்க்காரணத்தை ஆராய்ந்தால் இது விளங்கும். **"வ்ரத சங்கலப பூர்வக புண்ய கரும"**சங்கற்பத்துடன் செய்கின்ற சமய காரியமும் மற்றும் புண்ணியச் செயல்களும் விரதமாகும் என்று வடமொழி அகராதியில் சொல்லப்பட்டுள்ளது. இதன் பிரகாரம் சங்கற்பமுள்ளதாயிருத்தல், சமய காரியமாயிருத்தல், நன்மையானதாயிருத்தல் என்ற மூன்று கருத்தும் விரதத்திற்கு இருக்கக் காண்கிறோம்.

ஒருவர் தாம் செய்யும் காரியமொன்றுக்கு மனம், வாக்கு, காயம் மூன்றையும் நேர்ப்படுத்திக் கொள்ளுதல் சங்கற்பமாகும். அதாவது அந்தக்கரணங்கள் மூன்றினாலும் தூய்மை பெற்று மனக்கட்டுப்பாடும் அடைந்த பின் செய்யப் போகும் செயலினைச் சொல்லி அதனை நிறைவேற்றி வைப்பதாக மனதில் உறுதி கொள்ளுதலே சங்கற்பமாகும். தர்ப்பையினால் மோதிரம் போல் செய்யப்பட்ட பவித்திரத்தை வலது மோதிர விரலில் அணிந்து கொண்டு தர்ப்பாசனத்தில் அமர்ந்திருப்பதாக பாவனை செய்து இரு தர்ப்பைகளை காலின் கீழிட்டு வேறு சில தர்ப்பைகளை மடித்து மோதிர விரலினூடு வைத்துக் கொண்டு வலது முழந்தாளின் மேல் விடுத்து வைக்கப்பட்ட இடக்கை மேல் மூடிய வலக்கையை வைத்துக் கொண்டு சங்கற்பம் செய்யப்படும். சிறிது அட்சதை, பூ என்பனவும் வலக்கைக்குள் வைத்துக் கொள்வர். சங்கற்பத்தில் கிரியை நிகழும் இடம், வருஷம், மாதம், பட்சம், திதி, நட்சத்திரம் கிழமை என்பவற்றைக் கூறி இன்ன நோக்கத்திற்காக இன்ன கிரியை செய்யப் போகிறேன் என மனத்திட்பம் செய்வது மரபு.

நோன்பின் மகத்துவத்தை திரு.வி.க அவர்கள் பின்வருமாறு கூறுகின்றார். "நோன்பு உடலை வளர்க்கும் உடல் நலத்திற்கென அன்பால் காப்பது உடலோம்பலுக்கு இன்றியமையாதது நோன்பு. நோன்பு வயிற்றிலுள்ள பழைய நஞ்சை எரித்து அன்றாடம் உண்ணும் உணவு சீரணமாகத் துணைபுரிய உள்ளுறுப்பகளைத் துலக்கித், தூய்மைபடுத்தி ஈரலுக்கு ஊக்கமூட்டி, குருதியோட்டத்தை செம்மைப்படுத்தவது.

விரதமானது தூல உடம்பினையும், அந்தக்கரணங்களையும் ஆன்மாவையும் செம்மைப்படுத்தும். சிறப்பு வாய்ந்தது. **"மருந்தென வேண்டாவாம் யாக்கைக் கருந்திய தற்றது போற்றி யுணின்"** எனும் தமிழ் மறை உடம்பில் வியாதி நீக்கம் ஏற்படுவதை விளக்குகின்றது.

விரதத்திற்கு உபவாசம் என்பது ஒரு பயாயம். உபவாசத்திற்கு மேற்பட்ட ஔடதமில்லை. ஆகையால் உபவாசம் இருப்பது மிகுந்த புண்ணியமளிப்பதாகும். உபவாசம் என்றால் கிட்ட இருத்தல் என்ற கருத்து பிராமணங்களில் இடம்பெற்று வந்திருக்கின்றது. எதற்குக் கிட்ட எனில் வழிபடுபொருட்டு கிட்ட என்பார். கிட்ட என்பது இடத்தினாலும்தான், மனச்சேர்க்கையாலும்தான் அகலாதிருத்தலைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிக்கும். இடத்தால் கிட்டுதல், மனத்தால் கிட்டுதல் இரண்டும் சைவத்தில் மகா முக்கியமானவை.

"உபவாசம் சக்தியில்லாதலுக்குச் சக்தியளிக்கும். புண்பட்டவனுக்கு புண் ஆற்றும், நோயாளிக்கு ஔடதமாகும், கோபித்தவனது கோபத்தை அகற்றும், வறுமைப்பிணியால் அவதிப்படுவனுக்கு செல்வம் கொடுக்கும், தேகத்திலுள்ள அழுக்குகளை நீக்குவதற்காகவும், இயந்திரங்களின் விஷப்பற்று நீங்க ஒருவேளை புசிப்பதையும், உபவாசம் இருப்பதையும் விரதங்களாக மனிதர் கொள்கின்றனர்" என ஒரு நூலாசிரியர் எழுதியுள்ளார்.

**"உண்ணாவிரதம் உடலின் பிணி போக்கித் திண் கருத்து மீயும் திறன்"** என்பது அறநூல் விரதம் நம்முடைய உடம்பிலுள்ள நோய் நீக்கத்திற்கு இன்றியமையாதது என்பது நன்கு புலப்படும். இயற்கை ஆதரவாளர்கள் உபவாசத்திற்கே முதன்மை கொடுக்கின்றனர். விரதம் என்ற கருத்து வாழ்க்கை அனுசரணைகளில் பல்வேறு முறைகளில் நின்று மனிதரை நல்வழிப்படுத்தி வருகின்றது. பொய் சொல்லாமை, வெகுளாமை, பிறர் பொருளை இம்சியாமை, ஐம்பொருள் நுகர்ச்சியில் அளவு கடந்து செல்லாமை, என்பன சம பானியமாக அனைவருக்குமுரியன. இவையும், சார்க்க பூர்வமான அனுஷ்டிக்கப்பட்டால் தத்தமது அளவில் விரதங்களாவதுடன் மற்றும் உலக விரதங்களுக்கு இவை அஷ்கமுமாகும்.

**"கொல்லா விரதமொன்று கொண்டலரே நல்லோர் கென்றார் தாயுமானவர்"** அன்றியும் இவற்றிலொன்று வழுவினாலும் விரதமும் வீறு கொள்ளாது. தன் கணவனையே அன்றி பிறரெவரையும் ஒரு பொருளாக கருதாது பதி விரத்தியம் என்பது பெண்களுக்கு விசேட விரதமாக கொண்டாடப்படுகிறது. இத்தகைய விரத நிலை எல்லோர் சமயத்திலும் அவரவர் போக்கிற்கேற்ப அமைந்திருக்கிறது. ஆனால் சைவ சமயம் அவ்வெல்லாவற்றையும் ஒருமுகப்படுத்திக் கொண்டுபோய் பூஜை வழிபாட்டுச் சாதனமாக அமைகின்றது. ஏற்கனவே முடிந்துவிட்ட கிருதயுகம், திரேதாயுகம், துலாபரயுகம், என்ற மூன்று யுகங்களிலும் வாழ்ந்தவர்கள் இறைவனை யடைவதற்கு ஜப்தவாய்கள், யாக வாய்கள் போன்ற பெரிய வழிபாட்டு முறைகளை மேற்கொள்ள வேண்டியிருந்தது. ஆனால் கலியுகத்தில் நாம் பஜனையும், பக்தி மார்க்கமான விரதாதி அனுஷ்டானங்களுமே இறைவனையடைய போதுமான வையாகும். இவ்வுலக சைவ வாழ்க்கையில் விரதங்கள் முக்கியத்துவம் பெற்று விளங்குவது வியப்பில்லை.

**திருமதி. மயூரதி சண்முகதாஸ்**
**B.A (Hons), Diploma in Edu.**
**தி/ஸ்ரீ சண்முக இந்து மகளிர் கல்லூரி.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுவாமி விபுலானந்தரின் ஆன்மீகமும் இசைத்தமிழும்

19ம் நூற்றாண்டின் பின்னரைப் பகுதியில் ஈழத்தின் கிழக்குக் கோடியில் காரைதீவு சிற்றூரில் பிறந்த மயில்வாகனம் 1922 ஆம் ஆண்டில் இலங்கையில் இருந்து சென்னைக்குச் சென்று இராமகிருஷ்ண சங்கத்தில் சேர்ந்து **"பிரபோத சைத்தன்யர்"** எனும் பிரம்மச்சாரிய நாமம் பெற்றார். பின்னர் 1924 ஆம் ஆண்டு சித்திரைப் பௌர்ணமியன்று இராமகிருஷ்ன மடத்துறவு சிவானந்த மாமுனியால் தீட்சை பெற்று துறவறம் மேற்கொள்ளத் தக்கதாக சுவாமி விபுலானந்த அடிகளார் என்ற சிறப்புப் பெயர் பெற்றார். மயில்வாகனம் விபுலானந்தராக மாறியதற்கு அவரின் பன்முகப்பட்ட ஆளுமைகள் மட்டுமல்லாது மனுக்குல நேசிப்பும் காரணமாகும்.

பண்டைய துறவற வாழ்க்கை முறைக்கு மாறாக சமூகத்தில் மக்களோடு இணைந்திருந்து அவர்களிற்கு ஆற்றும் தன்னலமற்ற தொண்டினையே இறைவழிபாடாகக் கொண்டு உய்யும் புதிய துறவு மார்க்கத்தை இன்றைய காலத்தின் தேவையாக அமைத்தார். சமூகத் துறவியாக வாழ்ந்து அவர் செய்த தொண்டுகள் அளப்பரியன. சென்னையில் இருந்து ஈழம் திரும்பிய அவர் அந்நியர் ஆதிக்கத்தில் மதம், மொழி, கலாசாரம் முதலியவற்றில் தனது தனித்துவத்தை இழந்து கொண்டிருந்த தமிழினத்தை தட்டி எழுப்பும் முயற்சியில் ஈடுபட்டு கல்வி நிறுவனங்கள் பலவற்றை நிறுவினார். ஆன்மீகவாத சன்மார்க்க நெறியாளராக வாழ்ந்தார். கடமையொழிந்த வேளைகளில் வறுமையிலும் சாதியப் பாதிப்பாலும் நலிவுற்ற மக்களிடையே உலாவினார். அவர்களின் குறைநிறைகளை கேட்டு ஆறுதல் கூறினார். அதனால் பெரிய கோயில் வாத்தியார் என சாதாரண மக்களால் விரும்பி அழைக்கப்பட்டார். இவரது மனித நேய யாத்திரை இந்திய கோபுரங்களில் பரிவோடு நிகழ்ந்தன. எனவேதான் சமூகத்திலிருந்து அவர் பிரிவுற்று நிற்கவில்லை. அவரது சிந்தனைகள், நடத்தைகள் என்பன அவரை ஏனைய அறிஞர்களிலிருந்து வேறுபடுத்தியது.

மெய்ஞ்ஞானத்தையும், விஞ்ஞானத்தையும் தனது இரு விழியாகக் கருதியதோடு கலைஞான வளர்ச்சிக்காகவும் காலமெல்லாம் அர்ப்பணிப்புடன் பணியாற்றினார். விபுலானந்த அடிகளாரின் போதனைகள் நிறைந்த வாசகங்கள் மீண்டும் மீண்டும் படிக்கத் தோன்றும் தனித்துவமான தமிழ் சந்தநடை என்பதில் எள்ளளவும் சந்தேகமில்லை. சிறு பராயம் முதல் பிறந்த ஊராகிய காரைதீவில் கண்ணகியம்மன் கோயிலுக்கு திருவிழாக் காலத்தில் வழிபட செல்வார். அக்காலத்தில் இடம்பெறும் நாட்டார் இசைப்பாடல் நிகழ்ச்சிகளும், கண்ணகி வழக்குரை மற்றும் உடுக்கிரை ஆகியனவும் மயில் வாகனத்திற்கு இசையில் ஆசையையும் ஆர்வத்தையும் தூண்டியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலை இலக்கியங்களில் அடிகளாருக்கு இருந்த ஈடுபாடே பண்டைய தமிழிசைக்கருவியாகிய யாழை மீண்டும் வடிவமைத்தது. யாழ் நூலையும் விளக்கமாக எழுதி அச்சேற்றி 1947.06.05 ஆம் மற்றும் 6ஆந் திகதிகளில் கரந்தை தமிழ் சங்கத்தில் அரங்கேற்றி தமிழிசைக்கும் தமிழிசைக் கருவிகளிற்கும் புத்துயிர் அளித்தார். இவ் யாழ் தமிழ் நாட்டிலே தோன்றி வளர்ந்த வரலாற்றை அவர் தமது யாழ் நூலில் கீழ்வருமாறு எழுதியிருக்கின்றார்.

"சரித்திரக் கால எல்லைக் கெட்டாத காலத்திலே வில்யாழெனப் பெயரிய குழவியாயுதித்து மழலை யாழ் என்றும் சிறுமியாகி பாணனோடும் பாடினியோடும் நாடெங்கும் திரிந்து ஏழைகளும் கனிப்பெய்த இன் சொற் கூறி பின்பு பேரியாழ் என்னும் பெதும்பைப் பருவமெய்த பெரும் பாணரோடு சென்று குருநில மன்னரும், முடிமன்னரும், தமிழ்ப் புலவர்களும், கொடை வள்ளல்களும் கேட்டு வியப்பெய்தும் வண்ணம் நயப்பட உரை பகிர்ந்து அதன் பின் மங்கைப் பருவமெய்து அப்பருவத்திற்கேற்ப புதிய ஆடையும் அணிகலன்களும் பூண்டு நாடக அரங்கத்திலே திறமை காட்டி மடந்தைப் பருவம் எய்தலும் திருநீலகண்ட பாணரொடும் மதங்க சூளா மணியரொடும் அம்மை அப்பர் உறைகின்ற திருக்கோயில்கள் பலவற்றை வலம் வந்து இசையினாலே அன்பருள்ளத்தினை உருக்கி முத்தமிழ் வித்தகராற் பாராட்டப்பட்டு அரிவைப் பருவம் வந்து எய்தலும் அரசிளங்குமாரிகளுக்கு இன்னுயிர் பாங்காகி அவர்க்கேற்ற தலைவரை அவர்பாற் சேர்த்துச் சீரும் சிறப்பும் எய்திய யாழ் என்னும் மொழி நங்கை மறைந்து போக மீண்டும் அடிகளாரின் முயற்சியினால் உயிர் பெற்று பொலிவுடன் விளங்குகின்றாள்."

1931ஆம் ஆண்டு ஆனி மாதம் அண்ணாமலை பல்கலைக்கழகத்திற்கு பேராசிரியராக போயிருந்த பொழுது அவர் ஆற்றிய அரும்பணி ஒன்றினை நாம் இங்கு குறிப்பிடப்பட வேண்டியிருக்கிறது. சுப்பிரமணிய பாரதியார் எழுதிய பாட்டுக்கள் யாவும் மிகுந்த உணர்ச்சியுடன் முன்னேற்றமான கருத்துக்கள் பொதிந்துள்ளனவாய் இருந்தாலும் இலக்கண,இலக்கியங்கள் கற்றறிந்த பண்டிதர்கள் அவை பழைய யாப்பமைதியோடும் மரபோடும் முற்றப் பொருந்தாமையின் காரணமாக அவை உண்மையான தமிழ் கவிதைகள் அல்ல என வெறுத்தார்கள். அப்பாடல்களுக்குரிய மேலான சிறப்பையும் கொடுக்க மறுத்தனர். ஆனால் அடிகளார் அண்ணாமலை நகர் அடைந்த போது அங்கு பாரதி கலகம் என்ற ஒரு சங்கம் கூட்டி அப்பாட்டுக்களை இசையறிந்த புலவர்களைக் கொண்டு இசையுடன் பாடுவித்தார். அதன் பின்னரே பாரதியார் புகழும் பாட்டுக்களும் நாடெங்கும் பரவின. தேடாதிருந்த பாரதியாரை தமிழுலகம் கனம் பண்ண வைத்த பெருமை விபுலானந்த அடிகளாருக்கே உரியதாகும்.

1981இல் மட்டக்களப்பில் அரசாங்கத்தினால் சுவாமி விபுலானந்த அடிகள் இசை, நடனக் கல்லூரி நிறுவப்பட்டதையும் அஞ்சல் முத்திரை வெளியிடப்பட்டமையும் அடிகளாரின் கலைப்பணி ஆர்வம் எந்தளவிற்கு மிளிர்ந்தது என்பது சொல்லிலடங்கா என்பது தெளிவு. தற்போது விபுலானந்த இசை,நடனக் கல்லூரி கிழக்கிலங்கைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல்கலைக்கழகத்துடன் இணைந்து விபுலானந்த அடிகள் அழகியல் கற்கை நிறுவகம் எனத் தரமுயர்த்தப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

1942 இல் சுவாமி விபுலானந்தர் உரையாற்றுகையில் வடமொழிப் பிரபந்தமும், சங்கீதரத்னா கரமும் சிறந்த முறையில் மொழி பெயர்க்கப்படுமானால் அம்மொழி பெயர்ப்புக்கள் தமிழிசையின் மறுமலர்ச்சிக்கு உதவும் என்று குறிப்பிட்டுள்ளார். சுவாமி விபுலானந்தர் குறிப்பிட்டவற்றிலிருந்து அவர் வடமொழி இசை நூல்களை மட்டுமல்ல நடன நூல்களையும் கற்றிருந்தார் எனத் தெரிய வருகின்றது. பதஞ்சலியின் யோக சூத்திரங்களையும் தமிழாக்கம் செய்துள்ளார். இசையின் இயக்கம், வேகம் என்பவற்றை எப்படி அறியலாம் என்பதற்கு அடிகளாரின் கணித பௌதீக அறிவு பெருந்துணையாக அமைந்துள்ளது. இளங்கோவடிகள் தந்த சிலப்பதிகாரத்தில் இசைத்தமிழின் இனிமையான இயல்பையும் மேலான இன்பத்தையும் எல்லோரும் இனிதாக சுவைக்க வைத்தவர் சுவாமி விபுலானந்தர். வாய் மொழிப் பாடல்களான நாட்டுப்பாடல்களை மக்கள் மறக்க முன் தொகுத்து பதிப்பித்து வெளியிட வேண்டும் என்றார்.

பக்திப் பாடல்கள், வாழ்த்துப்பாடல்கள், இரங்கற்பாக்கள், எனப் பல்வேறு வகையான பாடல்கள் சுவாமி விபுலானந்தரால் இயற்றப்பட்டன. அவர் பாடிய வாழ்த்துப் பாக்களில் தில்லையம்பலத்தில் தம்மை மறந்த ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரை வாழ்த்திப்பாடிய பாடல் சிறந்த பாடல் என்ற பதிப்பைப் பெற்றுள்ளது.

இறையருள் பெற்ற இசைநேசராக அவர் ஆற்றிய ஆன்மீகப் பணிகளும் தமிழிசை நுட்பங்களை ஆய்வு செய்த ஆய்வாளராகவும், கலைஞான வளர்ச்சிக்காக காலமெல்லாம் தமது பணியை அர்ப்பணிப்புடன் பணியாற்றிய அடிகளார், சாதியப்பாகுபாட்டிற்கு அப்பால் சன்மார்க்க சீலராக வாழ்ந்து இன்னும் மக்கள் மனங்களில் சிரஞ்சீவியாக வாழ்ந்து கொண்டிருக்கின்றார் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

**திருமதி. க. ஸ்ரீநிவாசன்**
**வலயக்கல்வி அலுவலகம்,**
**திருக்கோணமலை.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விநாயகர் வழிபாடும் விசேட தினங்களும்

விரும்பிய வேளையில், விரும்பிய இடத்தில் ஆவாஹனம் ஆகும் கடவுள் கணபதி ஆவார். ஆற்றங்கரைகளிலும், குளக்கரையிலும், ஆலமரத்தடியிலும் வீற்றிருந்து அருள் புரிவார். பசுஞ்சாணத்திலும், மஞ்சளிலும், அறுகம்புல்லிலும், வெல்லத்திலும், கல்லிலும் அடியார்களுக்காக எழுந்தருளி விநாயகர் அருள் பாலிக்கின்றார். மார்கழி மாதத்தில் வீட்டு வாசலில் பிள்ளையாரை மஞ்சளில் அல்லது சாணத்தில் பிடித்து பூசணிப்பூ வைத்து வணங்குவார்கள்

கணபதி பூசையில் அறுகம்புல் 21, புஷ்பம் 21, அதிரசம் 21, மோதகம் 21, பழம் 21 என இருபத்து ஒன்றாக வைத்து வழிபடுவர். விநாயகருக்கு வெண்பொங்கல், அவல், அரிசி, கரும்பு, வில்வம், வாழைப்பழம், தேங்காய், கொழுக்கட்டை, மோதகம், சுண்டல், வடை, அப்பம், எள்ளுருண்டை, பாயாசம் என்பவற்றுடன் கொய்யாப்பழம், நாவற்பழம், விளாம்பழம், பிரப்பம்பழம் வெற்றிலை, பாக்கு போன்ற அவருக்கு உவப்பான பொருட்களை வைத்து வழிபடுவர். விநாயகருக்கு இருபத்தியொரு பொருட்கள் வைத்து வழிபடுவதற்குரிய தத்துவ விளக்கத்தைச் சங்கர் இவ்வாறு கூறியுள்ளார். நமது உடம்பில் ஞானேந்திரியம் - 5 அவை செயற்படும் காரியங்கள் 5, அது போலவே கர்மேந்திரியங்கள் - 5 அவற்றின் செயல்கள் 5 இவ் எண்ணிக்கை 20 உடன் மனம் என்னும் கருவியையும் இணைத்து 21 ஆக கணபதியை பூசை முறையில் வழிபடுவர்.

விநாயகருக்கு சுக்கில சதுர்த்தி, சங்கடஹர சதுர்த்தி ஆகிய இரு தினங்களும் விசேட நாட்களும் கணபதி உபாசணைக்கு மிகச் சிறந்த புண்ணிய நாட்களாகும். இந் நாட்களில் ஹோமம், செபம் இரண்டும் அதிகளவில் செய்தால் வெகு விரைவில் மந்திர சித்தி கிட்டும் என்பதே சித்தர்களின் வாக்காகும். "ஓங்காரரூபாய நம" என்று கணபதிக்கு வழிபாடு செலுத்தும் மந்திரமாகும்.

**ஓம் தத்புருஷாய வித்மஹே**
**வக்ர துண்டாய தீமஹி**
**தந்நோ தந்தி பிரசோதயாத்**

என்பதே கணபதியின் மூல மந்திரமாகும். இம் மந்திரத்தை சிறப்பு உபாசகர் மூலம் உபதேசம் பெற்று தினமும் 108 தடவை செபித்து வந்தால் எல்லாத் தடைகளையும் கடந்து வெற்றிபெற முடியும் என ஞானிகள் கூறுகின்றனர்.

**ஸ்ரீலஸ்ரீ கனக பாலகிருஸ்ண சிவாச்சாரியார்**
**(சிவாகம சிரோன்மணி)**
**அருள்மிகு ஸ்ரீ இரட்ணசிங்க பிள்ளையார்**
**தேவஸ்தான பிரதம குருவும்,**
**கோணேஸ்வரா இந்துக் கல்லூரி சித்தி விநாயக ஆலய பிரதம குருவும்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கார்த்திகை நோன்பும் கார்த்திகை விளக்கொளியும்

நாரத முனிவர் நோன்பினாலே மேன்மையடைய எண்ணினார். ஏழு முனிவர்களிலும் உயர்ந்த நிலையை அடைய விரும்பினார். ஆனைமுகக் கடவுளுடைய அடிகளை வணங்கி நின்று "நான் மேன்மையுறுமாறு அடியேனுக்கு ஒரு நோன்பினை சொல்லியருளும்" என்று வேண்டிக் கொண்டார். ஆனைமுகக் கடவுள் நாரதரைப் பார்த்து "நீ நம்முடைய இளவலாகிய முருகனை வழிபட்டு கார்த்திகை நாள் விரதத்தை பன்னிரண்டு ஆண்டுகள் முயற்சியுடன் கடைப்பிடிக்கக் கடவாய் அவ்வாறு கடைப்பிடிப்பாயானால் நினைத்ததை அடைவது திண்ணம்" என்று திருவாய் மலர்ந்தருளினார். கார்த்திகை நோன்பை நாரதர் கடைப்பிடிக்க எண்ணினார்.

நிலவுலகத்தை அடைந்தார். பரணி நாள் நண்பகலில் மட்டும் ஒருவேளை உண்டார். கார்த்திகை நாளில் விடியற்காலையில் நீராடினார். வெள்ளுடையணிந்து நாள்தோறும் செய்யுங் கடன்களைச் செய்தார். ஐம்புலன்களை அடக்கினார். ஆறுமுகக் கடவுளை முறைப்படி வழிபட்டு வெறுந் தண்ணீரை மட்டும் உண்டார்.நாணற் புல்லாகிய படுக்கையில் படுத்து முருகக் கடவுளுடைய திருவடிகளை எண்ணிக் கொண்டு அன்றிரவு முழுவதும் உறக்கமின்றி இருந்தார். உரோகினி நாளில் நீராடுதல்,முருகவழிபாடு முதலியவைகளை முடித்துக் கொண்டு வந்த முனிவர்களோடு உணவு உண்டார். நோன்பிருந்து உண்டவர்கள் அன்று பகற்பொழுதில் உறங்கினால் மிகுந்த தீவினை உண்டாகுமென்று உணர்ந்து அன்று பகல் முழுவதும் உறங்காமலிருந்தார். அவ்வாறு பன்னிரண்டு ஆண்டுகள் கார்த்திகை நோன்பைக் கடைபிடித்து ஏழு முனிவர்களுக்கும் மேலான நிலையை அடைந்தார்.

கார்த்திகை நோன்பை நிலவுலகில் ஒரு அந்தணர் கடைப்பிடித்து முதல் மநுவாகி உலகம் முழுவதையும் ஆண்டான். வேறோர் அந்தணன் கடைபிடித்து உள்ளத்தில் நினைத்தவைகளை எல்லாம் அடைந்தான். இறுதியிலே திரிசங்கு மன்னனும் ஆனான். ஒரு அரசனும், வேடனும் கார்த்திகை நோன்பைக் கடைபிடித்து சிறப்பை அடைந்தார்கள்.

முருகப்பெருமான் கார்த்திகைப் பெண்கள் வளர்த்ததினால் கார்த்திகேயன் என்றும் அழைக்கப்பட்டார். ஞானசம்பந்தனால் பெருமான ஒற்றியூர் வந்திருப்பதை திருமலையில் வாழ்ந்த சிவநேசச் செட்டியார் அறிந்தார். சிவநேசர் ஒற்றியூர் சென்றுமயிலைக்கு எழுந்தருள வேண்டும் என்று ஞானசம்பந்தப் பெருமானை அழைத்தார். நான்கு மைல் தூரத்திற்கும் கமுகு, வாழை தோரணம் கட்டி சிறப்புடன் வரவேற்புச் செய்தார்.

சிவநேசரின் ஒரேஒரு மகள் பூம்பாவை விடந் தீண்டி இறந்தார். ஞானசம்பந்தருக்கு தன் மகளைக் கொடுப்பேன் என்று பலரறியச் சொல்லியிருந்தார் சிவநேசர் இந்த பூம்பாவையை எரித்து குடம் ஒன்றினுள் எலும்புகளைப் போட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீட்டின் நடுவே வைத்து பூஜை செய்து வந்தார் சிவநேசர். இச் செய்தியை அடியார் மூலம் அறிந்த சம்பந்தர் கபாலீஸ்வரத்திற்கு அக்குடத்தைக் கொண்டுவரச் செய்து பதிகம் ஒன்று பாடினார். ஒவ்வொரு பாட்டாகப் பாடிப் பதிகம் முடித்து எலும்பை பெண் ஆக்கினார். அவர் அப் பதிகத்திலே மயிலையில் நடைபெறும் பல விழாக்களைக் காணாது பூம்பாவை போதல் சரியன்று என்று கூறி எழுந்து வரச் செய்தார். அதில் ஒரு பாடல் பின்வருமாறு

**"வளைக்கை மடநல்லார் மாமயிலை வண்மருகில்**
**துளக்கில் கபாலீச் சாத்தான் தொல் கார்த்திகை நாள்**
**தளந்தேந்து இளமுலையார் தையாலார் கொண்டாடும்**
**விளக்கீடு காணாதே போதியோ பூம்பாவாய்"**

மங்கையர்கள் கொண்டாடும் இவ்விளக்கீட்டு விழாக் கார்த்திகை நாள் விழா அதைக் குறிக்கின்றார் சம்பந்தர். அதுவும் மிக பழங்கால முதலே இவ்விழா போற்றப்பட்டு வந்ததென்பதை தொல் கார்த்திகை நாள் என்கிறார். எனவே கார்த்திகை விளக்கீட்டு விழா தமிழ் நாட்டின் பழம் பெருந் திருவிழாக்களுள் ஒன்று என்பது புலனாகும்.

அகநானூறு என்னும் பழம்பெரும் இலக்கிய நூலிலே இக் கார்த்திகை விளக்கீட்டைப் பற்றி பல குறிப்புகள் வருகின்றன. காட்டிலே இலவ மலர்களாட மரம் குலுங்க பூத்துள்ளன. இலைகள் இல்லை, பூக்கள் செந்நிறங் கொண்டவை. அம்மரத்தில் சிவந்த பூக்கள் அடுக்கடுக்காய் அமைந்துள்ளன. அந்த இயற்கை காட்சி சங்ககால மூதாட்டியரான ஔவையாரைக் கார்த்திகை விளக்கீட்டு விழாவிற்கு அழைத்துச் சென்றது. மகிழ்ச்சியால் திளைத்து விழாக் கொண்டாடப்படும் மகளிர் கார்த்திகை நாளில் ஏற்றி வைத்த விளக்கு வரிசையைப் போன்று இலவ மலர்கள் அடுக்கடுக்காய் அமைந்துள்ளன என்று பாடுகின்றார் அவர்.

**"வானம் உலர்ந்த வளங்கொளி மண்டிலம்**
**நெருப்பு எனச்சிவந்த உருப்பு அவிர் அம்காட்டு"**

எனவும், திருமால் பிரம யாகத்தை அழித்து தாமே தீப்பிழம்பான விழா கார்த்திகை விழா என்பர். அட்டமலங்களுள் ஒன்றாகிய இவ் விளக்கின் சிறப்பை இவ் விளக்கொளியோடு தொடர்புபடுத்திப் புகழ் பெற்ற திருமால் அசம் பெற்ற அரசர்களைப் பாடும் முகத்தான் புறப்பொருள் வெண்பாமாலை எனும் நூல் விளக்கீட்டு நிலை என்னும் துறையால் பாராட்டுவதை அறிகிறோம்.

விளக்கில் இறைவனை இருத்தி வழிபடும் வழிபாடாக இதைச் சைவரும் கொண்டாடினர். கார்த்திகை என்பதற்கு "அழல்" என்றும் "எரி" என்றும் பெயர் உண்டு. "அழல் சேர் குட்டம்" எனச் சிலப்பதிகாரம் கார்த்திகையை அழல் என்கிறது. **"எரிகடை எழில் வேழம்"** எனுமிடத்தில் பரிமேழகர் எரி என்பதற்கு அக்கினியைத் தெய்வமாக உடைய கார்த்திகை என்று பொருள் கூறுகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் நாட்டிலே கார்த்திகை விளக்கிடுதல் வழக்கமாக இருந்திருக்கிறது. சீவகசிந்தாமணியில் 'கார்த்திகை விளக்கீட்டன்ன கடிகமழ் குவளைப் பைந்தார்' என்று ஒரு தொடர் வருகின்றது. கார்நாற்பது நலமிகு கார்த்திகை நாட்டவர் இட்ட தலைநாள் விளக்கில் என்று குறிப்பிடுகின்றது. இவ் விளக்கை மலைமேல் இடுவது வழக்கம் **குன்றத்துச்சுடர்** என்று சீவகசிந்தாமணி குறிப்பிடுகின்றது.

கார்த்திகை திங்கள் கூதிர்கால முடிவாக நிற்கின்றது. அடைமழையில் கதிரொளி காணாமல் வாடி ஒடுங்கிக் கிடந்த மக்கள் நன்றாக உலவித் தங்கள் வாட்டத்தை நீக்கிக் கொள்ள கதிரவன் ஒளியை காண விரும்பி மலைமீது விளக்கிட்டு மகிழ்வதைக் கார்த்திகை விளக்கு குறிக்கின்றதெனலாம். இத்தினத்திலே சொக்கபனை கொழுத்துவதும் திருவண்ணாமலை மீதும் வேறு சில மலைகளின் உச்சியிலும் கார்த்திகை விளக்கிடுவதும் அன்று விளக்கைக் கண்டு தொழுத பிறகே உணவுண்பதும் தமிழர் விரதமுறை ஒளிப்பிழம்பான சிவபிரான் அருணகிரியாக நின்று கார்த்திகைத் திங்களில் கார்த்திகை நட்சத்திரத்திலே அம்மலை மீது காணும் விளக்கை வழிபடுவோருக்கு நலம் அருள்வதாகப் பெரியோர் கூறுவார்.

கார்த்திகை மாதம் முழுவதும் மாலையில் விளக்கேற்றும் முறையும் உண்டு. இந்த நாளில் சிவபெருமான் திரிபுர அசுரனை எரித்த விழா கோயில்களில் நடத்தப்படுகின்றது. திரிபுரர்களை குறிக்கும் சொக்கப்பனையைக் கொழுத்திவிடுகிறார்கள். வீட்டு விளக்கீடு, சர்வாலயதீபம், குமாராலயதீபம் என மூன்று பிரிவாகக் கொண்டாடுவர். வீட்டிலும் வீட்டைச் சுற்றியுள்ள எல்லா இடங்களிலும் தீபம் ஏற்றி வணங்குதல் வீட்டு விளக்கிடுதல் எனப்படும். முருகன் கோயிலில் தீபம் ஏற்றி வழிபடுவதும் சொக்கபனை கொழுத்துவதும் குமாராலயதீபம் எனப்படும். முருகன் ஆலயம் தவிர மற்றைய எல்லா ஆலயங்களிலும் தீபம் ஏற்றி சொக்கபனை கொழுத்துதல் சர்வாலய தீபம் எனப்படும்.

**விளக்கொளியாகிய மின் கொடியானை**
**விளக்கொளியாக விளங்கிடு நீயே**
**விளக்கிடு மென்கின்ற ஞானப் பொருளை**
**விளங்கிடுவார்கள் விளங்கினர் தானே**

(என்பது திருமூலர் வாக்கு.)

**திருமதி. வ. வசிகரன்**
**ஆசிரியை**
**தி/இ.கி.ச ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரி.**
**தேசிய பாடசாலை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்து சமய வழிபாடுகளும் அறிவியலும்

சனாதன தர்மம் வாழும் அறம் என்னும் சிறப்பிக்கப்படும் இந்துசமயமானது சில தனித்துவமான இந்து பண்பாட்டு அம்சங்களை தன்னகத்தே கொண்டுள்ளது. அவற்றுள் வழிபாடும் ஒன்றாகும். இந்துக்களிடம் அறிவியல் இருந்துள்ளது என்பதனை அவர்கள் வகுத்து வைத்திருக்கும் வழிபாடும் உணர்த்துகிறது.

எமது முன்னோர்கள் ஆலயங்களை அமைக்கும் போது பூமியில் காற்றுப்புலம் அதிகமாக வெளிப்படும் இடத்தினை இனங்கண்டு அதன் மையப்பகுதியில் ஆலயத்தின் கருவறையை அமைத்தனர். கருவறையினூடாக வெளிப்படும் காந்தலைகள் இறைவனை வழிபடும் பக்தர்களை சென்றடையும். இதனால் உடம்புக்குத் தேவையான நேர்மறையான ஆற்றல் திறன் கிடைக்கின்றது. எல்லா மூலஸ்தானங்களும் மூன்று பக்கம் மூடி வாசல் மட்டும் திறந்திருக்கும். அதன் கதவுகளும் சிறியதாக இருக்கும். இது நேர்மறையான ஆற்றல்(positive energy) வெளியே செல்லாமல் வைத்திருப்பதற்கு உதவும். ஆண்கள் ஆலயத்தினுள் மேலாடையின்றியும், பெண்கள் தங்க ஆபரணங்கள் அணிந்தும் செல்ல வேண்டும் என்று கூறப்படுவது இதனாலேயே ஆகும். ஆண்கள் மேலாடையின்றி செல்லும் போது நேர்மறையான ஆற்றல் திறன் உடம்பினைச் சென்றடையும், பெண்கள் அணியும் தங்க ஆபரணத்தின் மூலம் இச்சக்தியானது பெண்களை சென்றடையும்.

கூடாது என்பதற்கான அறிவியல் உண்மை யாதெனில் கோபுரத்தின் உச்சியில் தங்கம், வெள்ளி, செம்பு போன்ற ஐம்பொன்னால் செய்யப்பட்ட கலசங்கள் இருக்கும். இக் கலசங்களில் கொட்டப்படும் தானியங்களும், உலோகங்களும் மின் காந்தச் சக்தியை ஈர்க்கும் சக்தியினை கலசங்களிற்கு கொடுக்கின்றன. இடி மின்னலையும் இத் தானியங்கள் தாங்கும் ஆற்றல் உடையனவாக விளங்குகின்றன. 12 வருடங்களுக்கு ஒரு முறை குடமுழுக்கு விழாவின் போது கலசங்களில் இருக்கும் பழைய தானியங்கள் நீக்கப்பட்டு புதிய தானியங்கள் நிரப்பப்படுகின்றன. காரணம் அந்த தானியங்களுக்கு பன்னிரண்டு வருடங்களுக்குத்தான் அந்த சக்தி இருக்கின்றது. இதனால்தான் முன்னோர்கள் **"கோபுர தரிசனம் கோடி புண்ணியம்"** எனக் கூறியுள்ளனர்.

உருத்திராக்கம் அணிவதன் மூலம் பல மருத்துவ குணங்களை உடலும் உள்ளமும் பெறுவதாக கூறப்படுகிறது. அதாவது உருத்திராக்க மணிகள் எமக்குள் நேர்மறையான எண்ணங்களைத் தோற்றுவிக்கும் எனக் கூறப்படுகிறது. அதே போல் திருநீறு தரிப்பதால் நோய்க்கிருமிகளை அளிக்கும் சக்தியும், உடலில் மிகையாக இருக்கும் ஈரத்தை உறிஞ்சி அகற்றும் சக்தியும் கிடைக்கின்றன. திருநீறு அணிவதால் பல நன்மைகள் எமக்கு கிடைக்கின்றன. இதனையே **"நீறில்லா நெற்றி பாழ்"** என்றார் ஔவையார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பசு மாட்டின் சாணம், மஞ்சள் என்பன ஒப்பற்ற பலன்களைத்தரும் கிருமிநாசினிகள் என்பது உலகளவில் பல அறிவியல் வல்லுநர்களாலும் ஒப்புக் கொண்ட உண்மையாகும். இதனால்த்தான் நாம் நினைத்த மாத்திரத்தில் சாணத்திலும், மஞ்சளிலும் பிள்ளையார் பிடித்து வைத்து வழிபடுகிறோம். எமது முன்னோர்கள் சாணத்தில் வீடு மெழுகியதும், வாசலில் சாணத்தை கரைத்து தெளித்தமைக்கும் இதுவே காரணமாகும்.விரதமிருப்பதால் வயிறு சுத்தமாகிறது, ஜீரண உறுப்புக்கள் சீராகிறது என்கிறார்கள் சித்த மருத்துவர்கள். நாம் விரதம் இருப்பதால் எமது உடலில் உள்ள தேவையற்ற கொழுப்புக்கள் நீக்கப்படும். இதனால் நீரழிவு போன்ற நோய்கள் எம்மை அண்டாமல் உடல் ஆரோக்கியத்துடன் வாழ முடியும்.

ஆலயங்களில் நாம் நவக்கிரகங்களை வழிபடுகின்றோம். இக் கோள்களில் நிகழும் மாற்றங்கள் மனித நடத்தையில் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன என்பது அறிவியல் ரீதியாக ஆராய்ந்து ஏற்றுக்கொள்ளபட்ட உண்மையாகும். ஒருவர் பிறக்கும் போது வானில் வலம்வரும் கோள்கள் எந்நிலையில் சஞ்சரிக்கின்றதோ அந்நிலையே வாழ்க்கையில் நிகழும் மாற்றங்களுக்கு காரணமாக அமைகிறது. இதனாலேயே நாம் ஆலயங்களில் நவக்கிரகங்களை வழிபடுகிறோம்.

கோவில்களில் உள்ள சிலையினை அபிஷேகம் செய்தபின் அபிஷேக நீர் பக்தர்களுக்கு தீர்த்தமாக கொடுக்கப்படும். அபிஷேக நீரானது தண்ணீருடன் குங்குமப்பூ, கற்பூரம், ஏலக்காய், கிராம்பு சேர்க்கப்படும் கலவையாகும். இக்கலவை கலந்த நீரை சிலைகளுக்கு அபிஷேகம் செய்வதால் அபிஷேக நீரில் காந்த அலைகள் உள்ளேறும். இதனால் மருத்துவ குணம் மென்மேலும் அதிகரிக்கும். இதனை பக்தர்கள் அருந்துவதன் மூலம் சளி மற்றும் இருமல் நோய் நீங்கும்.

ஆலயங்களில் சங்கு ஊதி வழிபடுவது மரபாகும். சங்கை ஊதுவது மூச்சை சீராக்குவதோடு நுரையீரலின் செயற்பாட்டிற்கும் உதவுகிறது. அத்தோடு கிருமிகளை அழிக்கின்றது. கோவில்களில் தீர்த்தத்தில் சங்கைப் போட்டு வைப்பார். இதனால் நீரில் உள்ள கிருமிகளையும் அழித்துவிடும். சங்கை ஊதுவதால் உடலில் இருக்கும் கிருமிகள் அழியும். இதனால் நோய்கள் குறையும். இந்துக்கள் வீட்டின் முன் துளசி மாடம் அமைத்து வழிபடுவது மரபு. துளசிச் செடியில் அபூர்வமான மருத்துவ குணங்கள் உள்ளன. துளசி மாடத்தைச் சுற்றி வழிபடும் போது துளசி காற்று சுவாசிக்கப்படுகிறது. இதனால் பல்வேறு சுவாச நோய்கள் மற்றும் உடல் நோய்கள் இல்லாமல் போகும் என்பது விஞ்ஞான பூர்வமாக நிரூபிக்கப்பட்டுள்ளது.

ஆலயங்களில் ஆண்கள் அட்டாங்க நமஸ்காரமும் பெண்கள் பஞ்சாங்க நமஸ்காரமும் செய்து இறைவனை வழிபடுவர். இவ்வழிபாடுகளால் உடலின் தசைநார்கள், நரம்புகள், எலும்புகளில் உள்ள மூட்டுக்கள் என்பன பலமடைகின்றன. நாம் பிள்ளையாரை வணங்கும் போது நெற்றியில் மூன்று முறை குட்டியும், தோப்புக்கரணம் போட்டும் வழிபடுகின்றோம். நெற்றிப் பொட்டின் இருமருங்கிலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குட்டி வழிபடுவதால் அங்குள்ள நரம்பு மையங்கள் தூண்டப்பட்டு நினைவாற்றல் அதிகரிப்பதுடன் சுறுசுறுப்பும் ஏற்படும். தோப்புக்கரணம் போடுவதால் மூளையின் வலது, இடது பாகங்கள் சமனான சக்தியைப் பெற்றுக் கொள்கின்றன. மேலும் மூளைக்கு அதிகமான இரத்தத்தை எடுத்துச் செல்லும். இதனால் அறிவாற்றல் அதிகரிக்கும் இதனை அறிவியல் விஞ்ஞானிகள் எடுத்துக் கூறியுள்ளனர்.

எனவே இந்துக்கள் பக்தியின் மூலம் செய்யும் ஒவ்வொரு வழிபாட்டிலும் அறிவியல் அம்சங்கள் நிறைந்துள்ளன. எமது முன்னோர்கள் அறிவியல் விடயங்களை சமயத்தோடும், சமய வழிபாடுகளோடும் ஒன்றிணைந்து செய்துள்ளனர் என்பதே உண்மையாகும். இவ்வழிபாடுகள் மூலம் மக்கள் உடல், உள, ஆரோக்கியம் பெற வேண்டும் என்பதே அவர்களின் நோக்கம் என்பது புலனாகிறது.

**த.டின[illegible]ராஜ்**
ஆசிரியர்
**தி/இ.கி.ச ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரி**
தேசிய பாடசாலை

**"சமயக் கல்விக்கு தமிழ் கல்வி இன்றியமையாதது. ஆதலினாலே தமிழை வளர்ப்பவர் சைவத்தை வளர்ப்பவராவர்"**
- சுவாமி விபுலாநந்தர் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு கும்பாபிஷேக தரிசனம் எவ்வளவு புண்ணியம் அளிக்கும் தெரியுமா?

இறைவனுக்கு கோயில் கட்டி வழிபடுவது வழக்கம். புதிதாக ஓர் ஆலயம் எழுப்பப்படும்போது, விக்கிரகங்களை ஆலயத்தினுள் பிரதிஷ்டை செய்வதோடு மட்டும் ஆலயம் முழுமை பெற்றுவிடுமா? என்றால், நிச்சயமாக இல்லை. அது எப்போது முழுமை பெறும் ஆலயத்தில், **"கும்பாபிஷேகம்"** நடந்த பின்னர்தான் அது வழிபாட்டுக்கு உரிய ஸ்தலமாக முழுமை பெறுகிறது. கும்பம் என்றால் "நிறைத்தல்" என்று பொருள். நம் ஆலயங்களில் வீற்றிருக்கும் விக்கிரகங்களுக்கு, அபிஷேகங்கள் மூலம் இறைசக்தியை நிறைத்தலே கும்பாபிஷேகம். இதனை சைவர்கள் **"மகா கும்பாபிஷேகம்"** என்றும் வைணவர்கள் **"மகா சம்ப்ரோக்ஷணம்"** என்றும் அழைக்கிறார்கள்.

மேலும் சக்தி வாய்ந்த மந்திரங்கள் மூலம் யாகங்கள் செய்யப்பட்ட தீர்த்தங்களால் இறைவன் மீதும், கோபுரக் கலசங்கள் மீதும் புனித தீர்த்தங்களால் அபிஷேகம் செய்யப்படுகிறது. கும்பாபிஷேகத்தின் மூலமாகவே விக்கிரகங்கள் தெய்வசக்தியைப் பெறுகின்றன. பெரும்பாலும், கும்பாபிஷேகமானது 12 வருடங்களுக்கு ஒருமுறை செய்யப்படுகிறது. இதன் காரணம், நாம் கும்பாபிஷேகம் செய்யும் போது சாத்தப்பட்ட அஷ்டபந்தனமானது(மருந்து) 12 வருடங்கள் வரைதான் சக்தியோடு இருக்கும். மேலும் கோயில்களில் ஏதேனும் புனரமைப்பு செய்தாலும் கும்பாபிஷேகம் செய்யப்படும். மேலும் கும்பாபிஷேகம் பற்றி வேதவிற்பன்னர் சுந்தரேஷசர்மாவிடம் கேட்ட போது, அவர் கூறிய தகவல்களின் தொகுப்பு இது.

**கும்பாபிஷேகத்தின் வகைகள்:**

**ஆவர்த்தம்** - புதிதாக கட்டப்படும் ஆலயங்களில் செய்யப்படுவது. இது மும்மூர்த்திகளுக்காகச் செய்யப்படுகிறது.

**அனாவர்த்தம்** - வெகுநாட்கள் யாராலும் முறையாக பராமரிக்கப்படாமல், பூஜை, புனஷ்காரங்கள் நடைபெறாமல் இருக்கும் ஆலயங்களைப் புனரமைப்பு செய்து பின்னர் செய்யப்படுவது. மேலும் ஆறு, கடல் இவற்றால் சிதிலமடைந்த கோயிலைப் புதிதாக நிர்மாணம் செய்து கும்பாபிஷேகம் செய்யும் முறை.

**புனராவர்த்தம்** - கருவறை, பிரகாரம், கோபுரம் ஆகியன பாதிப்படைந்திருந்தால், அவற்றைப் புதுப்பித்து அஷ்டபந்தனம் சார்த்தி பிரதிஷ்டை செய்து கும்பாபிஷேகம் செய்யும் முறை.

**அந்தரிதம்** - ஆலயத்தினுள்ளே தகாத செயல்கள் ஏதேனும் நிகழ்ந்துவிட்டால் செய்யப்படும் பரிகாரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கும்பாபிஷேகத்தில்

| | |
|---|---|
| **கும்பம்** | **- கடவுளின் உடலையும்,** |
| **கும்பத்தின் மீது சுற்றப்பட்ட நூல்** | **- 72,000 நாடி, நரம்புகளையும்,** |
| **கும்பத்தில் ஊற்றப்படும் நீர்** | **- ரத்தத்தையும்,** |
| **அதனுள் போடப்படும் தங்கம்** | **- ஜீவனையும்,** |
| **மேல் வைக்கப்படும் தேங்காய்** | **- தலையையும்,** |
| **பரப்பட்ட தானியங்கள்** | **- ஆசனத்தையும் குறிக்கின்றது.** |

இது மட்டும் இல்லாமல் யாக மேடையில் சந்தனம், மலர்கள் மற்றும் வஸ்திரம் ஆகியவையும் அமைக்கப்படுகின்றன.

**கும்பாபிஷேகத்தில் விக்கிரகப் பிரதிஷ்டையில் மேற்கொள்ள வேண்டிய பூஜைகள்**

**அனுக்ஞை** - ஆற்றல் மிக்க ஓர் ஆசாரியனைத் தேர்ந்தெடுத்து இறைவனின் அனுமதிபெற்றுநியமனம் செய்தல்.

**சங்கல்பம்** - இறைவனிடம் நமது தேவைகளைக் கோரிக்கையாக வைத்தல்.

**பாத்திர பூஜை** - பூஜை பாத்திரங்களுக்குரிய தேவதைகளுக்குப் பூஜை செய்தல்.

**கணபதி பூஜை** - கணபதியை வழிபடுதல்.

**வருண பூஜை** - வருண பகவானையும், சப்த நதி தேவதைகளையும் வழிபடுதல்.

**பஞ்ச கவ்யம்** - பசு மூலமாக கிடைக்கும் பால், தயிர், நெய், பசு நீர், பசு சாணம் ஆகியவற்றை வைத்துச் செய்யப்படும் கிரியை.

**வாஸ்து சாந்தி** - தேவர்களை வழிபடுதல்.

**பிரவேச பலி** - திக்பாலர்களை வணங்குதல்.

**மிருத்சங்கிரஹணம்** - ஆலயம் நிர்மாணம் செய்ய பூமாதேவியை கஷ்டப்படுத்தியதன் காரணமாகபூமாதேவியை மகிழ்விக்கச் செய்யப்படும் பரிகாரம். மண்எடுத்து வழிபடுவது.

**அங்குரார்ப்பணம்** - எடுத்த மண்ணில் விதைகளைப் பயிரிட்டு முளைப்பாரி வளரச் செய்தல். இதில் 12 சூர்யர்களான வைகர்த்தன், விவஸ்வதன், மார்த்தாண்டன், பாஸ்கரன், ரவி, லோகபிரகாசன், லோகசாட்சி,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரிவிக்ரமன், ஆதித்யன், சூரியன், அம்சுமாலி, திவாகரன் போன்றவர்களை வழிபடுதல் மேலும் சந்திரனையும் வழிபடுதல்.

| | | |
|---|---|---|
| **ரக்ஷாபந்தனம்** | - | ஆசாரியனுக்கும் மற்ற உதவி ஆசாரியர்களுக்கும் கையில் காப்புக் கட்டுதல். |
| **கும்ப அலங்காரம்** | - | கும்பங்களை இறைவன் உடலாக நினைத்து அலங்காரம் செய்தல். |
| **கலா கர்ஷணம்** | - | விக்கிரகத்தில் இருக்கும் சக்தியை கும்பத்துக்கு மந்திரப் பூர்வமாக அழைத்தல். |
| **யாகசாலை பிரவேசம்** | - | கலசங்களை யாகசாலைக்கு அழைத்து வருதல். |
| **சூர்ய, சோம பூஜை** | - | யாகசாலையில் உள்ள சூரிய சந்திரனை வழிபடுதல். |
| **மண்டப பூஜை** | - | யாகசாலையை பூஜை செய்தல். |
| **பிம்ப சுத்தி** | - | விக்கிரகங்களை மந்திரத்தின் மூலமாக சுத்தம் செய்தல். |
| **நாடி சந்தானம்** | - | இறைவனின் சக்தியில் ஒரு பகுதியை ஒரு இணைப்பு மூலமாக விக்கிரகங்களுக்குக் கொண்டு சேர்த்தல். |
| **விசேஷ சந்தி** | - | 36 தத்துவத் தேவதைகளுக்குப் பூஜை செய்வது. உலகத்தில் உள்ள அனைத்து ஆத்மா பித்ருக்களுக்கும் சாந்தி செய்வது. |
| **பூத சுத்தி** | - | பூத (மனித) உடலை தெய்வத்தின் உடலாக மந்திரப் பூர்வமாக மாற்றி அமைத்தல். |
| **ஸ்பர்ஷாஹுதி** | - | 36 தத்துவங்களை யாகத்திலிருந்து மூல விக்கிரகங்களுக்குக் கொண்டு சேர்த்தல். |
| **அஷ்டபந்தனம்** | - | (மருந்து சாத்துதல்) எட்டு பொருள்களால் ஆன இம்மருந்தினால் மூர்த்தியையும், பீடத்தையும் ஒன்று சேர்த்தல். |
| **பூர்ணாஹுதி** | - | யாகத்தைப் பூர்த்தி செய்தல். |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| **கும்பாபிஷேகம்** | - | யாக சாலையில் மூர்த்திகளுக்குரியதாக வைத்துப் பூஜிக்கப்பட்ட கும்ப நீரை அந்தந்த மூர்த்திகளுக்கு அபிஷேகம் செய்தல். |
| **மஹாபிஷேகம்** | - | கும்பாபிஷேகம் முடிந்த பிறகு மூல விக்கிரகத்துக்கு முறைப்படி அபிஷேகம், அலங்காரம் செய்தல். |
| **மண்டலாபிஷேகம்** | - | இறைவனை 48 நாட்கள் விஷேச அபிஷேக பூஜைகள் செய்து முழு சக்தியுடன் இருக்கச் செய்தல். |

**யாக குண்டத்தின் வகைகள்:**

| | | |
|---|---|---|
| **ஏக குண்டம்** | - | ஒரு குண்டம் அமைப்பது |
| **பஞ்சாக்னி** | - | ஐந்து குண்டம் அமைப்பது |
| **நவாக்னி** | - | ஒன்பது குண்டம் அமைப்பது |
| **உத்தம பசஷ்ஷம்** | - | முபடபத்துமூன்று குண்டம் அமைப்பது |

யாக குண்டங்கள் தெய்வங்களைப் பொறுத்து மாறுபடுகின்றன.

அவை

| | |
|---|---|
| **விநாயகர்** | **- பஞ்சகோணம்** |
| **முருகர்** | **- ஷட்கோணம்** |
| **சிவன்** | **- விருத்தம்** |
| **அம்மன்** | **- யோணி** |
| **பரிவாரம்** | **- சதுரம்** |

கும்பாபிஷேகத் தினத்தன்று ஆலயத்துக்குச் சென்று வழிபட்டால், முப்பத்து முக்கோடித் தேவர்களின் ஆசி நமக்குக் கிட்டும். தவிர்க்க முடியாத காரணங்களால் கும்பாபிஷேகத்தில் கலந்துகொள்ள இயலாதவர்கள், 48 நாட்கள் நடக்கும் மண்டல பூஜையில் கலந்துகொண்டு நன்மைகளைப் பெறலாம். பிறவிப் பெரும்பயன் அடையலாம். ஒரு கும்பாபிஷேகத்தைக் காண்பது மூன்று ஜென்மங்களில் நாம் செய்த பாவத்தைப் போக்கக்கூடியது.

**செல்வன்.சீனித்தம்பி. பிரதீக்ஷன்**
**தரம் 12 கலைப்பிரிவு**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கணங்களின் அதிபதி கணபதியை கை தொழுவோம்

எமது சைவ சமயம் பிரதானமாக ஆறு பிரிவுகளை கொண்டது. அதில் காணாபத்தியம் கணபதியை முழுமுதற் கடவுளாகக் கொண்டு வழிபடும் சமயமாகும். இக் காணாபத்தியம் பின் வைணவ சமயத்தோடும் ஒன்றிணைந்தது. வைணவர்கள் கணபதியை **'தும்பிக்கை ஆழ்வார்'** என அழைப்பார்கள். கணங்களின் அதிபதி கணபதியை கரம் பணிந்து வணங்கி நாம் எந்தவொரு காரியத்தையும் தொடங்குவோமாயின் அக் காரியம் வெற்றியில் முடிவடைவது நிச்சயம். இப் பல்வேறு திருநாமம் கொண்டு அழைக்கப்படுகின்றார். ஒவ்வொரு திருநாமத்திற்கும் தனிச்சிறப்பு உண்டு. கணங்களின் அதிபதி என்பதால் கணபதி என்றும், யானையின் முகத்தினை கொண்டுள்ளதால் யானைமுகன் அல்லது கஜமுகன் என்றும், விக்கினங்களை தீர்க்கும் ஈஸ்வரன் என்பதால் விக்னேஸ்வரன், என்றும் ஐந்து கரங்களை உடையதால் ஐங்கரன் என்றும் அழைக்கப்படுகின்றார்.

சைவ சமய மரபிலே முதலில் வழிபடுபவர் பிரணவ சொரூபியான விநாயகரே ஆவார். இவர் யானை முகத்தோடு தும்பிக்கை, விசாலமான செவிகள், ஐந்து கரங்கள், திருவடிகள், பெரிய வயிறு என்பவற்றுடன் தோற்றமளிக்கின்றார். இவரது ஒவ்வொரு அங்கத்திற்கும் தனிச்சிறப்பு உண்டு. இவரது திருவடி, ஆன்மாவை பொருந்தி நின்று பலகன்மமாயைகளை தொழிற்படுத்தி இருமை இன்பத்தை அளிப்பது ஞானம். அஞ்ஞானமே விநாயகரின் திருவடிகளாக இருக்கின்றன. மற்றும் பெரு வயிறு, ஆகாசம் எல்லாப் பொருள்களும் தன்னகத்து ஒடுங்கவும் உண்டாகவும் இடந்தந்து இருப்பது போல பெருவயிறாகிய ஆகாசமும் எல்லா உலகங்களும் உயிர்களும் தம்முள் அடங்கி இருக்கின்றன என்பதை குறிப்பிடுகின்றது. மற்றும் ஐந்து கரங்கள் பிள்ளையாரின் ஒரு கரம் பாசத்தை ஏந்தியுள்ளது. அது படைத்தலைக் குறிக்கின்றது. எனவே இவரே பிரம்மாவாகிறார். தந்தம் ஏந்திய கை காத்தலைக் குறிக்கின்றது. எனவே இவரே மகா விஷ்ணுவாகிறார். துதிக்கை அனுக்கிரகம் செய்கிறது. அங்குசம் ஏந்திய கை அழித்தலை குறிக்கின்றது. எனவே இவரே ருத்ரன் ஆகிறார். மோதகம் ஏந்திய கை அருளைக் குறிக்கின்றது. எனவே இவரே சர்வசக்தி படைத்த பரேமேஸ்வரனாகவும் இருக்கின்றார். மற்றும் தந்தங்கள் மகா பாரதத்தை எழுதுவதற்காக தமது தந்தத்தையே ஒடித்து வெளித்தோற்றத்தை விட அறிவுக்கு முன்னுரிமை வழங்கபட வேண்டும் என்பதை வலியுறுத்துகின்றார். மற்றும் தாழ் செவி, விநாயகரின் முறம் போன்ற பெரிய காதுகள் செவியில் விழும் செய்திகளை சலித்து நல்லவற்றை மட்டும் சேர்ந்து வைத்துக் கொள்ள வேண்டும் என்பதைக் குறிக்கின்றது. விநாயகருக்குரிய மூர்த்தங்களாக முப்பத்திரண்டு விநாயக மூர்த்தங்கள் காணப்படுகின்றன. இவரை சிரசில் மூன்று முறை குட்டியும் செவியை மாறி இரு கைகளாலும் பிடித்து மூன்று முறை தோப்புக்கரணம் போட்டும் நிலத்தில் விழுந்து ஆண்கள் அட்டாங்க நமஸ்காரமும் பெண்கள் பஞ்சாங்க நமஸ்காரமும் இட்டு வழிபடுவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**"பிடியதன் உருவுமை....." திருவாக்கும்செய் கருமம் கைகூடும்....." "ஐந்து கரத்தனை ஆனை முகத்தினை**......" எனும் தோத்திர பாடல்களை ஓதியும் வழிபட வேண்டியது அவசியமாகும். மற்றும் சிதறு தேங்காய் அடித்து வழிபடுதல்விநாயகர் வழிபாட்டில் சிறப்பிடம் பெறுகிறது. மலர்கள் மற்றும் அறுகம்புல் கொண்டும் அர்ச்சித்தும் வழிபடுவர். மோதகம், அவல் என்பவற்றை நைவேத்தியமாக வைத்து வழிபடுவர்.

விநாயகருக்குரிய சில விரதங்கள் உண்டு. அதில் **"விநாயக சஷ்டி"** யும் ஒன்றாகும். இது விநாயக விரதங்களுள் மிகச் சிறப்பான விரதமாகும். இவ்விரதம் கார்த்திகை மாதத் தேய்பிறை பிரதமை முதல் மார்கழி மாத சஷ்டி வரையுள்ள இருப்பத்தொரு நாட்கள் அனுட்டிக்கப்படும். விரத காலத்தில் விநாயகருக்கு தினமும் இளநீர், கரும்பு, மோதகம், அவல், எள்ளுருண்டை முதலானவற்றை நிவேதித்து வழிபாடு செய்வர்.

முதல் இருபது நாட்களும் பகல் ஒரு பொழுது உணவு உண்பர். சிலர் இரவில் பால், பழம் அருந்துவார். இறுதித்தினத்தில் உபவாசம் இருப்பார். இவ்விரதத்தை இருபத்தொரு நாட்கள் அனுட்டிப்பது சிறப்பானது. இயலாதவர்கள் ஏழு வருடங்கள் அனுட்டிக்கலாம். இவ்விரத நாட்களில் ஆலயங்களில் பிள்ளையார் கதை படிக்கும் வழக்கம் உள்ளது. இவ்விரத காலத்தில் திரிகரண சுத்தியோடு விநாயகரை வழிபடுவர் விநாயகர் விரதங்களில் மற்றுமொரு சிறப்புக்குரியது **விநாயக சதுர்த்தி** ஆகும். இவ் விரதம் ஆவணி மாதம் வரும் வளர்பிறை சதுர்த்தி திதியை விரத நாளாக கொண்டு அனுட்டிக்கப்படுவதால் **'விநாயக சதுர்த்தி'** என அழைக்கப்படுகின்றது. அன்றைய தினம் நாம் விரதமிருந்து முறையாக விநாயகரை வழிபட்டு அருகிலிருக்கும் ஆலயங்களிற்குச் சென்று அறுகம்புல் மாலையிட்டு அவரை கொண்டாடினால் நமக்கு எல்லா விதமான நன்மைகளும் விளையும். எனவே நாமும் விரதங்களை அனுட்டித்து எல்லா விதமான நன்மைகளையும் பெற வேண்டும். விரதங்களை அனுட்டிப்பதால் எமது மனம் ஒருநிலைப்படுத்தப் படுகிறது. எமது சிந்தனைகள் நல்லவையாக அமைய இவ் விரதங்கள் பயன்படுகின்றது.

நாம் விநாயகரை வீடு, ஆலமரத்தடி, ஆற்றங்கரை, அரசமரத்தடி முதலான இடங்களிலும் வழிபடலாம். அவ்வாறு நோக்கும் போது நாம் இறைவனை ஆலயம் சென்றுதான் வணங்க வேண்டும் என்பது அவசியமில்லை. விநாயகப்பெருமானை எளிமையாகவும் வழிபட முடியும். விநாயகர் திருவுருவம் இல்லாத இடத்தில் மஞ்சள், சந்தனம்,சாணம் என்பவற்றில் ஏதாவது ஒன்றினால் பிடித்து அதில் அறுகம்புல்லை குத்தி வழிபடுவது சைவர்களின் மரபாகும். விநாயகர் வழிபாட்டு முறைகளுடன் பல்வேறு புராணக் கதைகள் தொடர்புபட்டு இருக்கின்றன. நெற்றியில் மூன்று முறை குட்டி வழிபடுவது, அகத்திய முனிவரோடும், தோப்புக்கரணம் போட்டு வழிபடும் முறை, கஜமுகன் எனும் அசுரனோடும் தொடர்புபட்டவை ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவரது வாகனம் பெருச்சாளி ஆகும். குறிப்பாக ஆலயத்திலோ,வீட்டிலோ விநாயகரை நாம் பல்வகைப் பூக்களாலும் அர்ச்சிக்கலாம் ஆனால் விநாயகருக்கு மிகவும் பிடித்தது அறுகம் புல்லே ஆகும். விநாயகரை வணங்கும் வேளையில் அறுகம் புல்லால் அர்ச்சித்து வழிபடும் போதும் எமக்கு வருகின்ற துன்பங்கள் யாவும் எளிதாக நீங்கும். சகல சௌபாக்கியங்களும் கிட்டும். **"பிரணவப் பொருளாம் பெருந்தகை ஐங்கரன் சரவணவற் புதமலர் தலைக்கணி வோமே"** என விநாயகப் பெருமான் அதிவீரராம பாண்டியன் இயற்றிய நாயக்கர் காலத்தைச் சேர்ந்த **'வெற்றி வேற்கை'** எனும் நூலில் போற்றப்படுகிறார். ஓம் எனும் பிரணவ மந்திரத்தின் பொருளாய் விளங்கும் கருணை எனும் பெருந்தகைமையுடைய ஐந்து கைகளை உடைய விநாயகப் பெருமானது திருப்பாதங்கள் எனும் தாமரை மலர்களை எமது தலைகளிலே சூடிக் கொள்வோம், என்பது இப் பாடலின் பொருளாகும்.

விநாயகருக்குரிய விரதங்களில் **'பிள்ளையார் பெருங்கதை'** இலங்கை இந்து மக்களிடையே மிகுந்த செல்வாக்கை பெற்றது. பாராயண வழக்கில் உள்ளது. விநாயக சஷ்டி விரதத்தை அனுட்டிப்பவர்கள் விரத காலம் இருபத்தொரு நாட்களும் இந்த நூலை பாராயணம் செய்கிறார்கள். விநாயகசஷ்டி விரதத்தைக் கூட **'பெருங்கதை விரதம்'** என்றே சுட்டுகிறார்கள். இப் பிள்ளையார் கதையை எடுத்து நோக்குவோமாயின் யாழ்பாணத்தில் ஒல்லாந்தர் ஆட்சி நிலவிய காலத்தில் சுன்னாகம் எனும் ஊரில் வாழ்ந்த வரத பண்டிதர் என்பவரால் இயற்றப்பட்டதாகும். இப் பிள்ளையார் கதை எழுநூற்று நாற்பத்து நான்கு அடிகளைக் கொண்ட ஆசிரியப்பாவால் ஆன ஒரு நூலாகும். இந்நூலின் உள்ளடக்கமாக உமாதேவியார் பூமியிலே மானிடப் பெண்ணாகப் பிறந்து, தவம் செய்து சிவபெருமானை திருமணம் செய்தமை, இருவரும் யானையுருவம் பெற்று விநாயகரை ஈன்றருளியமை, கஜமுகாசுரனை தம் தந்தங்களுள் ஒன்றை முறித்துக் குத்த, வீழ்ந்த கஜமுகாசுரன் மூசிகமாக உருமாறி தாக்க வர விநாயகர் அதனை வாகனமாக்கிக் கொண்டமை, மற்றும் ஆவணி விநாயக சதுர்த்தி விரதத்தை நோற்ற தேவர்கள் முன் நடனமாட, அதைப் பார்த்துச் சிரித்த சந்திரனுக்கு சாபம் இட்டமை என்பவற்றை குறிப்பிடலாம். இப் பிள்ளையார் கதையுடன் புராணக்கதைகளும் தொடர்புபடுகின்றது. இப் பிள்ளையார் கதையில் விநாயக சஷ்டி விரதத்தின் மகிமைகள் எடுத்துரைக்கப் படுகிறது. பஞ்ச பாண்டவர்கள் விரதபலன் உடனே கிடைக்கவும் பகைவரை வென்று வாகை சூடவும் இவ் விரதத்தை அனுட்டித்து எண்ணியவை எல்லாம் எய்தினார்கள். பொய் சாட்சி சொன்ன காரணத்தினால் உமாதேவியின் சாபத்திற்கு ஆளாகி பாம்பாக மாறிய திருமால்விநாயக சஷ்டி விரதத்தை அனுட்டித்து தன் பழைய வடிவத்தைப் பெற்றார். பிள்ளையார் கதையின் இறுதியில் நூற் பயன் கூறுவனவாய் அமையும் நான்கு வெண்பாக்கள் இடம்பெறுகின்றன. பிள்ளையார் கதையை கேட்டால் பொன்,பொருள், கல்வி, புத்திரபாக்கியம் முதலான எல்லாச் செல்வாக்கும் கிட்டும். விநாயகசஷ்டி விரதத்தை அனுட்டிப்பவர்கள் சிறந்த வாழ்வு வாழ்வார்கள், நோற்காது அருகிலிருந்து அக் கதையை கேட்பவர்களிற்கும் கேடு வராது. அவர்கள் எல்லாப் பிறப்புகளிலும் சிறப்போடு வாழ்வார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழத்தில் விநாயகருக்குரிய பல பிரசித்தி பெற்ற ஆலயங்கள் உள்ளன. அவ்வாறான பிரசித்தி பெற்ற ஆலயங்களில் ஒன்றான களுதாவளை பிள்ளையார் ஆலயம் மட்டக்களப்பு நகருக்கு தெற்கே களுதாவளை எனும் கிராமத்தில் அமைந்துள்ளது. இவ் ஆலயத்தின் மூல மூர்த்தி சுயம்புலிங்க பிள்ளையார் ஆவார். இவ் ஆலயத்தின் தல விருட்சம் வில்வமரமாகும். ஆலய வரலாறாக வேடுவத்தலைவனான களுவனால் வழிபட்ட இடமாதலால் களு தேவாலயம் என அழைக்கப்படகின்றது. தற்போது களுதாவளை என மருவியுள்ளது.

இவ் ஆலயத்தின் பூசைகளும் விழாக்களும் ஆனி உத்திரத்தை தீர்த்தோற்சவமாக கொண்டு பத்து நாட்கள் நடைபெறும். இங்கு நித்திய, நைமித்திய, காமிக பூசை இடம் பெறுகின்றது. இவ்வாலயத்தின் சிறப்புக்களாக சுயம்புலிங்க பிள்ளையாராக வழிபடப்படுகின்றமை, கலைவனப்பு மிக்க சிற்பங்களோடும், ஓவியங்களோடும் காட்சியளிக்கும் மடாலயமாகியமை, இத்தலத்தின் தோற்றம் பற்றி களுதேவாலய கல்வெட்டில் குறிப்பிடபட்டுள்ளமை, என்பவற்றைக் குறிப்பிடலாம். மேலும் மாமாங்கப் பிள்ளையார் ஆலயம், கட்டுக்கலை செல்வ விநாயகர் ஆலயம் என்பவற்றை நாம் இங்கு குறிப்பிடலாம். இக் கட்டுக்கலை செல்வ விநாயகர் ஆலயத்தின் ஒரு சிறப்பாக பங்குனி உத்தரத்தன்று பஞ்சரதங்கள் பவனி வருகின்றமையை குறிப்பிடலாம். இவ் ஆலயம் கண்டி மன்னன் கீர்த்தி ஸ்ரீ இராஜசிங்கனால் 1752 இல் அமைக்கப்பட்டது. பங்குனி மாதம் 10 நாட்கள் இங்கு மகோற்சவம் இடம்பெறும் எனவே நாமும் ஐங்கரனை வழிபட்டு வாழ்வில் வெற்றி பெறுவோமாக.

**"அண்டம் முழுவதும் ஒன்றினுள் அடக்கம்**
**அதுவே ஆனை முகம் எனும் ஓம்கார விளக்கம்**
**சுழலும் கோள்கள் அவன் சொல் கேட்கும்**
**அவனை தொழுதால் போதும்**
**நல்லதே நடக்கும்"**

**செல்வன். நிலாதரன் ரேனுராஜ்**
**தரம் 11E**

**"எதுவரினும் வருக அல்லது எது போயினும் போக"** - சுவாமி விபுலாநந்தர் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சங்கடஹர சதுர்த்தி விரதம்

**விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்**
**விநாயகனே வேட்கை தணிவிப்பான் - விநாயகனே**
**விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனுமாந் தன்மையினாற்**
**கண்ணிற் பணிமின் கனிந்து**

இந்து சமயப் பிரிவுகளில் காணாபத்தியமும் ஒன்று. இது கணபதியை முழு முதற் கடவுளாகக் கொண்ட சமயம் ஆகும். அந்த வகையில் கணபதிக்குரிய விரதங்களும் வழிபாடுகளும் தனித்துவமிக்கவை ஆகும். **"பிடித்து வைத்தால் பிள்ளையார்"** என்று சொல்வதற்கேற்ப வடிவமைக்கவும், வணங்கவும் எளிமையாக இருப்பவர் விநாயகப் பெருமான். எளிமையான மூர்த்தி என்றாலும் பெரும் கீர்த்தியைக் கொண்ட முதற் கடவுள். இவரை விலக்கி விட்டு எந்த வழிபாட்டையும் செய்ய முடியாது என்பது தான் இவரின் சிறப்பம்சம்.

விநாயகருக்குரிய விரதங்களுள் சதுர்த்தி விரதமும் ஒன்றாகும். ஒரு மாதத்தில் இரண்டு சதுர்த்தி விரதம் உள்ளது. ஒன்று சுக்கில சதுர்த்தி மற்றையது சங்கடஹர சதுர்த்தி ஆகும். இதில் சங்கடஹர சதுர்த்தி மிகவும் விசேடமுடையது. **"சங்கஷ்டம்"** என்றால் கஷ்ரங்கள் சேருதல் என்று பொருள். வாழ்வில் சேரும் சகல சங்கடங்களையும் நீக்கும் சதுர்த்தி விரதம் ஆகும். இவ்விரதமானது ஒவ்வொரு மாதத்திலும் பௌர்ணமியை அடுத்து வரும் நான்காம் நாள் அனுஷ்டிக்கப்படுகின்றது. அன்று மாலையும் இரவும் சேரும் நேரத்தில் விநாயகருக்கு வழிபாடு செய்யப்படுகிறன்றது. விநாயகரைப் போலவே விரதங்களிற்குள் முதன்மையானதும் எளிமையானதும் சதுர்த்தி விரதம் ஆகும்.

**விரத வரலாறு**

ஒரு சமயம் கையாலயத்தில் விநாயகப் பெருமான் தன்னுடைய படைகளோடு ஆடிப் பாடி மகிழ்ந்து விளையாடிக் கொண்டிருந்தார்.இதனை வானுலகில் இருக்கும் தேவர்கள் பார்த்துக் கொண்டிருந்தனர் அதில் சந்திரனும் ஒருவர். சந்திரனோ நிறைந்த அழகு பொருந்தியவர்.அப்படியான அழகுடையவர் விநாயகரின் நடனத்தைப் பார்த்து நகைத்தார்,அடக்கமின்றி தன்னைப் பார்த்துச் சிரித்த சந்திரனை ஒளியில்லாமல் மங்கிப் போகும்படி(தேய்ந்து) சபித்தார். விநாயகரின் சாபத்திற்குள்ளான சந்திரன் ஒளி மங்கிப் போக அழகு குறைந்து போனார்.இந்த சாபத்தை எங்கு சென்று தீர்ப்பது என்று அலைந்தார். எந்த கடவுள் சாபத்தை இட்டாரோ அவரிடத்தே அந்த சாப விமோசனம் பெற வேண்டும் என்று சில காலம் கழித்து நினைத்து விநாயகரை நோக்கி தவம் இருந்து வழிபட்டு சாப விமோசனம் பெற்றார். (விநாயகர் சந்திரனுக்கு அருள் புரிந்தநாள்) அத்தினமே சங்கடஹர சதுர்த்தி ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்விரதத்தை அனுஷ்டிப்பவர்கள் விநாயகரின் அருளையும் சந்திரனின் அருளையும் பெற்றுக்கொள்வர். மனதோடு தொடர்புடைய சந்திரனை (மனோகரன்) வழிபடுவதால் மனம் குழப்பமடையாது தெளிவான மனப்பாங்கு, மன அமைதி, காரிய சித்தி போன்றவை கைகூடும்.

**விரதத்தை அனுஷ்டிக்கும் முறை**

சதுர்த்தி அன்று காலையில் குளித்து விட்டு அருகிலுள்ள விநாயகர் ஆலயத்திற்குச் சென்று பிள்ளையாரை பதினொரு முறை வலம் வர வேண்டும். வெள் எருக்கலை பூமாலை சாற்றி அறுகம்புல் கொடுத்து விநாயகருக்கு அர்ச்சனை செய்து நெற்றியில் குட்டிக் கொண்டும் தோப்புக்கரணம் போட்டும்விநாயகரை வணங்க வேண்டும். கோயிலுக்குச் சென்று வீட்டிற்கு வந்ததும் பச்சரிசியை ஊறவைத்து அதனுடன் சற்று வெல்லத்தூளும் ஒரு வாழைப்பழமும் சேர்த்துப் பிசைந்து பசுவிற்கு கொடுக்க வேண்டும். கணபதியோடு பசு வழிபாடு செய்வது நன்மை தரும்.

வீட்டிலே மோதகம், பால், தேன், கொய்யா, வாழை, நாவல், கொழுக்கட்டை, சுண்டல் என்று தயாரித்து விநாயகருக்கு நைவேத்தியம் செய்து வழிபடலாம். விரத காலத்தில் பின்வரும் சுலோகத்தினை கூறி வணங்கினால் எல்லா சங்கடங்களும் நீங்கி சகல சௌபாக்கியங்களும் கைகூடும். என்பதில் ஐயமில்லை. எனவே நாமும் இவ்விரதத்தை முறைப்படி அனுஸ்டித்து விநாயகப் பெருமானின் அருளைப் பெறுவோம்.

**" மூஷிக வாகன மோதக ஹஸ்த**
**சாமர கர்ண விளம்பித சூத்ர**
**வாமனரூப மஹேஸ்வர புத்ர**
**விக்ன விநாயக பாத நமஸ்தே .."**

எனவே நாமும் இவ்விரதத்தை முறைப்படி அனுஷ்டித்து விநாயகப் பெருமானின் அருளைப் பெறுவோம்.

**திருமதி. S.சிறிரங்கராஜா**
**ஆசிரியை**
**தி/இ.கி.ச ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரி.**
**தேசிய பாடசாலை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விநாயகருடைய திருவுருவங்கள்

இந்து மதத்தில் எந்த ஒரு சுப நிகழ்ச்சியையும் தொடங்குவதற்கு முன்னர் விநாயகரை வணங்கி தொடங்குவது வழக்கம். விநாயகர் பல்வேறு உருவங்களில், பெயர்களில் காட்சி தருவதைப் பார்த்திருப்போம்.

விநாயகரின் 32 உருவம் மற்றும் பெயர்கள் பற்றி இங்கு பார்ப்போம். 32 வகை கணபதிகள் இந்த 32 கணபதிகளில் முதல் 16 கணபதி "ஷோடச கணபதி" வகைகள் என்றும், அடுத்த 16 கணபதி "ஏக விம்சதி" வகை என்றும் பிரிக்கப்பட்டுள்ளன.

1. **பால கணபதி**

குழந்தை போன்ற உருவத்தில், செங்கதிர் நிறத்தில் காட்சி தரக்கூடியவர்.இவர் மாம்பழம், வாழைப்பழம், பலாப்பலம், கரும்பு ஆகியவற்றை தன் நான்கு திருக்கரங்களில் தாங்கியவர்.

2. **தருண கணபதி**

சிவந்த திருமேனியை கொண்ட தருண கணபதி, அங்குசம், பாசம், ஒடிந்த தந்தம், கரும்புத் துண்டு, நெற்கதிர்கள், மோதகம், விளாம்பழம், நாவற்பழம் ஆகியவற்றை தன் 8 கரங்களில் ஏந்தியவர்.

3. **பக்தி கணபதி**

வெள்ளை நிறத்தில் காணப்படும் பக்தி கணபதி, தனது நான்கு திருக்கரங்களில் பாயாசக் கிண்ணம், தேங்காய், மாம்பழம், வாழைப்பழம் ஆகியவற்றை வைத்திருப்பார்.

4. **வீர கணபதி**

சிவந்த திருமேனியுடன் காணப்படும் வீர கணபதி, தன்னுடைய 16 திருக்கரங்களில் வேதாளம், வேல், அம்பு, வில், சக்கரம், கத்தி, கேடயம், சம்மட்டி, கதை, அங்குசம், நாகம், பாசம், சூலம், குந்தாலி, மழு, கொடி ஆகிய பதினாறு பொருட்களை திருக்கரங்களிலும் ஏந்தியிருப்பார்.

5. **சக்தி கணபதி**

அந்தி வானம் போல சிவந்த மேனியுடன் இருக்கும் சக்தி கணபதி தன்மடியில் பச்சை நிறத்தினாலான தேவியை, ஒரு கையால் இடுப்பில் தேவியை அணைத்திருப்பது போலவும், மற்ற கைகளில் அபய ஹஸ்தம், பாசம், பூமாலை ஆகியவற்றை தாங்கியும் இருப்பார்.

6. **துவிஜ கணபதி**

வெண்மையான திருமேனியை உடைய துவிஜ கணபதி, நான்கு முகங்கள், புத்தகம், அட்சமாலை, கமண்டலம், தண்டம் ஆகியவற்றை தன் கரங்களில் தாங்கியவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7. சித்தி கணபதி

பொன் மற்றும் பசுமை நிறம் கலந்த சித்தி விநாயகர், தன் நான்கு திருக்கரங்களில் பரசு, பூங்கொத்து, எள்ளுருண்டை , மாம்பழம் ஆகியவற்றையும், தன் துதிக்கையில் மோதகத்தையும் தாங்கி இருப்பார்.

8. உச்சிஷ்ட கணபதி

நீல நிறத்தில் காட்சி அளிக்கும் உச்சிஷ்ட கணபதி, தன் ஆறு திருக்கரங்களில் இரண்டில் நீலோத்பல மலர்களும், மாதுளம் பழம், நெற்கதிர், அட்சமாலை, வீணை ஆகியவற்றை தாங்கி இருப்பார்.

9. விக்ன கணபதி

தங்க நிறத்தை உடைய விக்ன கணபதி, தனது 10 திருக்கரங்களில் சக்கரம், சங்கு, கோடரி, ஒடிந்த தந்தம், பாணம், கரும்பு வில், பூங்கொத்து, புஷ்ப பாணம், பாசம், மாலை ஆகியவற்றுடன் காணப்படுகின்றார்

10. ஷிப்ர கணபதி

செந்நிறத்தில் இருக்கும் ஷிப்ர கணபதி, தன் கைகளில் ஒடிந்த தந்தம், கற்பகக் கொடி, பாசம், அங்குசம் ஆகியவற்றை தன் நான்கு திருக்கரங்களில் ஏந்தி ரத்ன கும்பத்தை துதிக்கையில் கொண்டிருப்பார்.

**"சைவ சமயத்தை வளமாக காட்ட எங்கெங்கு கோயில்கள் இருக்கின்றனவோ அங்கெல்லாம் இராமகிருஷ்ணமிஷன் பாடசாலைகளை நிறுவவதற்கு முயற்சி எடுங்கள்"** - சுவாமி விபுலாநந்தர் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொரோனா கால சமய வாழ்க்கை

நோய் என்றால் என்னவென்று தெரியாமல் வாழ்ந்தது தான் சிறுவர் எம் வாழ்க்கை இதன் போது தொற்று நோயின் அபாய விழிப்புணர்வுகளுக்கு அளவே இல்லை.சட்ட நடவடிக்கைகளுக்கும் அளவே இல்லை இத்தகைய சூழ்நிலையில் நாங்களும் எங்கள் சமயமும் எப்படி ஆயிற்று. ஆலயங்களின் பிரதான கதவுகள் மூடிய வகையில் பூசைகள் இடம்பெற்றன. 10,20 மனிதர்களுடன் திருமணக் கிரியைகள், ஆளே இல்லாமல் மரணக்கிரியைகள், நல்லது கெட்டது எல்லாவற்றிலும் இருந்து தள்ளிப் போன ஒரு சமயக் கலாசாரம் பிறந்தது.

ஆனால் வீட்டிலிருந்த கடவுள் வழிபாடு அம்மா அப்பா வழிபாடு இடம் பெற்றதே தவிர, பிள்ளைகள் கடவுளை காணும் நேரம் பிந்தியது. பூப் பறித்தல், விளக்கு வைத்தல், தேவாரம் பாடி பாடசாலைக்குச் செல்லல், வீட்டை விட்டு வெளியே போகும் போது பூசும் திருநீறும் மீதமாய் வீட்டு சாமித் தட்டில் இருந்தது. இருந்தாலும் ஒரு நேரமாவது எல்லோரும் ஒன்று கூடி வட்டமாக இருந்து உணவு உண்ணும் கலாசாரம் வளர்ந்தது. மூதேவிக்கு (நித்திரை) அதிக மதிப்பு கிடைத்தது.

அருமையான மூலிகைக்கும் எங்கள் கடவுளுக்கும் உள்ள தொடர்புகள் மஞ்சள், வேப்பிலை, துளசி இலை இவற்றின் மருத்துவமும் மகத்துவமும் அறிந்த காலம். சுய சுத்தம், கை கழுவுதல், கால் கழுவுதல், சுவாச சுத்தம் மூச்சுப் பயிற்சியெல்லாம் கற்றுத் தந்த காலம் இது.

சமயப் பாடல்களையும் பக்திப் பாடல்களையும் சங்கதிகள் தவறாமல் இராகத்துடன் கேட்டுக் கேட்டுச் செவி இனிமை அடையச் செய்த தொழில்நுட்ப முன்னேற்றமும் You Tube உம் இது மட்டுமல்ல பழங்கதைகள் சொல்ல பாட்டி இல்லாத போதும் பாடத்துடன் (தடிப்பு) கூடிய சமயக் கதைகள், புராண வரலாறுகள், மகாபாரதம் என்பது அழிவில்லாத அற்புத சமய இலக்கியங்களை ஆர்வத்துடன் பார்த்துக் கேட்டு அறியக் கூடிய சமய வாழ்க்கைத் தத்துவம் இந்த கொறோனா வாழ்வே.

**ஹரிசான் டிசாகரன்**
**தரம் 8A**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலய வழிபாடு

எங்கும் வியாபித்திருக்கும் இறைவனை மன ஒருமைப்பாட்டுடன் வழிபட்டு இறையருள் பெறுவதற்கு ஏற்ற இடம் ஆலயமாகும். இவ்வாலய வழிபாட்டு முறையை நாம் நோக்குவோமாயின்,

01. ஆலயத்திற்குச் செல்லும் முறை ஸ்நானம் செய்து, தோய்த்துலர்ந்த ஆடைகளை அணிந்து, விபூதி தரித்துக்கொண்டு, சிவ சிந்தனையுடன் ஆலயம் செல்ல வேண்டும்.

02. வணங்கும் முறை

ஆலய வீதியில் கை, கால்களைக் கழுவிச் சுத்தம் செய்தபின் கோபுரத்தை நமஸ்காரம் செய்தவாறு உள்ளே நுழைந்து பலிபீடத்திற்கு அப்பால் வடக்கே தலை வைத்து வீழ்ந்து வணங்குதல் வேண்டும்.

03. வணக்க முறைகள்

**1. திரியாங்கம்**

சிரசில் இரு கைகளையும் குவித்து வணங்குதல். கோபுரத்தைக் கண்டதும் இவ்வணக்கம் செய்தல் வேண்டும்.

**2. அட்டாங்க நமஸ்காரம்**

தலை, கையிரண்டு, செவியிரண்டு, வாய், புயங்கம் இரண்டு என்னும் எட்டு உறுப்புகளும் நிலத்தில் படும்படியாக வணங்கும் முறையாகும். மார்பு, பூமியில் படும்படி வலக்கையை முன்னும், இடக்கையைப் பின்னும் நேரே நீட்டி பின் அம்முறையே மடக்கி வலப்புயமும் இடப்புயமும் மண்ணிலே பொருந்தக் கைகளை கீழ் நோக்கி நீட்டி வலக்காதை முன்னும் இடக்காதைப் பின்னும் மண்ணிலே பொருந்தச் செய்து வணங்குதலே அட்டாங்க நமஸ்காரம் ஆகும். (இது ஆண்களுக்கு மட்டும் உரியது).

**3. பஞ்சாங்க நமஸ்காரம்**

தலை, கையிரண்டு, முழந்தாள் இரண்டு என்னும் ஐந்து உறுப்புகளும் நிலத்தில் பொருந்தும்படியாக வணங்கும் முறையாகும். (இது பெண்களுக்கு மட்டும் உரியது) இவ்வாறு திரியாங்க நமஸ்காரம், அட்டாங்க நமஸ்காரம், பஞ்சாங்க நமஸ்காரம் என மூன்று வகையான வணக்க முறைகள் குறிப்பிடப்பட்டுள்ளது.

**4. வீதி வலம் வருதலும் எண்ணிக்கையும்**

வீதியை வலம் வரும்போது சிரசிலாவது மார்பிலாவது இரு கரங்களையும் குவித்து, சிவநாமங்களையும் உச்சரித்தவாறு மெல்ல அடியெடுத்து வைத்து நடக்கவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கர்ப்பக்கிரகம் திறந்துள்ள போதே வீதி வலம்வருதல் வேண்டும்.
விநாயகரை - ஒரு முறையும்
அம்பிகையையும், விஷ்ணுவையும் - நான்கு முறையும்
சிவனை - மூன்று முறையும் வலம் வருதல் முறையாகும்.

- தினமும் காலையில் வீதி வலம் வந்து வணங்குபவர்கள் தீராத நோய்தீரப் பெறுவர்.
- உச்சிக்காலத்தில் வலம் வருபவர்கள் இஷ்ட சித்திகளைப் பெறுவர்.
- மாலையில் வலம் வருபவர்கள் பாவநீக்கம் பெறுவர்.

**விநாயகரை வணங்கும் முறை**

முஷ்டியாகப் பிடித்து கைகளினால் நெற்றியில் மும்முறை குட்டி வலக்காதை இடக்கையினாலும் இடக்காதை வலக்கையினாலும் மாறிப்பிடித்து மும்முறை தாழ்ந்தெழுந்து (தோப்புக்கரணம்) வணங்கவேண்டும்.

**குட்டிக் கும்பிடுதலும் தோப்புக்கரணமும்**

ஒருசமயம் அகத்திய மாமுனிவர் காவிரி நதியை தனது கமண்டலத்தில் அடக்கி வைத்துக்கொண்டார். விநாயகப் பெருமான் காகம் வடிவெடுத்து அந்தக் கமண்டலத்தை தட்டிவிட்டு காவிரி நதியை விடுவித்தார். பின்னர் ஒரு அந்தண சிறுவனாக வடிவெடுத்து நின்றார். கோபம் கொண்ட அகத்திய முனிவர் அந்த அந்தண சிறுவனின் தலையில் குட்டுவதற்காக சிறுவனை விரட்டிக் கொண்டு ஓடினார். அப்போது விநாயகப்பெருமான் தனது சுயரூபம் எடுத்து "உலக நன்மைக்காகத்தான் காவிரி நதியை விடுவித்ததாகக்" கூறினார். அகத்திய முனிவரும் தனது தவறிற்கு வருந்தி தன் தலையில் தானே குட்டிக்கொண்டு விநாயகப்பெருமானிடம் தன்னை மன்னித்து அருளும்படி வேண்டிக்கொண்டார். அன்றிலிருந்து தலையில் குட்டிக் கும்பிடும் பழக்கம் தொடங்கியதாக கருதப்படுகின்றது.

கஜமுகாசுரன் என்ற அசுரன் ஒருசமயம், தேவர்களை அடிமைப்படுத்தி தனக்கு தோப்புக்கரணம் போட்டு வணக்கம் செலுத்தவைத்தான். விநாயகப் பெருமான் அந்த அசுரனை அழித்து தேவர்களை விடுவித்தார். அசுரனிற்கு போட்ட தோப்புக்கரணத்தை தேவர்கள் விநாயகப் பெருமானுக்கு போட்டு பக்தியுடன் வணங்கினார்கள். அன்றுமுதல் விநாயகப் பெருமானுக்கு தோப்புக்கரணம் போட்டு வணங்கும் பழக்கம் ஏற்பட்டது.

வீதி வலம் வரும்போது ஒவ்வொரு தரமும் சண்டேஸ்வரரை வழிபடாது (கைகொட்டுதல் மூலம் அவரது தவத்திற்க்கு இடையூறு செய்யாமல்) இறுதியாக வலம் வரும்போது மாத்திரம் அவரை வணங்கி வழிபாட்டின் பலனைத் தரும்படி கேட்டு மும்முறை மெல்லக் கைகொட்டி வணங்க வேண்டும். சண்டேஸ்வரரை **வலம் வந்து வணங்கக் கூடாது.** ஏனெனில் மூலஸ்தானத்திற்கும் சண்டேஸ்வரருக்கும் இடையே குறுக்கே போகக்கூடாது என்பது விதி. இதே போல, **நந்திக்கும் மூலஸ்தானத்திற்கும்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இடையே போவதும் தகாது.** பின் நந்தியை வணங்கி அனுமதி பெற்று நமது பாவங்கள் யாவற்றையும் பலிபீடத்திலே பலியிட்டதாகப் பாவனை செய்து உள்ளே சென்று அர்ச்சனை செய்வித்து வணங்க வேண்டும். வழிபாடு முடிந்ததும் சிறிது நேரம் ஆலயத்தில் ஓர் இடத்தில் அமைதியாக இருந்து தியானம் செய்வது அவசியமாகும்.

**ப. ஸ்ரீ நிகேதன்**
**தரம் 8E**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறுகம்புல்லின் மகிமை

இறைவன் படைப்பில் எதுவுமே அற்பம் இல்லை என்பதை அடியவர்களுக்கு உணர்த்தும் வகையில் நிறைய விஷயங்களை அந்த பரம் பொருளே முன்னெடுத்துள்ளது. அத்தகைய ஒன்று தான் நாம் விநாயகருக்கு சாற்றும் அறுகம் புல். கிராமப்புற சாலையோரங்களிலும், விவசாய நிலங்களிலும் எளிதில் காணப்படும் அறுகம்புல்லானது மழை இல்லாவிட்டாலும் எப்படிப்பட்ட கடுமையான வெப்பத்தையும் தாங்கி நிற்கும் தன்மை கொண்டது. ஒரு இடத்தில் நட்டு வைத்தால் சுலபமாக பரவி தழைக்கக்கூடியது. அதனால் தான் நம் முன்னோர்கள் மணமக்களை ஆசீர்வதிக்கும் போது கூட **"ஆல் போல் தழைத்து அறுகு போல் வேரூன்றி"** என்று வாழ்த்தினார்கள். கோடை காலத்தில் தண்ணீர் இல்லாவிட்டால் அறுகு வாடுமே அன்றி அழியாது. சிறு புல் என்று நாம் நினைக்கும் அறுகம்புல் எப்படி விநாயகரை அலங்கரிக்கிறது என்பதை தெரிந்து கொள்வதற்கு முன் அதைப் பற்றிய ஒரு புராணக் கதையை நாம் பார்ப்போம்.

ஒரு முறை எம தர்மராஜனின் உடலில் இருந்து வெளிப்பட்ட வெப்பமானது ஒரு அசுரனாக உருமாறியது. அக்னி தேவனே அவனை நெருங்க முடியாத அளவுக்குத் தகித்துக் கொண்டிருந்த காரணத்தினால் **"அனலாசுரன்"** என்று அழைக்கப்பட்டான். தேவர்கள் அவனின் கொடுமைகளை தாங்க முடியாமல் அலறினார்கள். அப்போது ஒரு அந்தணர் வடிவில் தோன்றிய விநாயகர், அவர்களை காக்கும் பொருட்டு அனலாசுரனைத் தேடிப் போனார். விஸ்வரூபம் எடுத்த அவர், தன் துதிக்கையால் அனலாசுரனை அப்படியே எடுத்து விழுங்கினார். விக்னேஸ்வரரின் பெரும்பானை வயிற்றுக்குள் அண்ட சராசரமும் ஐக்கியம் என்பதால், அனைவரும் வெப்பம் தாங்க முடியாமல் தவித்தனர்.

விநாயகரின் வெப்பத்தைத் தணிவிக்க ஒவ்வொருவரும் ஒரு உபாயங்களை கையாண்டார்கள். ஆனாலும் வெப்பம் குறைந்தபாடில்லை. அப்போது அங்கே வந்த சப்த ரிஷிகள் எனப்படும் அத்திரி, பிருகு, குத்ஸர், வசிஷ்டர், கவுதமர், காஸ்யபர், ஆங்கிரஸர் ஆகிய எழுவரும் சேர்ந்து ஒரு சாண் அளவுள்ள 21 அறுகம்புற்களைக் கொண்டு வந்து கணபதியின் தலையில் வைத்தனர். இதனால் கணபதியின் உடல் சட்டென்று குளிர்ந்து, வயிற்றில் இருந்த அனல் தணிந்தது. மனம் மகிழ்ந்த விநாயகர் அன்று முதல், 'இனி தன்னை பூஜித்து, வரத்தைப் பெற விரும்புபவர்கள், அறுகம்புல் கொண்டுவணங்கினால் மகிழ்ந்து அவர்கள் கேட்ட வரத்தை அருள்வேன்' என்று வரமளித்தார்.

அறுகம் புல்லின் மகத்துவம் சொல்லும் இன்னொரு கதை ஒரு சமயம் கௌண்டில்ய முனிவர் தன் மனைவியான ஆசிரியையுடன் தவ வாழ்க்கை வாழ்ந்து வந்தார். விநாயகர் மேல் அளவற்ற பக்தி கொண்ட கௌண்டில்யர் தினமும் விநாயகருக்கு அறுகம் புல்லால் அர்ச்சனைகள் செய்து வந்தார். ஆசிரியைக்குக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன் கணவன் மன்னர்களையும், சக்கரவர்த்திகளையும் சந்தித்து பெரும் பொருள் ஈட்டி வரவில்லையே என்ற குறை இருந்தது. மனைவியின் மாயையை அகற்றவும், அவளுக்கு அறுகம் புல்லின் மகிமையையும், இறைவனின் மேன்மையையும் உணர்த்த எண்ணம் கொண்டவராய் கௌண்டின்யர் அவளிடம், அறுகு ஒன்றை விநாயகருக்குத் அர்ச்சித்து, அதை அவளிடம் கொடுத்து, **"இந்த அறுகம் புல்லைத் தேவேந்திரனிடம் கொடுத்து இதன் எடைக்கு ஈடாகப் பொன் பெற்றுக் கொள்வாயாக!"** என அனுப்பினார்.

ஒரு சிறிய அறுகம்புல்லின் எடைக்கு ஒரு குன்றிமணிபொன் கூட வாராதே? என அலட்சியமாக எண்ணினாலும் கணவனின் சொற்படி தேவேந்திரனிடம் நடந்ததைச் சொல்லி இந்த அறுகின் எடைக்குப் பொன் வேண்டுமாம் எனக் கேட்டாள். தேவேந்திரன் திகைத்து அறுகின் எடைக்குப் பொன்னா? என்னால் இயலாத ஒன்றே எனத் தவித்துத் தன் செல்வம் பூராவையும் தராசில் ஒரு பக்கமும், அறுகை மறுபக்கமும் வைத்தான். அருகின் எடைக்கு அந்தச் செல்வம் ஈடாகாததால் தேவேந்திரன் தானே ஏறி உட்கார தட்டு சமனாயிற்று. திகைத்த இருவரும், முனிவரின். ஆசிரமத்திற்கு வந்தனர்.

கௌண்டில்ய முனிவரிடம் நடந்ததைச் சொன்ன ஆசிரியை வெட்கித் தலை குனிந்தாள். சிறு புல்லாக இருந்தாலும் ஆதி மூலமான விநாயகபெருமானின் பூஜைக்கு உகந்த அறுகம் புல்லைப் போல் நாமும் இறைவன் முன் நமது அகங்காரம், ஆணவம் என்பவற்றை அடக்கி எளிமையாக இருந்து அவர் அருள் பெறுவோமாக.

**சீ.பிரதிக்ஷன்**
2022 கலைப்பிரிவு
**இந்து மன்றத் தலைவர்**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எமது நன்றிகளை....

சித்தி விநாயகர் ஆலய மூன்றாவது கும்பாபிஷேக மலர் வெளியீட்டிற்காக

ஆசியுரை செய்திகளை நல்கிய வணக்கத்திற்குரிய கொழும்பு இராமகிருஷ்ணசங்க சுவாமி - அஷரத்மானந்தஜி அவர்கட்கும், நல்லை திருஞானசம்பந்த ஆதீனம் - இரண்டாவது குருமஹாசந்நிதானம் - ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக - ஞானசம்பந்த பராமாச்சாரிய சுவாமிகள் அவர்கட்கும், மட்டக்களப்பு இரமகிருஷ்ணசங்க பொது முகாமையாளர் சுவாமி தக்ஷஜானந்தாஜி அவர்கட்கும், ஆலய பிரதிஷ்டாகுரு வேதாகமமாமணி சோ.இரவிச்சந்திர குருக்கள் அவர்கட்கும், முன்னாள் பிரதமகுரு (சித்தி விநாயகர் ஆலயம்) சிவகுமார குருக்கள் அவர்கட்கும்,

வாழ்த்துச் செய்திகளை வழங்கிய எமது மதிப்பிற்குரிய வலயக்கல்விப் பணிப்பாளர்(திருக்கோணமலை) அவர்கட்கும், நல்வழி காட்டிய எமது அதிபர் அவர்களுக்கும், பாடசாலை அபிவிருத்திச் சங்கச் செயலாளர், பாடசாலை பழைய மாணவர் சங்கச் செயலாளர் அவர்களுக்கும்,

பல ஆலோசனைககள் வழங்கிய முன்னாள் அதிபர் அவர்களுக்கும்,

எமது பணிகளில் அயராது உழைத்த பொறுப்பாசிரியர், பழைய மாணவர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்களுக்கும்,

இதழின் சிறப்பாக தமது மேலான ஆலோசனைகளை வழங்கிய கல்லூரியின் பிரதி அதிபர்கள், உதவி அதிபர் அவர்களுக்கும், ஏனைய ஆசிரியர்களுக்கும்,

பல சமயக் கருத்துக்கள் உள்ளடங்கிய கட்டுரைகளை, ஆக்கங்களை தந்துதவிய அறிஞர் குழாத்திற்கும், ஆசிரியர்களுக்கும், மாணவச் செல்வங்களுக்கும்,

ஆலய வர்ண வேலைப்பாடுகளை சிறப்பாக வடிவமைத்த K.சத்தியசீலன் அவர்களுக்கும்,

ஆலயத் திருப்பணி வேலைகளை முழுப் பொறுப்பேற்று அயராது உழைத்த பழைய மாணவர் சங்கத்தினருக்கும், நிதிப்பங்களிப்பை வழங்கிய அனைத்து அன்பர்களுக்கும், ஆலய பாலஸ்தாபனக் கிரியைகள் மற்றும் பூர்வாங்கக் கிரியைகளையும், கும்பாபிஷேகக் கிரியைகளையும் தலைமை தாங்கி சிறப்பாக வழி நடாத்திய ஆலய பிரதிஸ்டா குரு வேதாகமமாமணி சோ.இரவிச்சந்திர குருக்கள் அவர்களுக்கும், ஏனைய சிவாச்சாரியார்கள் அனைவருக்கும்,




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இம்மலர் வெளியீட்டிற்காக அனைத்து விதத்திலும் உதவிகளை நல்கிய அதிபர், பிரதி அதிபர்கள், உதவி அதிபர்கள், பகுதித் தலைவர்கள், ஆசிரியர்கள், மாணவத் தலைவர்கள், இந்து மன்றத் தலைவர்கள், மாணவர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள், பழைய மாணவர் சங்க உறுப்பினர்கள், நலன் விரும்பிகள் அனைவருக்கும்,

புகைப்படங்களை எடுத்துதவிய புகைப்படப் பிடிப்பாளர் திரு.த.பாக்கியநாதன் மற்றும் மலரை சிறப்புடன் அச்சிட்டு உதவிய SS Digital's அச்சகத்தினருக்கும்,

# நவில்கின்றோம்.....

திருப்பணிக் குழு
பழைய மாணவர் சங்கம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சித்தி விநாயகர் ஆலய கும்பாபிஷேக திருப்பணிக்கு நிதிபங்களித்தோர் விபரம்

| தொ.இ | பெயர் | தொகை |
|---|---|---|
| 01 | திரு.ஜி.பாலமுரளி | 100,000.00 |
| 02 | வேதாகமமாமணி சிவஸ்ரீ சோ.இரவிச்சந்திரக் குருக்கள் | 60,000.00 |
| 03 | திரு.கு.ஹேமசாந்த் | 50,000.00 |
| 04 | திரு.எஸ்.சிறிஆனந்த் | 30,000.00 |
| 05 | திரு.பா.ஹரிசுதன் | 28,000.00 |
| 06 | வைத்தியர்.கே.சுபதீஸ் | 25,000.00 |
| 07 | திரு.எஸ்.முகந்தன் | 25,000.00 |
| 08 | திரு.எஸ்.ஜெயராஸ் | 25,000.00 |
| 09 | திரு.என்.ஜெகன்மோகன் | 25,000.00 |
| 10 | திரு.அ.அச்சுதன் | 25,000.00 |
| 11 | திரு.சோ.ராகுலன் | 25,000.00 |
| 12 | திரு.ம.ஜெய்சர் | 25,000.00 |
| 13 | திரு.எம்.ஜி.ஜெயகாந்த் | 25,000.00 |
| 14 | செல்வி.என்.நற்குனம் | 25,000.00 |
| 15 | திரு.பி.செந்தூரன் | 25,000.00 |
| 16 | திரு.பி.பகிஸ்வரன் | 25,000.00 |
| 17 | திரு.கு.பத்மநாதன் | 20,000.00 |
| 18 | திரு.எஸ்.சித்திரரஞ்சன் | 20,000.00 |
| 19 | திரு.எஸ்.லாவண்யன் | 20,000.00 |
| 20 | திரு.சீ.துவாரகன் | 20,000.00 |
| 21 | திரு.எஸ்.கஜேந்திரன் | 15,000.00 |
| 22 | திரு.த.கிருபராஜா | 15,000.00 |
| 23 | திரு.எஸ்.பிரஷாந்தன் | 15,000.00 |
| 24 | திரு.யோ.நிதுஷன் | 15,000.00 |
| 25 | திரு.எஸ்.பத்மசீலன் | 10,100.00 |
| 26 | திரு.இ.சரூஷன் | 10,100.00 |
| 27 | திரு.எஸ்.செந்தில்குமரன் | 10,000.00 |
| 28 | திரு.கே.மதிவதனன் | 10,000.00 |
| 29 | திரு.ஆர்.திருக்குமரநாதன் | 10,000.00 |
| 30 | திருமதி.எல்.சீ.திருக்குமரநாதன் | 10,000.00 |
| 31 | திரு.என்.ராஜநாதன் | 10,000.00 |
| 32 | திரு.எஸ்.கிருஸ்ணபிரகாஷ் | 10,000.00 |
| 33 | திரு.என்.சுப்ரமணியம் | 10,000.00 |
| 34 | திரு.ஏ.செல்லத்துரை | 10,000.00 |
| 35 | திரு.ஏ.தவராசா | 10,000.00 |
| 36 | திருமதி.பரமேஸ்வரன் | 10,000.00 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| 37 | திரு.இ.ஜெகதீஸ்வரன் | 10,000.00 |
| 38 | திரு.இலக்ஷேஸ்வரன் | 10,000.00 |
| 39 | திரு.ந.கருணைவேல் | 10,000.00 |
| 40 | திரு.த.சிவகுமார் | 10,000.00 |
| 41 | திரு.வி.வைகுந்தன் | 10,000.00 |
| 42 | திரு.என்.சங்கரதாஸ் | 10,000.00 |
| 43 | திரு.என்.ராஜேஸ்வரன் | 10,000.00 |
| 44 | செல்வி. மீரா ராமச்சந்திரன் | 10,000.00 |
| 45 | செல.வி.விஜயா சிவபுண்ணியம் | 10,000.00 |
| 46 | திருமதி.பி.சிவசங்கரன் | 10,000.00 |
| 47 | திரு.ச.தில்லைராசன் | 10,000.00 |
| 48 | திரு.சீ.பிரசாந் | 10,000.00 |
| 49 | திரு.எஸ்.யோகேஸ்வரராஜா | 10,000.00 |
| 50 | திரு.ரீ.உதயராஜன் | 10,000.00 |
| 51 | வைத்தியர்.ஜனகன் | 10,000.00 |
| 52 | திருமதி.வி.விஜேந்திரம் | 10,000.00 |
| 53 | திரு.என்.இரட்ணவடிவேல் | 10,000.00 |
| 54 | திரு.பீ.கௌரிதரன் | 10,000.00 |
| 55 | திரு.பி.யசோதரன் | 10,000.00 |
| 56 | திரு.சு.மோகனதாஸ் | 10,000.00 |
| 57 | திரு.ரீ.ஹரிதரன் | 10,000.00 |
| 58 | திரு.பா.மயூரன் | 7,600.00 |
| 59 | திரு.சோ.ரமணிதரன் | 7,600.00 |
| 60 | திரு.எஸ்.கே.விஜயநாதன் | 5,111.15 |
| 61 | வைத்தியர்.கே.லவக்குமார் | 5,000.00 |
| 62 | திருமதி.ஏ.சிவனருள் | 5,000.00 |
| 63 | எந்திரி.என்.ஜெகன்மோகன் | 5,000.00 |
| 64 | திருமதி.கே.ராதாகிருஸ்ணன் | 5,000.00 |
| 65 | திரு.என்.பாலசுந்தரம் | 5,000.00 |
| 66 | திரு.என்.பரமேஸ்வரன் | 5,000.00 |
| 67 | திரு.சிறிரங்கநாதன் | 5,000.00 |
| 68 | திரு.பீ.ஜனகன் | 5,000.00 |
| 69 | திரு.ஆர்.புவனேந்திரன் | 5,000.00 |
| 70 | திரு.எஸ்.தண்டாயுதபாணி | 5,000.00 |
| 71 | திரு.ரீ.பேரிம்பநாதன் | 5,000.00 |
| 72 | திரு.ஆர்.ரவீந்திரன் | 5,000.00 |
| 73 | திரு.ந.செகதீசன் | 5,000.00 |
| 74 | திரு.க.ரஜனிகாந் | 5,000.00 |
| 75 | திரு.பு.தவேஸ்கர் | 5,000.00 |
| 76 | திரு.ம.ராஜரட்ணம் | 5,000.00 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| 77 | திரு.ரவிச்சந்திரராஜா | 5,000.00 |
| 78 | திருமதி.எஸ்.மயூரதி | 5,000.00 |
| 79 | வைத்தியர்.நிதர்சன் | 5,000.00 |
| 80 | திரு.குணாலன் | 5,000.00 |
| 81 | எந்திரி.கிருசாந் | 5,000.00 |
| 82 | எந்திரி.செந்தூரன் | 5,000.00 |
| 83 | திரு.த.சுவர்னாஜீவ் | 5,000.00 |
| 84 | திரு.க.டிலக்சிதன் | 5,000.00 |
| 85 | திருமதி.கனகநாயகம் | 5,000.00 |
| 86 | திரு.டி.என்.வர்ணகுலேந்திரன் | 5,000.00 |
| 87 | திரு.எஸ்.சிறிதரன் | 5,000.00 |
| 88 | திரு.வீ.ராஜேந்திரன் | 5,000.00 |
| 89 | திரு.சசிதனராஜா | 5,000.00 |
| 90 | திரு.ஈழமயில் | 5,000.00 |
| 91 | திரு.ரீ.சிவசெந்தில்நாதன் | 5,000.00 |
| 92 | திரு.பி.சுந்தரராஜன் | 5,000.00 |
| 93 | திரு.ஜி.பாசுபதன் | 5,000.00 |
| 94 | திரு.சி.கஜபதி | 4,000.00 |
| 95 | திரு.எஸ்.பாரதிநாதன் | 3,000.00 |
| 96 | திரு.அ.செல்வேந்திரன் | 3,000.00 |
| 97 | திரு.சி.அன்பழகன் | 3,000.00 |
| 98 | திரு.ச.விக்னேஸ்வரன் | 3,000.00 |
| 99 | திரு.தி.துஷியந்தன் | 3,000.00 |
| 100 | திரு.பு.ஜெயந்தன் | 3,000.00 |
| 101 | திரு.பா.வசந்தகுமார் | 3,000.00 |
| 102 | திரு.சுதாகரன் | 3,000.00 |
| 103 | திரு.ஏ.சூரியகுமார் | 3,000.00 |
| 104 | திரு.பா.சுரேன்குமார் | 3,000.00 |
| 105 | திரு.கா.சுரேஸ் | 3,000.00 |
| 106 | திரு.சி.சிவசங்கர் | 3,000.00 |
| 107 | திரு.ஸ்ரீ சங்கர்ஸ்ரீ | 3,000.00 |
| 108 | திரு.சி.கஜேந்திரன் | 3,000.00 |
| 109 | திரு.த.ஜீவராஜ் | 3,000.00 |
| 110 | திரு.என்.ரகுமோகன் | 3,000.00 |
| 111 | திரு.என்.சுரேஸ்குமார் | 3,000.00 |
| 112 | திரு.எம்.முருகதாசன் | 3,000.00 |
| 113 | அசோக்கா பேக்கவுஸ் | 2,550.00 |
| 114 | திரு.சி.கலைவேந்தன் | 2,500.00 |
| 115 | திரு.க.ஜெகநாதன் | 2,000.00 |
| 116 | திரு.ஆர்.புவனேஸ்வரன் | 2,000.00 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| 117 | திரு.எம்.நிரோசன் | 2,000.00 |
| 118 | திரு.கே.வசந்தகுமார் | 2,000.00 |
| 119 | திருமதி.கே.சுபந்தினி | 2,000.00 |
| 120 | திருமதி.யு.மதிவதனி | 1,500.00 |
| 121 | திருமதி.ரீ.ஆனந்தன் | 1,000.00 |
| 122 | திரு.கே.சுவலிங்கம் | 1,000.00 |
| 123 | திரு.மெய்யழகன் | 1,000.00 |
| 124 | திரு.தனுஷாந் | 1,000.00 |
| 125 | திரு.எல்.ராஜராஜன் | 1,000.00 |
| 126 | திரு.எஸ்.ஜெயசீலன் | 1,000.00 |
| 127 | திரு.ஜெ.சுவெந்திரன் | 1,000.00 |

**சித்தி விநாயகர் ஆலய கும்பாபிஷேக திருப்பணிக்கு நிதியங்களிப்பு அளித்த அனைத்து அன்பர்களுக்கும் நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றோம்.**

- கும்பாபிஷேக திருப்பணிக்குழு-

**திருக்கோணமலை இ.கி.ச ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக்கல்லூரி அருள்மிகு சித்தி விநாயகர் ஆலய புனராவர்த்தன பிரதிஸ்டா மஹா கும்பாபிஷேகம்**

02.12.2021 தொடக்கம் 11.12.2021 வரை மண்டலாபிஷேகம்

**உபயகாரர் விபரம்**

| திகதி | கிழமை | பெயர் |
|---|---|---|
| 01.12.2021 | புதன் | திரு.ஆர்.புவனேந்திரன் குடும்பம் |
| 02.12.2021 | வியாழன் | தி.சுதாகரன் குடும்பம் |
| 03.12.2021 | வெள்ளி | சட்டதரணி புலேந்திரன் குடும்பம் |
| 04.12.2021 | சனி | திரு.ஏ.ஜெகதீசன், திருமதி.வா.விஜயராஜேந்திரன் |
| 05.12.2021 | ஞாயிறு | பத்மநாதன் குடும்பம் |
| 06.12.2021 | திங்கள் | எஸ்.சர்வேஸ் குடும்பம் |
| 07.12.2021 | செவ்வாய் | திரு.எஸ்.பார்த்தீபன் |
| 08.12.2021 | புதன் | கலை வர்த்தகப்பிரிவு |
| 09.12.2021 | வியாழன் | ம.சண்முகதாஸ் குடும்பம் |
| 10.12.2021 | வெள்ளி | கல்விசாரா ஊழியர்கள் |
| 11.12.2021 | சனி | செல்வரெட்ணம் குடும்பம் |
| 12.12.2021 | ஞாயிறு | குகதாஸ், பிரகாஸ் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சித்தி விநாயகர் ஆலய கும்பாபிஷேகம், சங்காபிஷேகம்
சிறப்புற வாழ்த்துகிறோம்

# MAHALAKSHMI STORES

மஹாலக்ஷ்மி ஸ்டோர்ஸ் මහාලක්ෂ්මි ස්ටෝර්ස්




No: 192, 194, Main Street, Trincomalee.
Tel 026 2060044

சித்தி விநாயகர் ஆலய கும்பாபிஷேகம், சங்காபிஷேகம்
சிறப்புற வாழ்த்துகிறோம்

# ATLAS ENTERPRISES

அட்லஸ் என்ரபிறைஸஸ்

ඇට්ලස් එන්ටප්‍රයිසස්



**General Hardware, Merchants and Suppliers**

NO. 80, Sea View Road, Trincomalee
Tel No: 0262224431 Mob: 0752591529

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சித்தி விநாயகர் ஆலய கும்பாபிஷேகம், சங்காபிஷேகம்
சிறப்புற வாழ்த்துகிறோம்

# KRISHNA CYCLE STORES

266, Court Road, Trinicomalee,



TP : 026-2222212

சித்தி விநாயகர் ஆலய கும்பாபிஷேகம், சங்காபிஷேகம்
சிறப்புற வாழ்த்துகிறோம்

# KUMAR'S CREAM HOUSE

102/2A. POST OFFICE ROAD TRINCOMALEE

**உங்கள் தேவை எங்கள் சேவை**

எமது வாடிக்கையாளர்களின் தற்கால சூழ்நிலையின் தேவை கருதி, எமது ஸ்தாபனமானது ஒரு புதிய சேவையை ஆரம்பித்துள்ளது.

உலகின் எந்த நாட்டில் இருந்தும் கீழக்குறிப்பிட்டுள்ள பணப்பரிவர்த்தனை நிலையங்கள் ஊடாக உங்களுக்கு அனுப்பப்படும் பணத்தினை மிகத் துரிதமாக வாரத்தின் ஏழு நாட்களிலும் பெற்றுக்கொள்ள முடியும்.

WesternUnion WU

ria Money Transfer

MoneyGram.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சித்தி விநாயகர் ஆலய கும்பாபிஷேகம், சங்காபிஷேகம்
சிறப்புற வாழ்த்துகிறோம்

கோணேஸ்வரர் துணை

# கண்ணா ஸ்டோர்ஸ்

## HARDWARE

Distributors: Rhino Roofing Sheets, Asian Paint Colour World, Power Tools, Plywood, MDF Boards, M.s Bar, Tor Steel, S.Lon P.v.c, GI pipe, Amona Sheet, Plywood Door, P.v.c. Door, Solex Water Pump & Etc.

166/1, Main Street, Trincomalee.


Phone: 026-2222401, 026-2222800 Fax : 026-2227063

---

சித்தி விநாயகர் ஆலய கும்பாபிஷேகம், சங்காபிஷேகம்
சிறப்புற வாழ்த்துகிறோம்

# East Link Communication

189-A, Thirugnanasampanthar Street, Trincomalee.



Tel: 2221417 Fax: 2222704 Email: webeastlink@gmail.com

BOOKS & STATIONERIES INTERNET & E-MAIL

FAX, PHOTOCOPY, LAMINATING, BINDING, COMPUTER TYPESETTING WHOLESALE & RETAIL DEALERS IN FANCY GOODS.

Branch:
VISHNU BOOK SHOP
64, Vidyalayam Road, Trincomalee.
Telephone : 2222851, 2223714 E-mail: webeastlink@gmail.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சித்தி விநாயகர் ஆலய கும்பாபிஷேகம், சங்காபிஷேகம்
சிறப்புற வாழ்த்துகிறோம்



NEW VINAYAHA

# SUPER MARKET




No. 160, Thirugnanasampanthar Street, Trincomalee.

0776 553 942

சித்தி விநாயகர் ஆலய கும்பாபிஷேகம், சங்காபிஷேகம்
சிறப்புற வாழ்த்துகிறோம்

# J7 VILLAJ Resort



**Our facilities**

-Free WIFI
-Rooms with modern amenities
-Restaurant (Buffet & Ala carte)
-Hall for conference & Function
-Outdoor garden -Swimming pool
-Free parking

**Services**

-24 hrs room service
-Catering,Take away
Transport - Paid (Pick up & Drop)
-Excursions
-Guide tours/City tours
-Honey moon rooms

81/9 Alles garden, Uppuveli, Trincomale
Hot line: 0262228005/ 0262223072
Mobile: 0777890915/ 0707011111

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சித்தி விநாயகர் ஆலய கும்பாபிஷேகம், சங்காபிஷேகம்
சிறப்புற வாழ்த்துகிறோம்

# SPRAY PAINT HOUSE



Authorised Dealers: Sunny Paint Auto Lacguer and

Debeer Paint Computer (Mixing) Lucguer

Emulsion Paint, Kenlux paint

026-2221763

No. 280, Main Street,
Trincomalee.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சித்தி விநாயகர் ஆலய கும்பாபிஷேகம், சங்காபிஷேகம்
சிறப்புற வாழ்த்துகிறோம்

# JAI HANUMAN
## ENTERPRICES

(Suppliers of Electrical & Plumbing Goods)

Tel: 0776708801


Email : mdeneshkanna@yahoo.com

No.368,
T.G.Sampanthar Street,
Trincomalee.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சித்தி விநாயகர் ஆலய கும்பாபிஷேகம், சங்காபிஷேகம்
சிறப்புற வாழ்த்துகிறோம்

# RAJAH BAKE HOUSE



**Suppliers and Manufactures of**
All bakery items
Short eats & sweet items
Better & fried rice
Hot & cool drinks
Hot & Cool Drinks
Dine-in & Take away & Event supplies.



**Address**
134, sea view Road, Trincomolee

**Branches**
Court Road, Anradopura junction.

Tel. No:- 0262058568
Email:-rajahbakehouse@gmail.com


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


சித்தி விநாயகர் ஆலய கும்பாபிஷேகம், சங்காபிஷேகம்
சிறப்புற வாழ்த்துகிறோம்

# MALLIKA STORES

## மல்லிகா ஸ்டோர்ஸ் මල්ලිකා ස්ටෝර්ස්

## GENERAL MERCHANT






312, Court road, Trincomalee.


Tel: 026-2220181


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


சித்தி விநாயகர் ஆலய கும்பாபிஷேகம், சங்காபிஷேகம்
சிறப்புற வாழ்த்துகிறோம்

# Jewel Lanka

*Dealers in Guaranteed Gold Jewellery*





Tel : 028 2222298
Fax: 026 2221179

105,N.C. Road, Trincomalee, Sri Lanka.
E.mail: jewellanka_trinco@yahoo.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# SS DIGITAL'S

PRINTERS FOR ALL REQUIREMENTS

SS DIGITAL'S
PRINTERS FOR ALL REQUIREMENTS

தேவைக்கேற்ப விரைவான சேவை அத்துடன் நியாயமான விலையில்

## ஒப் செட் பிரின்டிங்

மற்றும் அனைத்து பிரின்டிங் வேலைகளும்

அனைத்து விதமான
அழைப்பிதழ்கள்

பில், பற்றுச்சீட்டு புத்தகங்கள்
பிளாஸ்டிக் அடையாள அட்டைகள்



புத்தக அச்சு வேலைகள்
பாடசாலை அறிக்கைகள்

## அச்சுத் தேவைக்கான தீர்வு

பனர் அச்சிடல்
புத்தகங்கள் அச்சிடல்
நாட்காட்டி அச்சிடல்
துண்டு பிரசுரம் அச்சிடல்
சுவரொட்டிகள் அச்சிடல்
பைன்டிங் வேலைகள்

வினாத்தாள்கள்
பாடக்குறிப்புக்கள்
சான்றிதழ்கள்
சுவரொட்டிகள்

கலர் லேசர் பிரின்டிங்
கலர் போட்டோ கொப்பி
டைப் செட்டிங்
கிரபிக் டிசைனிங்



**NO.40, THIRUGNANASAMPANTHAR STREET, TRINCOMALEE.**
**026 222 4933 | 0777 695 636 | 077 2426 332**

ssdigitals.shan@gmail.com



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Printed By: SS Digital's - 0777 695 636